Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :88 மாசி 13ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 25 பெப்ரவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051




# கோத்தாபய அரசு கவிழ்வது நிச்சயம்

## அடித்துக் கூறுகின்றது ஐ.தே.க.

கொழும்பு, பெப்ரவரி 25

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசிடம் முறையான செயற்திட்டம் இன்மையால் அவர்களால் தொடர்ந்து பயணிக்க முடியாது. இந்த அரசை நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி கொள்வது இலகுவான காரியமாகும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

23

## 'மொட்டு' மலராது 'வீடு'தான் உயரும்

### ஒப்புக்கொள்கின்றது பொதுஜன பெரமுன

கொழும்பு, பெப்.25

தமிழ் மக்களின் புகலிடமான வடக்கு, கிழக்கில் எந்தத் தேர்தல் நடைபெற்றாலும் அங்கு இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைதான் ஓங்கி நிற்கும். நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக ஆசனங்களைக் கைப்பற்றும் என்பதை எவரும் மறுக்க முடியாது.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மூத்த ஆலோசகரும், தவிசாளருமான பேராசியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்

04

## கோத்தா அரசு கோமாளி அல்ல

### சர்வதேசத்திடம் அடிபணியாது என்கின்றார் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு, பெப்.25

இலங்கைக்கு எதிரான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களிலிருந்து வெளியேறுவது என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ தலைமையிலான அரசு எடுத்துள்ள முடிவில் எவ்வித மாற்றமும் இல்லை. ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடம் அடிபணிந்து போவதற்கு கோத்தாபய அரசு கோமாளியல்ல.

23

## "வீட்டில் இடம் தாருங்கள்"

### கெஞ்சுகிறார் முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன்

யாழ்ப்பாணம், பெப்.25

வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட வாய்ப்பளிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளு

04

## "உ சாரையா உ சாரு"

### விதானையாருக்கு வலைவிரிப்பு விழிப்புடன் இருந்ததால் தப்பிப்பு

யாழ்ப்பாணம், பெப்.25

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரங்களில் கைபேசி ஊடாக மோசடிகள் மேற்கொள்ளப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் அச்சுவேலியைச் சேர்ந்த கிராம அலுவலர் ஒருவரிடமும் அவ்வாறான மோசடி முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிராம அலுவலர் விழிப்புடன் இருந்ததால் அந்த மோசடி முயற்சி பிசுபிசுத்துள்ளது.

அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த கிராம அலுவலர் ஒருவரின் கைபேசிக்கு அழைப்பை எடுத்த மர்ம நபர் தன்னைப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டுள்ளார்.

"அச்சுவேலியைச் சேர்ந்த ஒருவரைக்

23



## மரக்கறிக்கு மத்தியில் மறைந்திருந்த கஞ்சா!

### புன்னாலைக்கட்டுவனில் ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், பெப்.25

கஞ்சா கடத்த முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், அவரிடம் இருந்து 6 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு சங்

23

### இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டு

## காணாமல் ஆக்கப்பட்டோரின் ஆள்கொணர்வு வழக்கு ஏப். 29

கொழும்பு, பெப்.25

இறுதிப் போரில் முல்லைத்தீவு வட்டுவாகலில் இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஆள்கொணர்வு மனு மீதான விசாரணை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

2009ஆம்ஆண்டுமேமாதம் இறுதிப் போரில்

23

## விடுதியை சுற்றிவளைத்து இராணுவம் திடீர் சல்லடை

### மருதனார்மடத்தில் நேற்றிரவு பரபரப்பு

யாழ்ப்பாணம், பெப்.25

சுன்னாகம், மருதனார்மடத்தில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றை இராணுவத்தினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியதால் நேற்றிரவு அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்றிரவு சுமார் 7 மணியளவில் காங்கேசன்துறை வீதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்று இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டது. பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டால் அந்தப் பகுதியில் பெரும் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

விடுதிக்குள் நுழைந்த இராணுவத்தினர் அங்கு சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். யாழ்ப்பாணத்தில் வன்முறைகளில் ஈடுபடும் குழுவைச் சேர்ந்த சிலர்

04

### வவுனியா விபத்தில்

## இறந்தோரில் 4 பேர் ஒரே குடும்பத்தினர்!

வவுனியா, பெப்.25

வவுனியா, புளியங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்றிக்கெய்தகுளத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும், வாகனத்தின் சாரதியுமாக 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும், சொகுசுக் கார் ஒன்றுமே விபத்துக்குள்ளாகின. விபத்தை அடுத்து அந்தப் பகுதியில் கூடிய

05

## கூட்டத்துக்கு அழைப்பில்லை தவிசாளர்கள் குற்றச்சாட்டு!

சங்கானை, பெப்.25

வலிமேற்கு, வலி.தென்மேற்கு, காரைநகர் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கூட்டத்துக்கு தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என அந்தப் பகுதிக்குள் உள்ளடங்கும் மூன்று பிர

04

## வடக்கில் 1,650 பேருக்கு ஆசிரிய நியமனங்கள்

### பின்தங்கிய பிரதேசங்களிலேயே பணி

யாழ்ப்பாணம், பெப்.25

பட்டதாரிகளுக்கான நியமனம் எதிர்வரும் முதலாம் திகதி வழங்கப்படவுள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 650 பேருக்குப் பின்தங்கிய பிரதே

04

# எழுவைதீவுக்கு அபகீர்த்தி: ஆளுநருக்கு மக்கள் மனு!

யாழ்ப்பாணம், பெப்.25

'உண்மைக்குப் புறம்பான தகவலை வெளியிட்டு தமது பிரதேசத்துக்கும், மக்களுக்கும் அபகீர்த்தியை உண்டுபண்ணிய உள்ளூர்ப் பத்திரிகை தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி, எழுவைதீவு மக்களால் வடக்கு மாகாண ஆளுநருக்கு மகஜர் ஒன்று நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது.

எழுவைதீவு மணிவாசகர் சனசமூக நிலையம் ,எழுவைதீவு சைவபரிபாலனசபை ,எழுவைதீவு கிராமஅபிவிருத்திச் சங்கம், எழுவைதீவு புனித தோமையார் கடற்றொழிலாளர் கூட்டு றவுச்சங்கம், எழுவைதீவு மாதர்கிராம அபிவிருத்திச் சங்கம், எழுவைதீவு கிராமசக்தி மக்கள் சங்கம்ஆகிய அமைப்புகளே கூட்டாக மேற்படி மனுவைக் கையளித்துள்ளன.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் குறித்த உள்ளூர்ப்பத்திரிகையில்,உண்மைக்கு மாறான செய்தி ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. இதனை அறிந்த எழுவைதீவைச் சேர்ந்த இரு மதம் சார்ந்த பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் குறித்த ஊடக நிறுவனத்துக்குச் சென்று இந்தச் செய்தி குறித்து வினவிய போது, இரு ஊடகவியலாளர் எம்முடன் உரையாடிக் கொண்டிருந்தனர். அவ்வேளை திடீரென அங்கு வந்த குறித்த உள்ளூர் ஊடகத்தின் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் ஒருவர் எம்மைத்தகாத வார்த்தைகளால் பேசி அச்சுறுத்தியதுடன் எம்மைத் தாக்க முற்பட்டார்.

அதனைத் தொடர்ந்து எமது மக்களுக்கும் அவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து பொலிஸ் அதிகாரிகளும் வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகச் செயலரும் அந்த இடத்துக்கு வந்து எமது மக்களையும் குறித்த ஊடகத்தினரையும் அழைத்து கலந்துரையாடினர். குறித்த செய்தியை மறுப்புச் செய்தியாக வெளியிடுமாறு குறித்த ஊடகத்திடம் கூறிய போதும் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனையடுத்து தம்மைத்தாக்க வந்ததாக குறித்த ஊடகத்தினர் கூறிய போது நாம் 'சி.சி.ரி காணொளியைப் பார்வையிடுமாறு வலியுறுத்தினோம். அதனைத் தொடர்ந்து இருதரப்பினரையும் தத்தமது பொலிஸ் பிரிவுக்கு ட்பட்ட பொலிஸ் நிலையங்க ளில் முறைப்பாட்டைப் பதிவு செய்யுமாறு பொலிஸார் கூறினர். ஆனால் குறித்த ஊடகத்தில் கடந்த 21.02.2020 இல் வெளியான செய்தியில், நடந்த சம்பவத்தை மூடி மறைத்து உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டுள்ளனர். தொடர்ந்து 22.02 .2020 இல் குறித்த ஊடகத்தில் வெளியான கண்டன அறிக்கைகள் எழுவைதீவு மக்களாகிய எம்மை மனவேதனைக்கு உட்படுத்தியுள்ளது. ஆகவே அன்பார்ந்த உலக வாழ் தமிழ்மக்களே எழுவைதீவு எனும் சிறிய கிராமத்தில் மதவேற்றுமை உள்ளதா என்பதனை அறிந்து கொள்வதற்கு இலங்கையில் உள்ள அனைத்து ஊடகங்களும் அரசியல்வாதிகளும் அனைத்து மதத் தலைவர்களும் அரச அதிகாரிகளும் எமது கிராமத்துக்கு வருகை தந்து இரு மதம் சார்ந்த மக்களையும் நேரில் வந்து கலந்துரையாடினால் உண்மைத்தன்மை தெரியவரும். எமது நாட்டு தமிழ் மக்களின் ஒற்றுமையை மத ரீதியாக பிளவுபடுத்த முயலும் சக்திகளுக்கு இடமளித்து பிரிவினை யைத் தூண்ட வேண்டாமென மிகவும் வினயமாக வேண்டி நிற்கிறோம்,என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவில் எழுவைதீவில் வசிக்கும்282பேர்கையொப்பமிட்டுள்ளனர் என்பதும்குறிப்பிடத்தக்கது. (ந)

## நேர்முகத்தேர்வு

யாழ்ப்பாணம்,பெப்.25

ஒரு லட்சம் தொழில் வாய்ப்பு வழங்கும் செயற்றிட்டத்துக்கு விண்ணப்பங்களை சமர்ப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை, நாளை மறுதினம், எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறும்.

நேர்முகத் தேர்வுக்குப் பங்குபற்ற வேண்டிய திகதி, நேரம் மற்றும் நேர்முகத் தேர்வுக்குச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் தொடர்பான கடிதங்கள் உரிய கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரிய கிராம அலுவலர்களுடன் விண்ணப்பதாரிகள் உடனடியாகத் தொடர்பு கொண்டு நேர்முகத் தேர்வுக்குரிய கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் அறிவித்துள்ளார். மேலதிக விபரங்களுக்கு அலுவலக தொலைபேசி இலக்கம் 0212263258 க்குத் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், பெப்.25

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவுச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற்றது. தலைவராக ந.சண்முகவேல், உப தலைவராக அ.ஸ்ரீதரன், செயலாளராக ப.மகேந்திரதாசன், உபசெயலாளராக ந.சுப்பிரமணியம், பொருளாளராக பொ.கமலநாதன் , கணக்காளராக செ.ஆனந்தகுமாரதாஸ் ஆகியோரும் மேலும் நிர்வாக சபை உறுப்பினர்களாக பொ.நடேசன் வை.சிவநாதன் ஆகிய இருவரும் தெரிவு செய்யப்பட்டனர் என நிதியத்தின் செயலாளர் மகேந்திரதாசன் அறிவித்துள்ளார். (ந)

## 12 முன்பள்ளிகளை சீரமைக்க முடிவு

மூளாய்,பெப்.25

வலிகாமம் மேற்கில் உள்ள முன்பள்ளிகளை சீரமைப்பு செய்வதற்கு உலக வங்கி நிதி உதவி வழங்கியுள்ளது.

குறித்த பகுதியில் முன்பள்ளிகள் பல சேதமடைந்து அடிப்படை வசதிகள் இல்லாத நிலையிலும் இயங்கி வருகின்றன. இந்த நிலமையை அவதானித்த உலக வங்கி அதிகாரிகள் இவற்றை சீரமைப்பு செய்ய நிதி வழங்க முன்வந்துள்ளனர்.

மிகமோசமாக சேதமடைந்த நிலையில் காணப்பட்ட பன்னிரண்டு முன்பள்ளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவை சீரமைக்கப்படவுள்ளன.

இதன் அடிப்படையில் அராலியில் மலரும் மலர்கள் முன்பள்ளி , சமாதானக்கோட்டை முன்பள்ளி , சரஸ்வதி முன்பள்ளி , அம்பாள் முன்பள்ளி ஆகியனவும் வட்டுக்கோட்டையில் அம்பாள் முன்பள்ளியும், தொல்புரத்தில் கலைவாணி முன்பள்ளியும், பொன்னாலையில் பாபுஜி முன்பள்ளியும், சுழிபுரத்தில் சிறிராம் முன்பள்ளி , திருநாவுக்கரசு முன்பள்ளி ஆகியனவும் சித்தன்கேணி யில் பாலர்பாடசாலை முன்பள்ளியும், சங்கானையில் உருத்திரா முன்பள்ளி , கண்ணன் முன்பள்ளி ஆகியனவும் இவ்வாறு சீரமைக்கப்படவுள்ளன. (ஐ-121)

## ஆசிரியர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், பெப்.25

யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் இந்து சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயமலர்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் 4.30 மணி வரை யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும். செயமலர்வில் தரம் 10ஆம், 11ஆம் வகுப்புகளுக்குரிய வினா ப்பத்திரங்கள் தயாரிக்கப்படவுள்ளன. இந்த வகுப்புகளுக்குரிய பாட நூல்களையும், ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டிகளையும், தரம் 7முதல் 13 வரை கல்வி பயிலும் இந்து மாணவர்களின் விவரங்களையும், க.பொ .த. சாதாரண கடந்த கால 2014 ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரையிலான பெறுபேற்றுத் தரவுகளையும் உரிய ஆசிரியர்கள் கொண்டு வர வேண்டும் என்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (க-69)

## தற்கொலைக்கு எதிராக போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 25

அதிகரித்து வரும் தற்கொலைகளைக் கண்டித்து 'தற்கொலை ஓர் தீர்வா?' எனும் தொனிப்பொருளில் மாபெரும் விழிப்பு ணர்வுப் போராட்டம் இன்று நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை பஸ் நிலையம் முன்பாக இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது. (ம)

## கச்சதீவு திருவிழாவுக்கு வடதாரகை செல்லாது

யாழ்ப்பாணம்,பெப்.25

கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்கான படகுச் சேவையில், இம்முறை வடதாரகை சேவையில் ஈடுபடாது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி கச்சதீவு அந்தோனியார் பெருவிழா நடைபெறவுள்ளது. . இதற்கான ஏற்பாடுகள் பல தரப்புகளை ஒன்றிணைத்து முன்னெடுக்கப்பட்டு ள்ளன. இந்த நிலையில் 100 பயணிகளை ஒரே தடவையில் ஏற்றிச் செல்லும் வடதாரகை இம்முறை கச்சதீவுப் பயணத்தில் சேவையில் ஈடுபடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட தாரகையின் பராமரிப்புக்கு சுமார் 35 மில்லியன் தேவைப்படுகிறது. இது தொடர்பில் உரியவர்களுக்கு முன் மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்ட போதும், அதற்கான ஒப்புதல் மற்றும் நிதி கிடைக்கவில்லை. அதனால் நீண்ட தூரம் செல்லும் கச்சதீவு அந்தோனியார் திருவிழாவுக்கான சேவையை வடதாரகை மேற்கொள்ளாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## பகிடிவதை விவகாரம்: பன்னிரு மாணவர்கள் மீது குற்றப் பத்திரிகை

யாழ்ப்பாணம், பெப்.25

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கிளிநொச்சி வளாகத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் பகிடிவதை தொடர்பாக 12 மாணவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டு முறையான விசாரணை நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் வகையில் பல்கலைக் கழகப் பதிவாளரால் நேற்று அனுப்பப்பட்டிருந்த அறிக்கையிலே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த் விடயம் தொடர்பாக முறையான விசாரணை ஒன்று நிறைவடைந்து இந்தப் பல்கலைக் கழகத்துக்குரிய ஒழுக்காற்று முகாமையினுள் உள்வாங்கப்பட்ட விதிகளுக்கு அமைவாகக் குற்றமிழைத்திருப்பின் அம்மாணவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக பல்லைக் கழகம் சட்ட நடவடிக்கை எடுக்கும் என்றும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(எ)

# கூட்டமைப்பு, மு.காவுடன் இணைந்து போட்டியிடோம்

## ஜே.வி.பி. அறிவிப்பு




**கொழும்பு, பெப். 25**

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றுடன் கூட்டணி அமைத்து பொதுத்தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் எவ்வித பேச்சும் நடத்தப்படவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.**

**அத்துடன், பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தி ஊடாகவே ஜே.வி.பி போட்டியிடும் என்றும் அந்தக் கட்சியால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி உட்பட எமது கொள்கையுடன் இணங்கக்கூடிய சிவில் அமைப்புகளையும் இணைத்துக்கொண்டு, பரந்துபட்ட கூட்டணியை அமைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கான ஆரம்பக்கட்ட பேச்சுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனவே, வெகுவிரைவில் பலமான சக்தியாக வருவோம்' என்று கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கருத்து வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் ஜே.வி.பியால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில், 'மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிவில் அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து பொதுத்தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் பரீசிலித்துவருகின்றது. இதற்கான பேச்சும் நடத்தப்பட்டுவருகின்றது என்று ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார். இந்த தகவலில் எவ்வித உண்மையும் இல்லை. அது ரவூப் ஹக்கீமின் தனிப்பட்ட கருத்தாகும்.

கூட்டணி அமைத்து போட்டியிடுவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுடன் எவ்வித பேச்சுகளையும் ஜே.வி.பி. நடத்தவில்லை. அக்கட்சிகளுடன் கூட்டணி அமைக்கும் நோக்கமும் எமது கட்சிக்கு இல்லை. தேசிய மக்கள் சக்தியின் கீழ்தான் பொதுத்தேர்தலில் ஜே.வி.பி. போட்டியிடும்' - என்றுள்ளது. (ம-44)

# பல வருடங்களாக கவனிப்பாரற்ற வீதிகள்

கொடிகாமம்,பெப்.25

வரணியில் பல வருடங்களாக இரண்டு பிரதான வீதிகள் புனரமைப்பின்றி, கவனிப்பாரின்றிக் காணப்படுகிறது.

வரணி வடக்கு வாழைத்தோட்ட சந்தியிலிருந்து மார்சேரி குருநாதர் கோவில் வரையான பிரதான வீதி, கடந்த 50 வருடங்களுக்கு மேலாகப் புனரமைப்புச் செய்யப்படவில்லை.

போர்க்காலத்தில் பாதுகாப்பு வேலி போடப்பட்டு மூடப்பட்டிருந்த வீதி, மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்ட பின்னரும், கவனிப்பாரற்றுள்ளது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை கொடிகாமம் வடக்கு வரணி இயற்றாலை ஊரெல்லை வீதி கடந்த 75 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படவில்லை.

மந்துவில், தாவளை, இயற்றாலை ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் கொடிகாமம் நகரப் பகுதிக்குச் செல்வதற்கு மிகவும் கிட்டிய பாதையாக இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த இரண்டு வீதிகளின் நிலைமை தொடர்பாக, பல்வேறு தரப்பினரிடம் அறிவித்தும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளரிடம் தொடர்பு கொண்ட போது, கடந்த வருடத்தில் இருந்து கிடைத்த நிதிக்கு ஏற்ப பல வீதிகள் புனரமைக்கப்பட்டன. இந்த வருடம் நிதி கிடைக்கும் பட்சத்தில் இனங்காணப்பட்ட மிகவும் முக்கியமான வீதிகள் முன்னுரிமைப்படுத்தி புனரமைக்கப்படும். என்றார். (க-159)

# இலவச சுவாசநோய் சிகிச்சை

ஆனைக்கோட்டை, பெப்.25

சுவாசநோய் தொடர்பான ஆலோசனையும், சிகிச்சையும் வைத்திய நிபுணர் க.பார்த்தீபன், ஆனைக்கோட்டை கூழாவடியில் அமைந்துள்ள அபயம் மருத்துவ சேவை நிலையத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை இலவசமாக வழங்கவுள்ளார்.

குறித்த இலவச மருத்துவ சேவையைப் பெற விரும்புவோர் முற்பதிவினை மேற்கொள்ளுமாறும், மேலதிக தகவல்களைப் பெற 0212256005 எனும் இலக்கத்தோடு தொடர்பு கொள்ளுமாறும் அபயம் மருத்துவ சேவை நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (அ-ரி-1)





# புனித இராஜப்பர் தேவாலயத்தில் சீரமைப்பின் பின் சிறப்பு வழிபாடு

முல்லைத்தீவு,பெப்.25

முல்லைத்தீவு விசுவமடு மாணிக்கபுரம் புனித இராஜப்பர் தேவாலயம் சீரமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்பு பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர்களாக ரிஷாட் பதீயுதினால் 4 இலட்சம் ரூபாவும், சாள்ஸ் நிர்மலநாதனால் 5 இலட்சம் ரூபாவும், சாந்தி சிறீஸ்கந்தராசாவால் 3 இலட்சம் ரூபாவுமாக மொத்தம் 12 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த ஆலயம் சீரமைக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ்ப்பாண ஆயர் அருட்கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீனின் செயலாளர் மவுஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு பூசைகள் வழிபாடுகளை தொடர்ந்து யாழ்ப்பாண ஆயரிடம் 58 மாணவர்கள் உறுதி பூசை அருட்சாதனம் பெற்றுக்கொண்டனர். (ஜ-19)

# வழங்கப்பட்டன நியமனக் கடிதங்கள்

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 45 வரையிலான பதில் உப தபாலதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் வழங்கப்பட்ட இந்த நிரந்தர நியமனத்துக்கான கடிதங்களை அரசு கடந்த 19ஆம் திகதி வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு அலரி மாளிகை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. உயர்கல்வி மற்றும் தகவல் தொடர்பு அமைச்சர் பந்துல குணவர்த்தன நியமனக் கடிதங்களை வழங்கினார்.

இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபயவர்த்தனவும் இதில் கலந்துகொண்டிருந்தார்.

நிகழ்வில் முதலாம் தர தபாலதிபர்களாக பதவியுயர்த்தப்பட்டவர்களுக்கும் அதற்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (து-17)

# மழை காரணமாக வெங்காயம் அழிவு



யாழ்ப்பாணம்,பெப்.25

யாழ்.குடாநாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை திடீரென கொட்டி தீர்த்த மழை காரணமாக அறுவடை செய்யப்பட்ட வெங்காயங்கள் மழையில் நனைந்து பாதிக்கப்பட்டன.

வலி.கிழக்கு பிரதேசத்தில் பரவலாக அறுவடை செய்யப்பட்டு தோட்டங்களில் உலர விடப்பட்ட சின்ன வெங்காயங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டன.

சின்ன வெங்காயத்தின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறு அறுவடை செய்யப்பட்டு காய வைக்கப்பட்ட வெங்காயங்கள் மழையில் நனைந்தமையால் அவற்றின் விலை மேலும் அதிகரிக்கலாம் என்று செய்கையாளர்கள் தெரிவித்தனர். (ஜ-17)

# ரணில் - சம்பந்தன் அணியை கூண்டோடு தூக்கிலிடுங்கள்

## ஞானசாரர் விபரீதக் கோரிக்கை

கொழும்பு, பெப்.25

மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்கி நாட்டைக் கொடுத்த ரணில் தலைமையிலான அணியையும், அந்த அணியின் பங்காளியாகச் செயற்பட்ட சம்பந்தன் தலைமையிலான அணியையும் அரசு தூக்கிலிட வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய தேசியக் கட்சியினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் இணைந்து இந்த நாட்டை சர்வதேசத்திடம் அடகு வைத்துவிட்டார்கள். இந்த வரலாற்றுத் துரோகத்தை இழைத்த ரணில், சம்பந்தன் அணிகளை சும்மாவிடக்கூடாது. அவர்களுக்கு அதியுச்ச தண்டனை வழங்க வேண்டும். அந்தத் தண்டனை தூக்குத் தண்டனையாகவே இருக்க வேண்டும்.

இது பௌத்த சிங்கள நாடு. ராஜபக்சக்கள் தலைமையிலான அரசே இந்த நாட்டை ஆட்சி செய்கின்றது. எனவே, ஐ.நா. மனித உரிமைகள் சபையோ அல்லது வெளிநாடுகளே அல்லது சர்வதேச அமைப்புக்களோ இலங்கை விவகாரம் தொடர்பில் ராஜபக்ச அரசுடன் பேசித்தான் எதையும் செய்ய முடியும். ராஜபக்ச அரசு செய்ய முடியாது என்று கூறுவதை சர்வதேசம் வலுக்கட்டாயமாகத் திணிக்க முடியாது.

ரணில் அரசின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானங்களிலிருந்து ராஜபக்ச அரசு விலகி, னால் அந்தத் தீர்மானங்களை ஐ.நா. உடனடியாகவே மீளப் பெற வேண்டும்-என்றார். (எ-22)

# விஷமிகளின் பஸ் எரிப்பால் நாசமான மடிக்கணினிகள்

வவுனியா, பன்றிக்கெய்த குளத்தில் நேற்றுமுன்தினம் நடந்த விபத்தை அடுத்து விபத்தில் சிக்கிய பஸ் தீயிட்டு எரிக்கப்பட்டிருந்தது. அதில் பயணிகளின் உடமைகளும் எரிந்து நாசமாகியுள்ளன. அந்தப் பேருந்தில் பயணித்த யாழ்ப்பாணம் பல்கலைக் கழகக் கிளிநொச்சிப் பீட மாணவர்களின் ஏழு பேரின் மடிக்கணினிகளும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தப் பேருந்தில் கிளிநொச்சி வளாக மாணவர்கள் 10 பேர் பயணித்திருந்தனர். அவர்களில் 3 பேர் விபத்தில் காயமடைந்தனர். விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் முயற்சியில் இருந்தவர்கள் பயணிகளின் உடமைகள் தொடர்பாகக் கவனம் செலுத்தவில்லை.

பயணிகளின் உடமைகள் பஸ்ஸில் இருந்த சமயமே பஸ் தீயிட்டுக் எரிக்கப்பட்டது. அதில் 7 மாணவர்களின் மடிக் கணினிகளும், கல்வி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஆவணங்களும் எரிந்து நாசமாகியுள்ளன. உடமைகள் எரிந்து நாசமாகியதால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், பொருளாதார ரீதியாவும் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதேநேரம் அந்த பஸ்ஸில் பயணித்த ஏனைய பயணிகளின் உடமைகள் பலவும் எரிந்து நாசமாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-105)

# உதயனைப் பார்வையிட்ட முன்பள்ளிச் சிறார்கள்

யாழ்ப்பாணம், பெப்.25

யாழ்ப்பாணம் மூளாய் பிரதேசத்தை சேர்ந்த முன்பள்ளிகளில் கல்வி கற்கும் சிறார்கள் 56 பேர் நேற்று உதயன் பணிமனைக்கு வருகை தந்தனர்.

மூளாய் மனிதவள முன்பள்ளி மற்றும் மூளாய் சுவாமி ஞானப்பிரகாசர் முன்பள்ளி ஆகியவற்றின் சிறார்களே உதயனுக்கு வருகை தந்தனர்.



நவீன உலகில் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் நோக்கி எமது எதிர்கால சந்ததியினர் செல்லும் சூழலில் பத்திரிகைத் துறை தொடர்பான விழிப்புணர்வுவை சிறுவர்கள் மத்தியில் இருந்தே வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நோக்கில் சிறார்கள் உதயனுக்கு அழைத்து வரப்பட்டனர்.

சிறார்களுடன் பெற்றோர்களும், முன்பள்ளி ஆசிரியர்களும் உடன் வந்தனர். அவர்களுக்கும் பத்திரிகைத் துறை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. (ஐ)

## விடுதியை...

அங்குள்ளனர் என்று கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இராணுவத்தினர் இந்த நடவடிக்கையை முன்னெடுத்தனர் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இராணுவத்தினர் விடுதிக்குள் நுழைந்து சோதனையிட்டதை அடுத்து விருந்தினர் விடுதியில் இருந்தவர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டன என்று தெரியவருகின்றது.

அதன்பின்னர் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் விருந்தினர் விடுதியில் இருந்து எவரும் வெளியேறாத வகையில் பாதுகாப்பைப் பலப்படுத்தினர். இந்த விடயம் தொடர்பாகச் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு அவர்களும் அந்த இடத்துக்கு வந்தனர்.

விருந்தினர் விடுதியில் சுமார் 40 இளைஞர்கள் அந்த நேரத்தில் விருந்தொன்றில் கலந்து கொண்டிருந்தனர். அவர்கள் தொடர்பாகக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது என்று இராணுவத் தரப்பில் இருந்து தகவல் வெளியாகியிருந்தது.

விடுதியில் இருந்தவர்களை விசாரணைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று இராணுவத்தினர் திட்டவட்டமாகத் தெரிவித்த நிலையில், விருந்தினர் விடுதியில் இருந்தவர்கள் மற்றும் விடுதி உரிமையாளர் ஆகியோரின் எதிர்பால் நீண்ட நேரமாக இராணுவத்தினர் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்திருந்தனர்.

விருந்தினர் விடுதியில் கூடியிருந்த இளைஞர்களில் சில குற்றங்களுக்காகத் தேடப்படும் சிலரும் உள்ளனர் என்றும், அவர்களைக் கைது செய்யும் நோக்குடனே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்று தெரிவித்த இராணுவத்தினர், இளைஞர்களிடம் வாக்குமூலம் பெற வேண்டும் என்பதில் விடாப்பிடியாக நின்றனர். இந்த நிலைமை இரவு 7 மணியளவில் இருந்து இரவு 10.30 மணிவரை நீடித்தது.

இரவு 10.30 மணியளவில் அங்கிருந்த 41இளைஞர்கள் இராணுவத்தினரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு வாகனத்தில் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கிருந்த 23 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டன. அங்கு அவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்ட எவரும் விடுவிக்கப்படவில்லை. (அ, எ- 26,105)

## மொட்டு...

போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான புதிய கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் வடக்கு, கிழக்கில் தனித்தனியே போட்டியிடக்கூடும். ஆனால் ஏனைய மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் எமது புதிய கூட்டணியின் கீழ்தான் எமது பங்காளிக் கட்சிகள் ஓரணியில் நின்று ஒரே சின்னத்தில் போட்டியிடும். எமது கூட்டணி இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவது உறுதி. ஆனால் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி கிடைக்க வேண்டும் என்பதே எமது நோக்கம்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியை நாம் நிறுவியபோது ஆரம்பத்தில் இதைப் பார்த்து ஐக்கிய தேசியக் கட்சியினர் கிண்டலடித்தார்கள். ஆனால், அந்தக் கட்சியினர் இன்று சிதறுண்டு காணப்படுவதைப் பார்க்கும்போதுதான் பரிதாபமாக இருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை படுதோல்வியடையும் என்பது உறுதி. இதற்கு ரணிலும் சஜித்துமே முக்கிய காரணம். எமது கட்சியின் வாசல் திறந்தே இருக்கின்றது. எவரும் எம்முடன் வந்து இணையலாம்-என்றார். (எ-22)

## வீட்டில்...

மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்த சுரேன் ராகவன் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் நண்பரான சுரேன் ராகவன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தார் என்றும், நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது என்றும் தெரியவருகின்றது.

யாழ். மாவட்டத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஒதுக்கிய 7 ஆசனங்களில் ஏற்கனவே 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர் என்றும், எஞ்சிய 3 ஆசனங்களில் ஒருவர் பெண் உறுப்பினர் எனில் ஏனைய இரு ஆசனங்களுக்கும் நீண்டகால உறுப்பினர்கள் அதிகம் பேர் உள்ளதால் போட்டி நிலமை உள்ளது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார் என்றும் தெரிய வருகிறது.

அதனால் சுரேன் ராகவனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாகத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்புக் கிடைக்காது என்று தெரியவருகின்றது. (எ-105)

## கூட்டத்துக்கு...

தேச சபைகளின் தவிசாளர்களும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இன்று நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு தமக்கோ, உறுப்பினர்களுக்கோ அழைப்பு விடுக்கப்படாமல், பிரதேச சபை செயலாளர்களுக்கு மாத்திரமே அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை "இந்தக் கூட்டம் ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் இ.அங்கஜன் தலைமையில் நடைபெறவுள்ள போதும், இது பிரதேச அபிவிருத்திக் கூட்டமே தவிர ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இல்லை. பிரதேசத்தின் அடிப்படைத் தேவைகள் குறித்து ஆராய்வதற்காக பிரதேச சமூக மட்ட அமைப்புகளுக்கும், பிரதேச சபை செயலாளர்களுக்குமே அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்வதற்கு எந்த தடையும் விதிக்கப்படாது. அவர்களும் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும்" என சங்கானைப் பிரதேச செயலர் உதயனுக்குத் தெரிவித்தார். (ந)

## வடக்கில்...

சங்களில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாவட்ட செயலர்களுக்கு நடத்தப்பட்ட கலந்துரையாடலில் இந்த விடயம் பேசப்பட்டுள்ளது. நியமனம் வழங்கப்படும் அனைவரும் கல்வி அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்டு அந்தந்த மாவட்டங்களில் பின்தங்கிய பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆயிரத்து 650 பேருக்கு நியமனம் வழங்கப்படவுள்ள நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 600 பேரும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு 200 பேரும், முல்லைத்தீவு மாவட்டதுக்கு 350 பேரும், மன்னார் மாவட்டத்துக்கு 250 பேரும், வவுனியா மாவட்டத்துக்கு 250 பேரும் நியமிக்கப்படுவர் என்று தெரியவருகின்றது.

அதேவேளை, வடக்கு மாகாணத்தில் தற்போது 3 ஆயிரத்து 800 பட்டதாரிகள் உள்ளனர். அவர்களில் ஆயிரத்து 650 பேருக்கே தற்போது நியமனம் வழங்கப்படவுள்ளது. (எ-105)

## இறந்தோரில்...

வர்களில் சிலரால் பயணிகள் பஸ்ஸுக்குத் தீ வைக்கப்பட்டது. அந்தத் தீ பரவி சொகுசுக் காரிலும் பற்றிக் கொண்டது. விபத்தில் சிக்கிய சொகுசுக் காருக்குள் இருந்து இருவரது உடல்கள் தீயில் எரிந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். சொகுசுக் காரில் பயணித்தவர்களே உயிரிழந்துள்ளனர். காரைநகரைச் சேர்ந்த வர்த்தகரான இராமலிங்கம் சோமசுந்தரம் (வயது-83), ஆறுமுகம் தேவராஜா (வயது-62), தேவராஜா சுகந்தினி (வயது-51), தேவராஜா சுதர்சன் (வயது-30) ஆகியோரும், சொகுசுக் காரின் சாரதியான விஜயகுமார் ரொசாந்தன் (வயது-24) என்பவரும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். சொகுசுக் காரில் பயணித்த சோமசுந்தரம் லக்சனா (வயது-29) என்பவர் காயமடைந்த நிலையில் வவுனியா பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பயணிகள் பஸ்ஸில் பயணித்த 25 பேர் காயங்களுக்குள்ளாகி வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பயணிகள் பேருந்துக்குத் தீ வைத்த குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றைய உதயனில் வெளியான செய்தியில் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 6 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. விபத்தில் சிக்கிய வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையைக் கணிப்பிட முடியாதிருந்ததால், பின்னிரவில் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவ்வாறு பிரசுரிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், விபத்தில் 5 பேரே உயிரிழந்துள்ளனர் என்றும், ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும், உயிரிழந்தோரின் பெயர் விவரங்களையும் நேற்றுக் காலை பொலிஸார் உறுதிப்படுத்தினர். (எ)

**தேவை**
மில் வேலையில் அனுபவம் உள்ளவர், பயிலுனர், உதவியாளர், பொதியிடல் என்பவற்றுக்கு (ஆண், பெண்) ஆள்கள் தேவை.
தொடர்பு:- பிருந்தா மில்ஸ் | T.P: 077 174 6101
இல.179, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லம்மா சங்கரப்பிள்ளை


பிறப்பு 17.03.1925 — இறப்பு 24.02.2020

சாயுடை மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சங்கரப்பிள்ளை நேற்று (24.02.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பிள்ளை சங்கரப்பிள்ளையின் மனைவியும் திருமதி பா.சர்வஜீவதயாபரி (ஓய்வுநிலை ஆசிரியை), லயன் ச.சிவானந்தராசா (ஓய்வுநிலை கோட்டக் கல்விப்பணிப்பாளர், சண்டிலிப்பாய் கோட்டம்), ச.தயானந்தன் (ஆசிரியர் - கொக்குவில் ஞான பண்டிதா வித்தியாசாலை), ச.கிருபானந்தன் (அழகியல், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்) ஆகியோரின் பாசமிகுதாயாரும் ந.பாஸ்கரன் (ஓய்வுநிலைக்கணக்காளர்), திருமதி சி.கனகதயானந்தி, திருமதி த.இராஜேஸ்வரி (ஆசிரியை - கொக்குவில் இந்துக்கல்லூரி), திருமதி கி.கமலராணி (ஆசிரியை - அருணோதயக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சி. கோவற்சன் (தயாரிப்பாளர், கப்பிற்றல் ஊடகம்), செல்வி சி.வற்சாஜினி (படவரைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம், தலைமை அலுவலகம்), த.தேவதயாராஜ் (விரிவுரையாளர், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்), செல்வி த.அனோஜா (பேராதனைப்பல்கலைக்கழக இறுதி ஆண்டு மாணவி), செல்வி த.விஷ்ருதா (கிழக்கு பல்கலைக்கழக மாணவி), செல்வி கி.தசாங்கி (மாணவி, யா/யூனியன் கல்லூரி), செல்வன் கி.வினுஜன் (மாணவன் -அருணோதய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தி யாரும் செல்வன் கோ.ராவண், செல்வன் கோ.யுகன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்றவர்களான க.குமாரலிங்கம், க இளையதம்பி, க.முருகேசு, க. யோகப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2020) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவிட்டபுரம் கீரிமலைவீதியிலுள்ள தச்சன் காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எழுவாவுடை வளவு, 8ஆம் கட்டை, மல்லாகம்.
தகவல் : குடும்பத்தினர். 021 224 1697

## மரண அறிவித்தல்

### குமாரசாமி நவரட்ணராசா (நகுலர்)



கச்சேரி - நல்லூர் வீதி, சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும், களையோடை அம்மன் வீதி, நவாலி தெற்கை வசிப்பிட மாகவும் கொண்ட குமாரசாமி நவரட்ணராசா (நகுலர்) நேற்று (24.02.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - இராசம்மா தம்பதிகளின் மகன் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- சகோதர, சகோதரிகள் குடும்பம்.

**பாடசாலை மாணவர்களுக்கு,**
**யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீடம்**
**ஒழுங்குபடுத்தும் அறிவியல் நிகழ்ச்சி**



ஒளிரும் எதிர்காலத்திற்கானவிஞ்ஞானக் கல்வி
**Science Education for Bright Future**
தரம் 6 தொடக்கம் 11 வரையானவிஞ்ஞான பாடப் பரப்புக்களில்

- ✓ காட்சிப்பொருட்கள்
- ✓ பரிசோதனைகள்
- ✓ கலந்துரையாடல்கள்
- ✓ விளக்கவுரைகள்
- ✓ மேலும் பல ...
- ✓ தாவரவியல்
- ✓ விலங்கியல்
- ✓ இரசாயனவியல்
- ✓ பௌதிகவியல்
- ✓ கணனிவிஞ்ஞானம்

இடம்: விஞ்ஞான பீடம், யாழ் பல்கலைக்கழகம்
காலம்: மார்ச் 04 – 07, 2020 (காலை 8.00 - மாலை 6.00)

- நுழைவுச்சீட்டுக்களை இன்று முதல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- பார்வையிட வரும் நாளையும், பார்வையாளர்களின் எண்ணிக்கையையும் குறிப்பிட்டு நுழைவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளவும்
- நிகழ்ச்சி நடைபெறும் நாட்களில் காலை 8.00 மணி முதல் மாலை 2.00 மணிவரை நுழைவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படும்.

ஒவ்வொரு நாளுக்கும் குறித்த எண்ணிக்கையான நுழைவுச்சீட்டுக்களே ஒதுக்கப்பட்டுள்ளதால், நிகழ்ச்சித் திகதிவரை காத்திராமல், முற்கூட்டியே உங்கள் நுழைவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளவும்.

அனைத்து மாணவர்களையும், ஆர்வமுள்ள அனைவரையும் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட சமூகம் அன்புடன் வரவேற்கின்றது.

தொடர்புகளுக்கு: பீடாதிபதிஅலுவலகம், விஞ்ஞானபீடம், யாழ்பல்கலைக்கழகம்
: 021-222-2685 : scienceuoj@univ.jfn.ac.lk

### திருமதி பொன்னையா சேதுப்பிள்ளை

அன்னை மடியில்
05 . 10 . 1939



ஆண்டவன் அடியில்
22 . 02 . 2020

சாவகச்சேரி வடக்கு பன்றிக்கேணி வீதி, மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரும்தி பொன்னையா சேதுப்பிள்ளை 22.02.2020 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பொன்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசரத்தினம், சிவகொங்கை ஆகியோரின் சகோதரியும், சுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான நடராசா, யோகநாதன், கந்தசாமி ஆகியோரின் மைத்துனியும், சி.அருட்சோதி (ஆசிரியர் - மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), பா.வளர்மதி (ஜேர்மனி), சி.கலைவாணி (டென்மார்க்), பொ.குமரன் (ஜேர்மனி), சொ.வசந்தகுமாரி (பிரான்ஸ்), பொ.சிவச்செல்வன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு தாயாரும், சிவசுப்பிரமணியம், பாஸ்கரன், சிவபரன் அருணாநிதி, சொர்ணலிங்கம், கலாரூபி ஆகியோரின் அன்பு மாமியாரும் மயூரன், செந்தூரன், சுபிதா, அருட்குமரன், அயந்தினி, அபிரந்திகா, அஸ்னா , அஸ்வினா, அபினா, ஜீதுஸா, சஞ்ஜித், ஜதுரா, மதீசன், டிபுஷணன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2020) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று 9.00 மணியளவில் பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மகள் அருட்சோதி - 0772107993, மகள் வளர்மதி - 004915788298857, மகள் கலைவாணி - 004530429874, மகன் குமரன் - 004917630192733, மகள் வசந்தகுமாரி -0033768418639, மகன் சிவச்செல்வன் -0033609013544
சாவகச்சேரி வடக்கு, பன்றிக்கேணி வீதி, மீசாலை.

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னப்பிள்ளை சின்னையா



சிறுப்பிட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பிள்ளை சின்னையா நேற்று (24.02.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அப்பையா செல்லாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான காசியர் சின்னம்மா தம்பதிகளின் மருமகளும் பரஞ்சோதி, மகாதேவன், பராசக்தி, சுதேஸ்வரன், கதிர்காமநாதன், ஜெயமாலா, பிரதீபன் ஆகியோரின் தாயாரும் நளினா, நந்தினி, நகுலேஸ்வரன், விஜிதா, தமிழினி, கதிர்ச்செல்வன், லோஜிதா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2020) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சிறுப்பிட்டி இத்தன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

# சு.க. உறுப்பினர்களுக்கு சஜித் பகிரங்க அழைப்பு

கொழும்பு, பெப்.25
அரசியல் ரீதியில் நெருக்கடிக்குள்ளாகியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணைந்துகொள்ளலாம்."

இவ்வாறு பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தியே அரசியல் நிர்வாகம் முன்னெடுத்துச் செல்லப்படும். எவருடனும் அரசியல் ஒப்பந்தம் செய்துகொள்ள மாட்டோம். ஜனாதிபதி தேர்தல் காலத்தில் இருந்து இன்றுவரையில் ஆளும் தரப்பினர் மக்களுக்குப் போலியான வாக்குறுதிகளையும், நிரூபிக்கப்படாத விடயங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களையும் மாத்திரம் முன்வைத்து வருகின்றார்கள்.

இன்று தேசிய பொருளாதாரம் பெரும் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளது. முறையற்ற நிதி முகாமைத்துவமும், அரசின் போட்டித்தன்மையுமே இதற்குப் பிரதான காரணமாகும்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைத்தவுடன் அதே ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் திகதி அவ்வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இல்லாத பட்சத்திலும் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது.


எமது 100 நாள் செயற்திட்டத்தின் வாக்குறுதிகள் பெருமளவில் நிறைவேற்றப்பட்டன. ஆனால், நடைமுறை அரசு அதிகாரத்துக்கு வந்து 100 நாள்களுக்கு அதிகமான நாள்கள் கடந்துள்ள நிலையில் எவ்வித அபிவிருத்திகளையும், மக்களுக்குக் குறிப்பாக 69 இலட்சம் மக்களுக்கு நிவாரணங்களையும் வழங்கவில்லை.

மக்களுக்கு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க துரிதமாக வரவு - செலவுத் திட்டத்தைக் கொண்டு வாருங்கள், முழு ஒத்துழைப்புத் தருகின்றோம் என்று நாம் தெரிவித்த போதிலும் அரசு அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை - என்றார்.

(எ-22)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20
08
1943

மறைவு
17
02
2018

அமரர் சின்னக்குட்டி கனேஸ்

திதி:பூர்வபக்க துதியை




ஆண்டு இரண்டு ஆனதுமே
ஆறாத் துயரும் ஆறிடுமோ
சீராய் எமை வளர்த்த பெருஞ்சீரே
சீக்கிரமாய் எமை விட்டு பிரிந்தீரே
பாழாய்ப் போன பாசத்தினால்
பரிதவிக்கிறோம் நாங்கள் இங்கு..!

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
26
03
1941

இறப்பு
08
03
2019

அமரர் வேலுப்பிள்ளை தியாகராசா
(ஓய்வுபெற்ற அதிபர்)

திதி:- பூர்வபட்ச துதியை (25.02.2020)

நீங்கள் மட்டுமன்றி மற்றோரும்
உங்களைப் போல் வாழவேண்டும்
என்று வாழ்ந்து காட்டிய அப்பாவே!
எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் அழியா உம்
நினைவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்

குளுக்கண்டிவீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (கட்டைப்பிராய்)

குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்



தோற்றம்
15
11
1946

மறைவு
24
02
2020

### குமாரசாமி நவரட்ணராசா (நகுலர்)

யாழ் கச்சேரியடியை பிறப்பிடமாகவும், நவாலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி நவரட்ணராசா (நகுலர்) நேற்று (24.02.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - இராசம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான இராமு - இராசம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்றவர்களான சிங்கரத்தினம், ஜெயராசா மற்றும் துரைசிங்கம் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி (பிரான்ஸ்), புஸ்பராசா (டென்மாரக்), காலஞ்சென்ற இரட்ணசிங்கம் (பிரான்ஸ்) மற்றும் யோகராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பத்மாவதியின் அன்புக் கணவரும், வனிதா (ஆசிரியர்), சுயதா (லண்டன்), இரத்தினராசா (றாச் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குகேந்திரன், நிர்மலதாஸ் (லண்டன்), கோமதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் யஸ்வினி, வினுசாந், சஜிவர்ணா [illegible] ஆகியோரின் அன்[illegible] பெறனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25.02.2020) செவ்வாய்க்கிழமை நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக ஆரியம்பிட்டிக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்.

கலையோடை அம்மன் வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய்.

---

## பகிரங்க ஏல அறிவித்தல் - 2020
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட, கீழ்க்குறிப்பிடப்படும் இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடை என்பவற்றை 2020.03.10 ஆம் திகதி தொடக்கம் 2020.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம் கோரப்படுகின்றது.

இடம் : வலி தென்மேற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம்
திகதி : 2020/03/03 செவ்வாய்க்கிழமை.
நேரம் : பி.ப 3.00 மணி

2020 ஆம் ஆண்டிற்கான பகீரங்க ஏல அட்டவணை

| இல | விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|
| | மானிப்பாய் பட்டின உபஅலுவலகம் | | | |
| 1- | மானிப்பாய் பொதுச் சந்தை கருவாட்டுக்கடை அல்லது மாமிசம் பதனிடும் கடை | 1,000.00 | 34,000.00 | 600.00 |
| | பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகம் | | | |
| 1 | மாகியப்பிட்டி சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 70,000.00 | 800.00 |
| 2 | இளவாலை பொதுச் சந்தை கோழிறைச்சிக் கடை. | 1,000.00 | 100,000.00 | |
| 3 | மாதகல் பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 50,000.00 | 750.00 |

நிபந்தனைகள்-

01. மேற்படி ஏலத்தில் பங்குபற்ற விரும்புவோர் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணத் தொகை ரூபா 100.00, இனையும் மேலே அட்டவணையில் காட்டப்பட்டவாறு மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணத்தினையும் எமது சபை தலைமை அலுவலகத்தில் 2020.03.03 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்பாக செலுத்தி மேற்படி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.
02. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2020.03.10 ஆம் திகதி 3.00 மணிக்கு முன்பாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
03. பிரதேச சபையின் மேலதிக நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.


திரு.அ.ஜெபநேசன்,
தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய

2020.02.25

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
ஆழ்வார் கந்தசாமி
(அகில இலங்கை சமாதான நீதவான்,
ஓய்வு பெற்ற இ.போ.ச.களஞ்சிய பொறுப்பாளர்,
உரிமையாளர் - தீபன் களஞ்சியம்)



திதி: 25.02.2020

அன்பான அப்பாவே! ஓராண்டு பறந்தோடியது
தங்கள் திருமுகம் கண்டு என்றும் தங்கள் பசுமை
நிறைந்த நினைவுகள் எம்மை விட்டு நீங்காது.

என்றென்றும் ஒளிவிளக்காய் நின்று
வழிகாட்டியாக இருந்து அருள்புரிவீராக.

மலர்வு
25.03.1945

உதிர்வு
08.03.2019

சம்பந்தன் கடையடி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

குடும்பத்தினர்.

## திருக்கேதீச்சர அலங்கார வளைவை

# நிரந்தரமாக அமைக்க கையெழுத்து சேகரிப்பு

மன்னார்,பெப்.25

கடந்த வருடம் சிவராத்திரி தினத்தில் உடைக்கப்பட்ட அலங்கார வளைவை நிரந்தரமாக அமைப்பதற்கு திருக்கேதீச்சரத்தில் கையெழுத்துப் பெறப்பட்டது.

சிவராத்திரி நிகழ்வில் பங்கேற்ற பக்தர்களிடம் கையெழுத்துப் பெறப்பட்டது.

அகில இலங்கை இந்து சமய ஒருங்கிணைப்புச் சபையின் ஏற்பாட்டில் ஐந்து லட்சம் கையெழுத்துக்கள் பெறப்படவுள்ளன. அவை ஐநா மனித உரிமைக் குழுவுக்கும், உலகத்தில் உள்ள நீதி அமைப்புகளுக்கும், இலங்கை ஜனாதிபதிக்கும் அனுப்பப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-213)






## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம் பெப்.25


நல்லூர் பிரதேச பண்பாட்டு பெருவிழாவை முன்னிட்டு கலைஞானச்சுடர் விருது மற்றும் இளங்கலைஞர் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேசத்தில் கலை இலக்கியத்துறைக்குப் பங்காற்றி வரும் சிறுகதை, நாவல், நாடகம், நாடக எழுத்தாக்கம், கவிதை, நடனம், குறும்படம், ஓவியம், சிற்பம், இசைநாடகம், இசைக்கலை, வாத்தியக்கலை, வாத்தியக் கருவிகள் உருவாக்கம், கூத்து, பொம்மலாட்டம், ஒயிலாட்டம், மகுடி போன்றன ஒப்பனைக் கலை போன்ற துறைசார்ந்தவர்களிடமிருந்து அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கலைஞானச்சுடர் விருதுக்கான விண்ணப்பமும் பதினெட்டு வயதிலிருந்து நாற்பது வயதுக்கு உட்பட்டவர்களுக்கான இளங்கலைஞர் விருதுக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன. நல்லூர் பிரதேச செயலர் பிரிவினை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருப்பதுடன் இதுவரை இப்பிரதேச விருதுகளை பெறாதவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவங்களை நல்லூர் பிரதேச கலாசாரப் பிரிவிலும் www.nallur.ds.gov.lk எனும் இணையத் தளத்தில் பெற்று உரிய கலைத்துறை சான்றுப் பத்திரப்பிரதிகளுடன் 20.03.2020 இற்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என நல்லூர் பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான திருமதி எ.அன்ரன் யோகநாயகம் தெரிவித்துள்ளார். (ந)

## ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியில் 14 ஆவது 'ஸ்மாட்' வகுப்பறை

முல்லைத்தீவு,பெப்.25

இலங்கையில் கூடுதலான 'ஸ்மாட்' வகுப்பறைகளைக் கொண்ட பாடசாலையாக முல்லைத்தீவு சிறிசுப்பிர மணிய வித்தியாசாலை திகழ்கிறது. வித்தியா சாலையின் 14 ஆவது 'ஸ்மாட்' வகுப்பறை நேற்றுத் திறக்கப்பட்டது. யோகராணி பாலசுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட வகுப்பறையை யாழ் பல்கலைக்கழக சமூக மருத்துவபீட சிரேஸ்ட விரிவுரை யாளர் ஆர். சுரேந்திரகுமாரன் திறந்தார்.



நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கணினிப் போதனாசிரியர் கந்தையா சியந்தன் மற்றும் புதுக்குடியிருப்புக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.சுப்பிரமணியேஸ்வரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிகழ்வில் நன்கொடையாளர் சின்னத்துரை பாலசுப்பிரமணியம் மற்றும் பெற்றோர்கள் நலன்விரும்புகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (க-222)



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



## அமரர் குணரட்ணம் யோகேந்திரன்

(குணரட்ணம் ஸ்ரோர்ஸ் & குணரட்ணம் அன் சன்ஸ், மனோகரா திரையரங்கு, யாழ்ப்பாணம்)

மலர்வு
29.08.1982



உதிர்வு
28.01.2020

கடந்த 28.01.2020 அன்று இறைபதமெய்திய எங்கள் குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் ஆறுதல் தெரிவித்து துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (25.02.2020) செவ்வாய்க்கிழமை கீரிமலையிலும், 27.02.2020 வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

**இல.64/01, மில் வீதி, வவுனியா.**

(AVA/670)(11.17)

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி நாளினி ரவீந்திரன்

உயர் அன்பின் ஆசானே!
அறநெறியூட்டி எம்மை
அரவணைத் தேத்தினீரே!
உயரிய கல்வி தந்து
உயர் நிலைக் கேற்றினீரே!

குறைவிலா அன்பில் நனைந்தே
நிறைவுகள் யாவும் பெற்றோம்
நிறைவுற்று நாளினி போகிலும்
நினைவெலாம் நாளினி மிஸ்ஸை மறவோம்
நினைவெலாம் மறவோம் தாயே!

OUR EXTRAORDINARY TEACHER WHO SERVED AT OUR ALMA MATER AND PRODUCED MANY GREAT PATRICIAN PERSONALITIES. OUR DEEPEST SYMPATHIES TO HER FAMILY, MAY HER SOUL REST IN PEACE.

**S.P.C. 92/AL BATCH.**
**JAFFNA.**

## மரண அறிவித்தல்

மண்ணில்
22.02.1927



விண்ணில்
24.02.2020

### திருமதி அம்பிகா செல்வரட்ணம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அம்பிகா செல்வரட்ணம் நேற்று (24.02.2020) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அண்ணாவியார் சபாபதிப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான துரையப்பா, தம்பித்துரை, நடேசர், கணேசர், சங்கீதபூஷணம் பாலசிங்கம், அம்பாலிகை மற்றும் இளைப்பாறிய இசை ஆசிரியை ராதாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரியும் சண்முகலிங்கம் (கட்டடப் பொருள் விற்பனையாளர்), ஜானகி (இளைப்பாறிய ஆசிரியை - யாழ்.திருக் குடும்ப கன்னியர் மடம்), சாவித்திரி (இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர்- யா/ போதனா வைத்தியசாலை), சத்தியலிங்கம் (லண்டன்), தேவகி (இத்தாலி), கௌரி (வைத்திய நிபுணர் - யா/ போதனாவைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சத்தியபாமா, காலஞ்சென்ற நாகேந்திரன் மற்றும் குமுதினி, நந்தன் ஆகியோரின் மாமியாரும் யதீஷ், கிருஷ்ணா, ஜீவந்திகா, அனுஜா, சந்தியா, சரவண்யா, நர்த்தனா, யாதவன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் செலீனா, வின்சன், மாயா, தீரன் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2020) செவ்வாய்க்கிழமை இல.23, குறொசெற் லேன், யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : செ.சண்முகலிங்கம் (மகன்)

# வறுமை வாழ்வுக்கு வெறுமை

■ சி.நற்குணலிங்கம்

வறுமை என்பது உணவு, உடை, உறையுள், பாதுகாப்பான குடிதண்ணீர், கல்வி பெறும் வாய்ப்பு, பிற குடிமக்களிடம் மதிப்புப் பெறுதல் போன்றவை உட்பட வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிப்ப வற்றை இழந்த நிலை ஆகும். பொதுவாக ஒரு குறிப்பிட்ட அளவு வருமானத்தை வைத்தே ஏழ்மை நிலை அளவுசார்ந்து மதிப்பிடப்படுகிறது. இருப்பினும் ஏழ்மை நிலை உணவு, உடை உறைவிடம், சுத்தமானநீர், கல்வி, சுகாதாரம், சமூக வாய்ப்புகள், அரசியல் உரிமைகள், பிற சமூகங்களுடனான தொடர்புகளற்ற அல்லது மட்டுப்படுத்தப்பட்ட நிலையைக் குறிக்கிறது.



வறுமையிலும் பல வகைகள் உள்ளன. ஒரு குடும்பத்தின் வருமானம் அந்தக் குடும்பத்தினரின் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்றமுடியாத அளவில் மிகக் குறைவாக இருப்பது முற்றிலும் வறுமை எனப்படும். அதாவது மிகக் குறைந்த அளவு வாழ்க்கைத் தரத்துக்கும் கீழான நிலையில் உள்ளவர்களைக் குறிக்கும். தீவிர வறுமை என்பது உணவு, நீர், உறையுள், கழிவு நீக்க ஏற்பாடுகள், நலம், தகவல் போன்ற அடிப்படைத் தேவைகளை நிலையாக அணுக முடியாத கையறு நிலையைக் குறிக்கிறது. அதாவது ஒருவர் ஒரு நாளுக்கு 1.25 அமெரிக்க டொலருக்கு கீழ் சம்பாதித்தால் அது தீவிரமான வறுமை என உலக வங்கி வரையறுக்கிறது. ஒப்பீட்டு வறுமை என்பது இரு பிரிவினரின் வாழ்க்கைத் தரத்துக்கு இடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறிப்பதாகும். வளர்முக நாடுகளில் இவற்றைக் காணலாம். ஒப்பீட்டு வறுமையை பெரும்பாலும் அமெரிக்கா போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணலாம். தேசிய வருமானப் பங்கீட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகளே இதற்குக் காரணமாகும் எனக் கூறப்படுகிறது.



**வறுமையும் பட்டினியும்**

வறுமையின் அளவுகோல்களை நோக்கின், வறுமைக்கோடு என்பது வறுமையை வரையறுக்கப் பயன்படும் ஓர் அளவுகோல் ஆகும். குறைந்தபட்ச நகர்வுத் தரத்தைக் கூட பெற முடியாதவர்கள் வறுமைக் கோட்டில் வாழ்பவர்கள். ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைத் தரத்தை அடையத் தேவையான குறைந்த பட்ச வருமான வரம்பே வறுமைக்கோடு. வருமானம் தவிர்த்து ஒருவர் உட்கொள்ளும் உணவின் அளவைப் பொறுத்தும் வறுமைக்கோடு வரையறுக்கப்படுகிறது. மனித வறுமைச் சுட்டெண் என்பது ஒரு நாட்டில் காணப்படும் வாழ்க்கைத் தரத்தைக் குறிப்பிட பயன்படுத்தப்படும் ஒரு சுட்டி. இது ஐக்கிய நாடுகள் சபையால் மனித அபிவிருத்திச் சுட்டெண்ணுக்குப் நிரப்பியாகப் பயன்படுத்தப்படுகிறது. 1997ஆம் ஆண்டில் இது முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது. 2010ஆம் ஆண்டில் இந்தச் சுட்டிக்குப் பதிலாகப் பல்பரிமாண வறுமைச் சுட்டெண் எனும் புதிய சுட்டெண்ணை ஐ.நா அறிமுகப்படுத்தியது. ஆயுள் எதிர்பார்ப்பு, அறிவு, வாழ்க்கைத் தரப்பண்பு இவை வறுமையை அளவிடும் ஒரு கூட்டுச் சுட்டெண் எனக் குறிப்பிடப்படுகிறது.

> வறுமை ஒழிப்பு என்பது ஒரு முக்கியமான இலக்காக இருக்க வேண்டும். வறுமையினால் ஏற்படும் வலி, துன்பம் என்பவை காரணமாக வறுமை விரும்பத்தகாத ஒன்றாகவே கொள்ளப்படுகின்றது.

வறுமையின் பிடியில் சிக்கித் தவிப்பவர்கள் பலர் உள்ளனர். உலகில் எட்டுப் பேரில் ஒருவர் பட்டினியால் வாடுகிறார். உலகில் 40 வீதமானோரும் இலங்கையில் 55 வீதமானோரும் வறுமைக்குள் மூழ்கியுள்ளனர் உலக பணக்காரர்களில் 20 வீதமானோர் உலகின் மொத்த வளங்களில் 86 வீதத்தைக் கைப்பற்ற மீதி 80 வீத மக்களுக்கும் 14 வீதம் மட்டுமே கிடைக்கிறது. சர்வதேச பட்டினிக்கான பட்டியலில் இலங்கை 84ஆவது இடத்தில் இருந்தது.

மக்கள் தொகையில் 40 வீதத்துக்கும் அதிகமானோர் நாளொன்றுக்கு 225 ரூபா என்ற வறுமையை நோக்கிச் செல்லும் ஆபத்தைக் கொண்டுள்ளனர். பெரும் எண்ணிக்கையான வறியவர்கள் நகரத்துக்குள் அல்லது அதனைச் சூழவுள்ள பகுதிகளில் வாழ்கிறார்கள். குறிப்பாக வடக்குக், கிழக்கு, மொனறாகலை, பெருந்தோட்டத்துறை ஆகியவற்றில் வறுமை அதிகம். இன்று சுமார் 5 பேரில் ஒருவர் தீவிர வறுமையில் உள்ளார்.

வறுமையால் நாம் படும் துன்பமோ பெருந்துன்பம். அது ஏற்படுத்தும் விளைவுகளோ பாரதூரம். வறுமை என்பது எம்மைச் சுற்றிவரும் அரக்கன். வறுமையின் கொடுமையை வள்ளுவர் நல்குரவு (வறுமை) 105ஆவது அதிகாரத்தில் -

'இன்மையின் இன்னாதது யாது எனின்
இன்மையின் இன்மையே இன்னாதது'

என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது வறுமையைப் போல கொடுந்துன்பம் ஒன்றுமில்லை என்கின்றார்.

**வறுமையால் ஏற்படும் பாதிப்புக்கள் பாரதூரம்**

வறுமை ஒரு பாவி. அது வந்துவிட்டால் இந்தத் தலைமுறை இன்பத்தை மட்டுமல்ல அடுத்த தலைமுறை இன்பத்தையும் இல்லாமல் ஆக்கிவிடும். வறுமை, ஒழுக்கமான குடும்பமாக இருந்தாலும் கேவலமான வதந்திகள் பரவக் காரணமாகிவிடும், சிறுவர் தொழிலாளர்கள் உருவாகுவார்கள், மூளைத்திறன் பாதிக்கப்படும், இளவயதுத் திருமணம், சிசுமரணம், போசாக்கற்ற உடல்நிலை, அதிகரித்த குடும்பச்சுமை, களவு, கொள்ளை, கொலை, நோயாளியாகுதல், இளவயது நோயாளிகள் உருவாகுதல், ஊழல் தோற்றம் பெறும், வசதி படைத்தவர் மற்றும் ஏழைகளுக்கு இடையேயான இடைவெளி அதிகரித்துச் செல்லும், வாழ்க்கை ஏக்கங்களும் எதிர்பார்ப்புக்களும் அழுத்தங்களும் துன்பமும் துயரும் பொறாமையும் நிறைந்ததாகக் காணப்படும்.

வறுமையை நீக்குவதில் உற்சாகமளிக்கக் கூடிய தேர்ச்சியை எட்ட வேண்டும். அனைவரையும் வறுமையிலிருந்து வெளியே கொண்டு வரல் மற்றும் அனைவருக்குமான செழிப்பான எதிர்காலத்தை உறுதி செய்வதில் கூடிய கவனம் வேண்டும். பொருள்களின் விலையேற்றம், குறைவான சம்பளம், குறைந்த வருமானம் உலகில் தற்போது நிலவும் பொருளாதாரப் பின்னடைவு உழைப்புக்கேற்ற ஊதியமின்மை, குடும்பத்தில் தங்கி வாழ்வோர் அதிகம், எப்படியும் வாழலாம் என்ற மனோநிலை, திட்டமிடப்படாத வாழ்க்கை முறை, பொருத்தமற்ற முதலீடுகள், வீண் செலவு மற்றவர்களுக்காக வாழ முற்படுதல், உழைப்பில் பேராசை, அடிப்படை வசதிகள் முழுமையாக வழங்கப்படாமை, தொழில் வாய்ப்பின்மை, இழப்பீட்டுக்கு போதிய கொடுப்பனவின்மை, குறைந்த வருமானம் பெறுவோர்க்கு போதிய சமூக வலுவூட்டலின்மை, உள்ளார்ந்த வளங்கள் பயன்படுத்தப்படாமை, இன்ன தொழில் தான் வேண்டுமென்ற எதிர்பார்ப்பு, உணவுப் பாதுகாப்பின்மை, வருமான உருவாக்கம் உயராமை, சமச்சீரான வளர்ச்சியின்மை ஆகிய காரணிகள் வறுமைக்கு வழிவிடுகின்றன.

**கனதியான கடமையுண்டு**

வறுமை ஒழிப்பு என்பது ஒரு முக்கியமான இலக்காக இருக்க வேண்டும். வறுமையினால் ஏற்படும் வலி, துன்பம் என்பவை காரணமாக வறுமை விரும்பத்தகாத ஒன்றாகவே கொள்ளப்படுகின்றது.

பின்தங்கிய பிரதேசங்களில் பொருளாதார நடவடிக்கைகளை வலுப்படுத்தல், தொழில் முயற்சியாளர்களுக்கு தாங்கக் கூடிய நிதியுதவி வழங்கல், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் பரவலாக்கப்படல் சுயமுயற்சி, சொந்தக் காலில் நிற்கும் எண்ணத்தைத் தோற்றுவித்தல், சேமிப்புப் மேலோங்கச் செய்தல், தொழில்துறைகளை ஊக்குவித்தல், வெளிநாடுகளிலிருந்து தொழில்நுட்பங்கள் பெறப்படல், சந்தை வாய்ப்புக்கள் எல்லா உற்பத்திப் பொருள்களுக்கும் ஏற்படுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலமாக வறுமையை எதிர்த்துப் போராடலாம்.

தெற்காசியாவின் மற்ற நாடுகளைக் காட்டிலும் இலங்கையில் நம்பகத்தன்மையுடன் கூடிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும் வலுவுள்ள மனித வளமும் உள்ளன என உலகவங்கி தெரிவித்துள்ளது. எனவே வெறுமனே வெற்றுப் பேச்சுக்களை விடுத்து உயிரோட்டமான முறையில் இறங்கி வறுமையை முற்றாக ஒழிக்க அரசும், மக்களும் பங்களிப்புக்களை வழங்க வேண்டும். ■

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தீயில் எரிந்த மனிதம்

வவுனியா பன்றிக்கெய்தகுளத்தில் நேற்று முன் தினம் மாலை நிகழ்ந்த கோரவிபத்தின் பின்விளைவாக நிகழ்ந்த பஸ் எரிப்புச் சம்பவம் இன்னும் நாம் மனிதத் தன்மையற்றவர்களாகவே இருக்கிறோம் என்பதையே உணர்த்தி நிற்கின்றது.

டிப்பெண்டர் ரக வாகனமொன்றும் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதிலேயே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஐந்து உயிர்கள் அநியாயமாகப் பறிபோக நேர்ந்தது.கண்ணிமைக்கும் நேரத்தில், இப்படிக் கூண்டோடு உயிர்ப்பலி நமக்கு முன்னால் நிகழும்போது, உணர்ச்சிமயப்பட்ட நிலைக்குள் எவரும் மூழ்குதல் சாதாரணமானதே. ஆனால்,அந்த உணர்ச்சிமேலீட்டால், ஒரு அரசுடைமையை – அதுவும் பொதுமக்களின் பாவனைக்குரிய சொத்தை – தீ வைத்து நாசமாக்குதல் என்பது மன்னிக்கமுடியாத குற்றம். அதிலும் சம்பவத்தில் சாவடைந்த சாரதியின் உடலம் டிப்பெண்டர்வாகனத்தில் இருந்து மீட்கப்படாதநிலையிலேயே பஸ்ஸுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

விபத்து நடந்த இடத்தில் இருந்தவர்கள் எவரும் இறந்தவர்களின் உறவினர்களோ , நண்பர்களோ அல்ல. அப்படி யாரும் நெருங்கிய உறவினர்கள் தீ வைத்திருந்தால் கூட – அதுவும் குற்றமாக இருப்பினும் – ஏதோ மனவேதனையில் அப்படிச் செய்துவிட்டார்கள் என்றாவது சொல்லிக் கொள்ளலாம். ஆனால் இங்கு அப்படியல்ல. விபத்தில் பாதிக்கப்பட்டிருந்த ஒருவரின் உடல் மீட்கப்படாதி ருக்கும் நிலையில் அவசரத்தனத்தோடு தீ வைக்கப்பட்டதன் பின்னணி பற்றி சந்தேகிக்கவேண்டி உள்ளது.சம்பந்தப்பட்டவர்களுக்கு விபத்தைக் கண்டு அவ்வளவு ஆத்திரம் என்றால், ஏதேனும் செய்யக் கைகள் துடித்தால், பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றி மருத்துவமனைக்கு கொண்டு சென்றிருக்க வேண்டும்.

ஆனால் அதனைச் செய்யாமல், நாலுபேருக்கு தங்கள் 'வீரத்தைக்' காட்ட, அப்பாவியாக அடிபட்டு நின்ற பஸ்ஸுக்கு தீ வைக்கப்பட்டிருக்கிறது. இதைவிட '' டிப்பெண்டரின் சாரதி தீ வைக்கப்படும் வரை தலையில் படுகாயமடைந்த போதும், உயிரோடு இருந்ததாகவும், பஸ்ஸுக்கு வைத்த நெருப்பில் டிப்பெண்டரின் பற்றரி வெடித்துச் சிதறியதாலேயே அவருக்கு மரணம் சம்பவித்திருக்கலாம்' எனவும் ஒரு சந்தேகம் மருத்துவமனை வட்டாரங்களில் நிலவுகின்றது.


"அப்படி அவர் தீ வைத்த பின்னரே உயிரிழந்திருப்பாராயின், உடற்கூற்றுப் பரிசோதனையின் மூலம் கண்டறிய முடியும். உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை கொழும்புக்கு அனுப்பப்பட்டிருப்பட்டிருப்பதால், சில நாட்களின் பின்னரே உறுதியான தகவல் தெரியவரும்" என்றும் மருத்துவமனையூடாகத் தகவல்கள் வந்துள்ளன. அப்படி தீவைத்த பின்னரே சாரதி உயிரிழந்திருப்பாரானால், 'விபத்தைக் கண்டு பொங்குகிறோம் ' என்ற சாட்டில் ஒரு உயிரைக் காவு கொண்டிருக்கிறார்கள் அங்கு நின்ற விஷமிகள். தீவைக்குமளவுக்கு பொங்கியவர்கள், வாகனத்தில் இருந்த சாரதியை மீட்டிருக்கலாமே ? அதற்குத் துணிச்சலோ, மனிதாபிமானமோ அவர்களிடம் இல்லை. மாறாக பஸ்ஸுக்கு தீவைத்து 'ஹீரோ' ஆகிவிடலாம் என்று இந்த வில்லங்கமான க்காரியத்தைச் செய்திருக்கிறார்கள்.

இத்தனைக்கும் , டிப்பெண்டர் வாகனத்தின் அதிவேகத்தாலேயே விபத்துச் சம்பவித்ததாக நேரில் கண்டவர்களும் , பொலிஸாரும் கூறுகின்றனர். ஆக, விபத்துக்கு காரணமான வாகனம் சிதைந்து விட்டதால், வீணாக விபத்தில் சிக்கி, 25 பயணிகள் வரை காயமடைந்த வலியோடு நின்ற பஸ்ஸைக் கொளுத்தியிருக்கிறார்கள். ஒருவேளை டிப்பெண்டரை விட பஸ்தான் பெரிதென்பதால், விபத்துக்கு அதுதான் (பஸ்தான்) காரணமாக இருக்கும் என அந்த 'அறிவுக்கொழுந்துகள்' நினைத்தார்களோ தெரியவில்லை.

எப்படியிருப்பினும், இந்த பஸ் எரிப்பு ஒரு தவறான முன்னுதாரணம். விபத்து நடந்தால், அதில் பாதிக்கப்பட்டோரைக் காப்பாற்றுவதும், சட்ட நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தாமல் இருப்பதும் தான் நாம் செய்யும் பேருதவி. அதைவிடுத்து நாங்களே நாட்டாமை என்கிற ரீதியில் இப்படி தீவைப்பு, கல்லெறி என்று ஈடுபடுவதை மனிதமுள்ள எவரும் எப்போதும் மன்னிக்கவே மாட்டார்கள்.

# இலங்கையின் சுயாதீனத்தை ஒருபோதும் அடைவு வைக்கோம்

## ஜி.எல்.பீரிஸ் இறுமாப்பு



கொழும்பு, பெப். 25
இலங்கையின் சுயாதீனத்தை சர்வதேசத்திடம் அடைவு வைக்க நாங்கள் ஒருபோதும் தயாரில்லை எனப் பொதுமக்கள் முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த இரண்டரை வருடங்களாக, நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி மட்டும்தான் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தார். எமது அரசாங்கத்துக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை கிடையாது. அரசாங்கத்துக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை இல்லாதமையால், எதனையும் நிறைவேற்றிக் கொள்ள முடியாதுள்ளது.

எனவே, மார்ச் 2ஆம் திகதி நாடாளுமன்றைக் கலைத்து பொதுத் தேர்தலுக்குச் செல்ல வேண்டியது அவசியமாகியுள்ளது. இதனை ஜனாதிபதி நிச்சயமாக மேற்கொள்வார்.

பொதுத் தேர்தலில் எம்முடன் சுதந்திரக் கட்சியும் கூட்டணி அமைத்துக் களமிறங்கவுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு இணங்கவே இந்தக் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், தற்போது ஜெனீவா விவகாரமும் அதிகமாகப் பேசப்படுகிறது. ஜெனீவாவில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், இலங்கையின் கடந்த அரசாங்கத்தின் செயற்பாடு தொடர்பாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளதே ஒழிய புதிய அரசாங்கத்தின் செயற்பாட்டை அல்ல.

எமது அரசாங்கம் அமைக்கப்பட்டு இரண்டு மாதங்கள் மட்டுமே ஆகிறது. இந்த நிலையில், ஜெனீவா விவகாரத்தில் குறைபாடுகள் ஏதேனும் இருந்தால், அதற்கு கடந்த அரசாங்கம்தான் பொறுப்புக் கூறவேண்டும். ஆனால், எமது சுயாதீனத்தை சர்வதேசத்திடம் அடைவு வைக்க நாம் எந்தவேளையிலும் தயாரில்லை என்பதையும் கூறியே ஆகவேண்டும். சர்வதேசத்திடம் இலங்கையைப் பணிய வைக்கப்போவதில்லை.

இதன் ஊடாக நாம் சர்வதேசத்துக்கு எதிரானவர்கள் என்று ஒருபோதும் கூறவில்லை. மாறாக, தேசியப் பிரச்சினையொன்றுக்கு தேசியக் கட்டமைப்பின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுதான் வலியுறுத்தி வருகிறோம். இந்தப் பிரச்சினைகளில் சர்வதேசத்தினர் தலையிட நாம் என்றும் அனுமதியளிக்கப்போவதுமில்லை -என்றார். (ம)

# குழு மோதலில் இளைஞர் சாவு!

கொழும்பு, பெப். 25
எல்பிட்டிய பிரதேசத்தில் இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 27 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளார். இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற கருத்து முரண்பாடே மோதல் ஏற்பட்டமைக்கு காரணமெனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை எல்பிட்டிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம)

# கொழும்பு துறைமுகத்தை பார்வையிட்ட மீனவர்கள்

கொழும்பு.பெப்.25
கொழும்பு துறைமுகத்தின் செயற்பாடுகளை இரணைமாதா நகர் கடற்றொழிலாளர்கள், நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

இரணைதீவு, இணைமாதா நகரைச் சேர்ந்த சுமார் 75 க்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள், துறைமுகத்தின் செயற்பாடுளை அவதானித்தனர். இரணைதீவு மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நோக்கில் கடலட்டை பண்ணை விரைவில் அமைக்கப்படவுள்ளது. அதற்கான அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் துறைமுகச் செயற்பாடுகளை மீனவர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-20)



# பெரமுனவுக்கு ஐ.தே.கவால் பெரும்பான்மை

## அநுர சீண்டல்

கொழும்பு, பெப். 25
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்க சில ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தயாராக உள்ளனர் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அநுர மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியால் எதிர்க்கட்சிக்கான நடவடிக்கைகளைத் தற்போது முன்னெடுக்க முடியவில்லை. மேலும் மஹிந்த தற்போது மூன்றில் இரண்டு பலத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்து வருகின்றார். எனினும் நாங்கள் அதற்கு ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சிலர் மஹிந்தவின் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கத் தயாராக இருக்கின்றனர். எனவே பெறுமதிமிக்க வாக்குகளைப் பாதுகாக்க வேண்டுமாயின் மக்கள் தேசிய சக்திக்கே அனைவரும் வாக்களிக்க வேண்டும்- என்றார். (ம)

# இலங்கையும் மியன்மாரும்





“இலங்கையில் பல சந்தர்ப்பங்களில் இனக் கலவரம் உருவாகி சிறுபான்மைத் தமிழர்கள் மீது சிங்களக் காடையர்கள் வெறித்தனமான தாக்குதல்கள், தீ வைத்தல், பாலியல் துன்புறுத்தல்கள், கொலை என வெறியாட்டம் ஆடியமையைப் போலவே, மியன்மாரிலும் இதே போன்ற வன்செயல்களுக்கு மக்கள் உள்ளாக்கப்பட்டனர்.

எஸ்.ஆனந்

இலங்கையில் பௌத்த மதம் பொதுவான பேசும் பொருளாகவும், இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என்ற கடும் போக்கான நிலைப்பாடாகவும் காணப்படுகிறது. அன்பையும், அகிம்சையையும் போதித்த புத்த பகவானின் கொள்கைகளைப் பின்பற்றும் தேரர்கள், பௌத்த மதத்தைப் போதிப்பது மட்டும் தான் தங்கள் கடமை. அதனை நடைமுறைப்படுத்தத் தேவை இல்லை என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

உலகத்தில் உள்ள இன்னொரு பௌத்த பெரும்பான்மை நாடான மியன்மாரிலும் கூட இதே நிலைமை தான். அங்குள்ள ரோஹிங்ய முஸ்லிம்கள் சிறுபான்மை இனமாக இருக்கின்றமையால், அந்த நாட்டின் அரசே முஸ்லிம்களுக்கு எதிராக வன்செயல்களைக் கட்டவிழ்த்து விட்டது.

இலங்கையில் பல சந்தர்ப்பங்களில் இனக் கலவரம் உருவாகி சிறுபான்மைத் தமிழர்கள் மீது சிங்களக் காடையர்கள் வெறித்தனமான தாக்குதல்கள், தீ வைத்தல், பாலியல் துன்புறுத்தல்கள், கொலை என வெறியாட்டம் ஆடியமையைப் போலவே, மியன்மாரிலும் இதேபோன்ற வன் செயல்களுக்கு மக்கள் உள்ளாக்கப்பட்டனர். அதன் காரணமாக அங்கிருந்து பெரும்பாலான முஸ்லிம்கள் அகதிகளாக அண்டை நாடுகளில் குடியேறினர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பங்களாதேஷி ல் தஞ்சம் புகுந்தனர்.

இலங்கையிலஉள்ளதமிழர்களுக்கும், ரோஹிங்ய முஸ்லீம்களுக்கும் இடையில் சில ஒற்றுமைகள், வேற்றுமைகள் உள்ளன. அத்துடன் இலங்கையில் தமிழர்களது உரிமைகள் வேறு. அவர்களின் வரலாறு வேறு.

மியன்மாரில் உள்ள முஸ்லிம்களின் வரலாறு வேறுபட்டது. அவர்கள் அந்த நாட்டில் பரம்பரையாக வாழ்ந்தவர்கள் அல்லர். அண்டை நாடுகளில் இருந்து அகதிகளாக மியன்மாரில் தஞ்சம் புகுந்தவர்கள். அதன் காரணமாக அவர்களுக்கென எந்த அடையாளங்களும் அந்த நாட்டில் கிடையாது. குடியுரிமை, தொழில்வாய்ப்புக்கள், மத இன உரிமை அடையாள அட்டை என்று எதுவுமே கிடையாது. அவர்கள் தங்கள் மொழியில் பொது இடங்களில் கதைப்பதற்குக் ்கூட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஏறக்குறைய அடிமைகள் போலவே அவர்கள் மியன்மாரில் வாழ்கின்றனர். தற்போது இலங்கையில் அப்படியானதொரு நிலைமை இல்லாவிட்டாலும் கூட, இலங்கையும் அப்படியானதொரு நிலைமையை நோக்கி நகர்வதாகவே தோன்றுகிறது. அழிந்து கொண்டிருக்கும் எங்களின் அடையாளங்கள், மாறிக் கொண்டிருக்கும் தமிழ் கலாசாரங்கள், உருமாற்றப்படும் தமிழர்களின் புராதன சின்னங்கள் என தமிழர்களின் அழிவை நோக்கியே தற்போதைய அரசு முன்கொண்டு செல்கிறது.

இலங்கையில் தங்கள் இன விடுதலைக்காக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியமையைப் போலவே மியன்மாரின் முஸ்லிம் இளைஞர்களில் ஒரு குழுவினர் ஓர் ஆயுதப் புரட்சியை முன்னெடுக்க முயன்றனர்.

சரியான ஒரு செயற்றிட்டம் இல்லாமல், ஒரு கட்டுக்கோப்பு இல்லாமல் முறையான ஆயுதப் பயிற்சியும் இல்லாத நிலைமையில் ஆரம்பிக்கப்பட்ட அவர்களின் போராட்டத்தை மியன்மார் பாதுகாப்புப் படையினர் மிக இலகுவாக அடக்கி ஒடுக்கினர். வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். பல பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கும் ஆளாகினர்.

இலங்கையிலும், மியன்மாரிலும் பௌத்த மதமே மேலோங்கியுள்ள நிலையில், இவ்விரண்டு நாடுகளிலுமே இடம்பெறும் நிகழ்வுகள் பல வழிகளிலும் ஒரே மாதிரியாகவே காணப்படுகின்றன. பௌத்த மதத்தின் கொள்கைகளே இவைதானா என முடிவுக்கு வரத் தோன்றுகிறது.

## ஆசிரியருக்கான கடிதம்


# வீதிக்கு விடிவு கிடைக்குமா?

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் பங்குரு கந்தசாமி ஆலய திருமண மண்டபத்துக்கு அருகில் உள்ள வீதியை அவசரமாகவும், அவசியமாகவும் புனரமைக்க வேண்டியுள்ளது. இந்த வீதியின் ஊடாக வட்டு. மத்திய கல்லூரிக்குச் செல்லும் மாணவர்கள், சங்கரத்தை பத்திரகாளி ஆலயத்துக்குச் செல்லும் அடியவர்கள் மற்றும் துணைவி, சங்கரத்தை, நவாலி வீதியூடாக யாழ்ப்பாணம் செல்லும் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். மழை காலத்தில் வெள்ளம் தேங்குவதால், வீதியைப் பயன்படுத்துபவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அரச அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இந்த வீதியைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

- சி.ஜீவஸ்ரீ.

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்து சேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



# கொரோனாவை அறிய இலங்கைக்கு ஆர்வம்!

## உலக நாடுகளில் ஐந்தாவது இடம்

**கொரோனா வைரஸ் பற்றியும், அதன் தாக்கம் பற்றியும் அறிந்து கொள்ள ஆர்வமாய் உள்ள நாடுகளின் பட்டியலில் இங்கைக்கு ஐந்தாவது இடம் கிடைத்துள்ளது. இதன்படி ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்கும் மேலான விழிப்புணர்வையும், தேடலையும் இலங்கை கொண்டுள்ளது.**

ஆசிய நாடான சீனாவின் வுகான் மாநரில் தோற்றம்பெற்ற கொரோனா வைரஸ் சீனாவுக்கு மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த உலகுக்கும் பெரும் தலைவலி கொடுக்கும் பிரச்சினையாக மாறியுள்ளது. இதுவரையில் சுமார் 2 ஆயிரத்து 800 பேரை கொரோனா காவு வாங்கியுள்ளது. சிங்கப்பூர், தென்கொரியா ஆகிய நாடுகளில் விஸ்வரூபம் எடுக்கும் எச்சரிக்கையையும் அது வெளிப்படுத்தியுள்ளது. இந்த நிலையில் அமெரிக்க இணையத் தளமொன்று கொரோனா பற்றிய எச்சரிக்கைக் குறிப்புக்களையும், தேடல்களையும் எந்த நாட்டவர்கள் அதிகம் கொண்டுள்ளனர் என்பது பற்றி ஆய்வு நடத்தியுள்ளது.

அதிலேயே இலங்கை ஐந்தாவது இடத்தில் உள்ளமை தெரியவந்துள்ளது. கனடா முதலிடத்திலும், பராகுவே இரண்டாவது இடத்திலும், சிங்கப்பூர் மூன்றாவது இடத்திலும் உள்ளன. (ம)

# தென்கொரிய பயணிகள் கண்காணிப்பு

கொழும்பு, பெப். 25

சீனாவுக்கு அடுத்தபடியாக தென்கொரியாவில் கொரோனாவின் தாக்கம் அதிகரித்துள்ளதை அடுத்து, தென்கொரியப் பயணிகள் கட்டுநாயக்கவில் உச்சக்கட்ட சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

தென்கொரியாவில் நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் 170 பேர் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டுள்ளனர் என்று புதிதாக இனங்காணப்பட்டுள்ளனர். இந்த நிலையில், தென் கொரியாவில் இருந்துவரும் அனைத்துப் பயணிகளும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கொரோனா வைரஸ் தொடர்பான சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (ம)



## போக்குவரத்தை ஒழுங்குபடுத்த வந்தது தனியான மென்பொருள்

மட்டக்களப்பு, பெப். 25

போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கென தனியான மென்பொருள் ஒன்று மட்டக்களப்பில் அறமுகப்படுத்தப்பட்டுள்ளது.

'சவாரி' என்னும் பெயரில் இந்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துவரும் உல்லாசப் பயணிகளின் வருகை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்தவும், அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில் இந்த வலையமைப்பு மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. (ம)





## இடருக்கு உதவி!

கொழும்பு, பெப். 25

டயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளை மீளமைப்பதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இளைஞரணி பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக நடவடிக்கைகள் எடுத்துள்ளார்.

தீ விபத்து காரணமாக லயன் தொகுதியில் அமைந்திருந்த 6 வீடுகள் சேதமடைந்திருந்தமை இந்த வீடுகளில் குடியிருந்த 6 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேர் நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ளனர். தற்போது இவர்கள் தற்காலிகமாக கூடாரங்கள் அமைக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ம)

# இணைய விண்ணப்பத்துக்கு சிக்கலா? தொடர்புகொள்க!

கொழும்பு, பெப். 25




உயர்தர, சாதாரணதர மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கு இணையத்தின் ஊடாக விண்ணப்பிப்பதில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து தமக்கு அறிவிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் மாணவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

அதற்கமைய இந்த விடயம் தொடர்பாக அறிவிப்பதற்கு 1911 என்ற தொலைபேசி இலக்கத்தை பரீட்சைகள் திணைக்களம் அறிமுகம் செய்துள்ளது. அதுதவிர, இந்த விடயம் தொடர்பாக பாடசாலை பரீட்சை ஏற்பாட்டுக் குழுவுக்கும் அறிவிக்க முடியும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி பூஜித தெரிவித்துள்ளார்.

உயர்தர, சாதாரணதர மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகளுக்காக இணையத்தின் ஊடாக விண்ணப்பிப்பதற்கான மென்பொருள் ஒன்றை பரீட்சைகள் திணைக்களம் அண்மையில் அறிமுகப்படுத்தியது.

இதனூடாக உயர்தரப் பரீட்சை வரை விண்ணப்பிக்கும் சந்தர்ப்பம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# 2லட்சத்து 70ஆயிரம் புதிய வாக்காளர்கள்

## உறுதியானது பட்டியல்

2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி 2 லட்சத்து 70 ஆயிரம் புதிய வாக்காளர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றத்துக்கு தேர்தலின் ஊடாக 196 உறுப்பினர்களும், தேசியப் பட்டியலில் 29 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுகின்றனர். பொதுத் தேர்தலில் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாவட்டங்களில் தெரிவு செய்யப்படுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மாறுபடும். அத்துடன் மார்ச் மாதம் முதலாம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23 முதல் மே மாதம் 6 திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பொதுத் தேர்தலை நடத்த முடியுமென தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது. 19ஆவது திருத்திற்கு அமைய நான்கரை ஆண்டுகளின் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. இதனடிப்படையில் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வந்துவிடும். கடந்த 20ஆம் திகதி நாடாளுமன்றம் கூடிய போது, எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதிவரையில் அது ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில் எதிர்வரும் மார்ச் மூன்றாம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

# கரன்னகொடவுக்கு மீண்டும் அழைப்பு

கொழும்பு, பெப். 25

**2008** - 2009 காலப்பகுதிக்குள் கொழும்பு மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் முன்னிலையாகியிராத முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு 4ஆவது முறையாகவும் உத்தரவிடப்பட்டுள்ளது.



இந்த வழக்கு நேற்றுத் திங்கட்கிழமை கொழும்பு விசேட மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறியமையால், முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவிற்கு நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மீண்டும் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிடப்பட்டது. 2008/2009 காலப் பகுதியில் கொழும்பில் வைத்து 11 இளைஞர்களைக் கடத்திச்சென்று தடுத்து வைத்து அவர்களைக் கொலை செய்தார்கள் என முன்னாள் கடற்படைத் தளபதி மற்றும் 13 பேர் மீது சட்டமா அதிபர் திணைக்களம் குற்றம்சுமத்தியிருந்தது. (ம)

## கலையரங்கம் மைதானம் திறப்பு

யாழ்ப்பாணம், பெப். 25

புதிதாகக் கட்டப்பட்ட தொடர்மாடிக் கலையரங்கம், விளையாட்டு மைதானம் திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு குருநகர் தொடர்மாடி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

சென் லூட்ஸ் விளையாட்டுக் கழகத் தலைவர் கொஸ்மஸ் டொனால் சரத் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராசா, சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் இம்மனுவல் ஆனல்ட் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் பாடுமீன் விளையாட்டு வீரர்களைக் கௌரவித்தல், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களைக் கௌரவித்தல் மற்றும் கலை நிகழ்வுகள் நடைபெறும். (க-69)

## பெருந்திருவிழா

சாவகச்சேரி, பெப். 25

சாவகச்சேரி சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் கோவில் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும்.

மார்ச் மாதம் 7 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் 8 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

பெருந்திருவிழாக் கிரியைகள் சிறீ இலட்சுமி ஸ்ரீகாந்த ஜெகதீசக் குருக்கள் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)



## மருத்துவமனை வளாகத்தில் சிரமதானம்

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ்ப்பாணம் தொல்புரம் ஆரம்ப மருத்துவமனை வளாகம் சிரமதானம் மூலம் அண்மையில் துப்புரவு செய்யப்பட்டது. தொல்புரம் சர்வோதயத்தின் ஒழுங்கமைப்பில் சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் ஆலய நிர்வாக அமைப்புகள் ஆகியன இணைந்து இந்தப் பணியை முன்னெடுத்தன. (ஐ-63)

## கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்தும் விசேட செயற்றிட்டம் இந்த மாத இறுதியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே வீட்டு நாய்களை வளர்ப்போர் நாய்களை தங்கள் வளவினுள் வைத்திருக்க வேண்டும். பிடிக்கப்படும் கட்டாக்காலி நாய்கள் "நாய்கள் காப்பகத்துக்கு" அனுப்பப்படும்.

அதேவேளை யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் வீட்டு நாய்களுக்கு விசர் நாய் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது. எனவே வீட்டு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு யாழ். மாநகர முதல்வர் அறிவித்துள்ளார். (க)

## பயன் தரு மரக் கன்று நடுமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 25

2020ஆம் ஆண்டுக்குள் சமுர்த்தி மரநடுகைத் திட்டத்தில் அனைத்துச் சமுர்த்திக் குடும்பங்களும் பயன்தரு மரக் கன்று ஒன்றை நடுதல் வேண்டும் என்று சமுர்த்தி உத்தியோகத்தர்களால் பயனாளிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் நாடளாவிய ரீதியாக எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்குத் திட்டத்தைக் கிராமத்துக்குள் செயற்படுத்துவதற்கு சமுர்த்தி வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தயார்ப்படுத்தல் கலந்துரையாடல்கள் நாட்டின் கிராம மட்டங்களில் உள்ள 30 ஆயிரத்து 211 சமுர்த்தி சமுதாய மட்ட அமைப்பின் அங்கத்தவர்களுக்கு நடத்தப்பட்டு வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக "பொறுப்புடன் மரக் கன்று ஒன்றை நடுதல்" சமுர்த்தி மரநடுகை வேலைத் திட்டத்தை எதிர்வரும் முதலாம் திகதி முதல் நாட்டிலுள்ள அனைத்து சமுர்த்தி பயனாளிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளார்கள்.

அதேவேளை பிரதேச அமைப்புக்களின் ஈடுபாட்டுடன் சமுர்த்தி தலைமையக முகாமையாளர்கள், வங்கிச் சங்க முகாமையாளர்கள் ஆகியோரின் ஏற்பாட்டில் பிரதேச மட்ட மரநடுகை வேலைத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று சமுர்த்திப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஐ-39)

# 6 கிலோ கஞ்சா மீட்பு

## சந்தேகநபர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், பெப். 25



பஸ்ஸுக்காகக் காத்திருந்தவரின் பயணப்பையிலிருந்து 6 கிலோ கஞ்சா நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

புன்னாலைக்கட்டுவன் பலாலி வீதியில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த ஒருவர் வைத்திருந்த பயணப்பையை, மது வரித் திணைக்கள அதிகாரிகள் சோதனையிட்டனர்.

அதிலிருந்து 3 பொதிகளில் 6 கிலோ கேரள கஞ்சாவை மீட்டனர். புன்னாலைக்கட்டுவனில் இருந்து தம் புள்ளைக்குக் கடத்திச் செல்லும் நோக்கில் கஞ்சாப் பொதிகளை அவர் வைத்திருந்தார் என்று சங்கானை மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபரையும் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவரை சான்றுப் பொருளுடன், மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (க-105)

## நாடாளுமன்று – பல்கலை இடையில் புதிய ஒப்பந்தம்

கொழும்பு, பெப். 25

நாடாளுமன்ற நடவடிக்கை தொடர்பான கல்விக் கேந்திரம் ஒன்றை உருவாக்க இலங்கை நாடாளுமன்றம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் இணக்கப்பாட்டு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதாவது நாடாளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக தசநாயக்க மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க ஆகியோருக்கு இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இலங்கை விவகாரத்தை

# குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டுசெல்லவேண்டும்

### தவறின் சுமந்திரனை ஒதுக்கவேண்டும் என்று கூறுகின்றார் ஆய்வாளர் ஜோதிலிங்கம்



மருதங்கேணி, பெப். 25

"குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கை விவகாரத்தைக் கொண்டு செல்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் இணைந்து செயற்பட வேண்டும். இல்லையேல் அவரைத் தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து ஒதுக்கிவிட வேண்டும்." என்று அரசியல் ஆய்வாளர் சி.அ.ஜோதிலிங்கம் தெரிவித்தார்.

சுமந்திரன் சில நாள்களுக்கு முன்னர் ஊடக சந்திப்பு நடத்தியிருந்தார். அதில் பல கருத்துக்களையும் கூறியிருந்தார்.

இவை பற்றிக் கேட்டபோது ஜோதிலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:

உண்மையில்ஐ.நா. சபையின்போர்க் குற்ற விசாரணை இன்னும் இடம்பெறவில்லை.

தருஸ்மன் அறிக்கை மட்டுமே நிறைவடைந்துள்ளது. இதை வைத்துக் கொண்டு ஐ.நா. போர்க்குற்ற விசாரணை நிறைவடைந்துள்ளதாகச் சொல்லிக்கொள்ள முடியாது.

இலங்கைத் தமிழர் விவகாரத்தை ஐ.நா.நோக்கிக் கொண்டுசெல்ல வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயம்.

அவ்வாறு கொண்டு செல்ல வேண்டுமெனில் அது சர்வதேச குற்றவியல் நீதிமன்றை நோக்கியதாகவே இருக்கவேண்டும்.

பொறுப்புக்கூறல் விவகாரத்திலிருந்து இலங்கை அரசு விலகுவது என ஐ.நா.வுக்கு அறிவிக்க இருக்கும் நிலையில், தமிழ் மக்கள் இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இந்த விவகாரத்தைக் கொண்டு செல்வதற்குரிய ஏதுநிலை உண்டு. அதை நோக்கியே தமிழர் தரப்புக்கள் நகர வேண்டும்.

இது சர்வதேச விவகாரம். 47 நாடுகள் சேர்ந்து கொண்டுவந்த தீர்மானத்திலிருந்து இலங்கை அரசு விலகுவது சாத்தியமல்ல.

இது, சக்திவாய்ந்த அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் மேற்குலக சக்தி வாய்ந்த நாடுகளை இலங்கை அரசு பகைத்துக் கொள்கின்ற வேலை.

ஆகவே நாங்கள் எல்லாத் தரப்புக்களும் ஒன்றாக இணைந்து இந்த விடயத்தை முன்னகர்த்திக் கொண்டுசெல்ல வேண்டும்.

பொதுவாக அனைவரும் முன்வைக்கின்ற கருத்தாக இருப்பது இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குக் கொண்டுசெல்வதே. சீனாவும் ரஷ்யாவும் 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தும் என்றும் இதனால் இந்த விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் கொண்டு செல்வதில் சிக்கல்கள் உள்ளன என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்த நாடுகள் இந்த அதிகாரத்தைச் செயற்படுத்துவதற்கு வாய்ப்பில்லை.

ஏனெனில், தமிழர் விவகாரம் அந்த நாட்டின் நலன் சார்ந்தது அல்ல.

தமிழ்ச் சமூகத்தை இன்று பல்வேறு வகையிலும் பிளவுபடுத்திவிட்டார்கள். அரசியல் கட்சிகள் இன்று சிதறுண்டு இருக்கின்றன.

அவர்களைஒன்றுசேர்க்கமுடியவில்லை. முயற்சி செய்த பல நடுநிலையாளர்கள் துவண்டு போயிருக்கிறார்கள். தேசியப் பரப்பிலிருந்து அனைத்து கட்சிகளும் இன்று சிதைந்து சென்றுகொண்டிருக்கின்றன.

இதனால் எங்களுடைய அரசியலே பலவீனமடைந்து செல்கின்றது. இதற்கெல்லாம் பெரும் பங்கு வகித்தது சுமந்திரனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமே. என்றார்.

(த-160)

## தொண்டா விடுவிப்பு

கொழும்பு, பெப். 25

2002ஆம் ஆண்டு காணி தொடர்பாக ஏற்பட்ட தகராறு ஒன்றில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் உள்ளிட்ட ஐந்து பேர் அந்த வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். குறித்த வழக்கின்விசாரணைகள் நுவரெலிய நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுத் திங்கட்கிழமைவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.பிரதிவாதிகளுக்கு எதிரான சாட்சியங்கள் நிருபிக்கப்படாமைகாரணமாகஅமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் உள்ளிட்ட ஐந்து பேரும் அந்த வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என அவர்கள்தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி சிவஜோதி யோகராஜா தெரிவித்துள்ளார். (ம)

## திறன் வகுப்பறை திறப்பு





கிளிநொச்சி.பெப்.25

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட திறன்விருத்தி வகுப்பறை மற்றும் விளையாட்டு முற்றம் என்பன மாணவர் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டன.

நேற்று திங்கட்கிழமை பாடசாலை அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்துகொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினரால் விளையாட்டு முற்றத்துக்கு 10 லட்சம் ரூபாவும், திறன்விருத்தி வகுப்பறைக்கு 5 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

நிகழ்வில் கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-222)

## விருது வழங்கி கௌரவிப்பு

யாழ்ப்பாணம்.பெப்.25

நயினை பாலசுந்தரம் காசிநாதனின் பன்முக சேவையைப் பாராட்டி வட இலங்கை சமாதான நீதவான்கள் பேரவை 'மனிதநேயம்'' எனும் உயரிய விருதை வழங்கிக் கௌரவித்தது.

வட இலங்கை சமாதான நீதவான்கள் பேரவையால் கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்ட கௌரவிப்பு விழாவின் போது இந்த விருது வழங்கப்பட்டது. (ஐ-50)

## பெருந்திருவிழா

காரைநகர்.பெப்.25

காரைநகர் வலந்தலை மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பதினொரு நாள்கள் திருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழா, 9 ஆம் திகதி திங்கட்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-250)

## சொற்பொழிவு

தென்மராட்சி,பெப்.25

வரணி மாசேரி புராதன குருநாதர் ஆலயத்தில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றப்படவுள்ளன. நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மாலை 6.30 மணிக்கு சொற்பொழிவுகள் ஆற்றப்படும். (க)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், பெப்.25

உரும்பிராய் வடக்கு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம், நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகி, தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

தினமும் முற்பகல் 11 மணிக்கும், மாலை 6.30 மணிக்கும் பூசைகள் நடைபெறும்.

எதிர்வரும் மார்ச் மாதம் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (க)

## சந்தாப் பணத்தை அறவிடக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 25

பதிவுசெய்யப்பட்ட 6452 இலக்கம் கொண்ட இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் 321 அங்கத்தவர்களின் அங்கத்துவ சந்தாப்பணம் அறவிடப்படவில்லை என்று சுட்டிக்காட்டி யாழ்ப்பாண கல்வி வலயப் பணிப்பாளருக்குக் கடிதம் அனுப்பியுள்ளதாக அந்தச் சங்கம் தெரிவித்தது.

அந்த ஆசிரியர்களிடம் பணம் அறவிடுவதற்கான ஆசிரியர்களின் சம்மதக்கடிதமும், பெயர்ப்பட்டியல் கொண்ட வேண்டுகோள் கடிதமும் வலய கணக்கு கிளைக்கு 3 மாதங்களுக்கு முன்னர் வழங்கியிருந்தோம். தொழிற்சங்கத்தில் இணைந்து கொள்வது அரசமைப்புத் தாபனக்கோவை தொழிற்சங்கச் சட்டத்துக்கு அமைய ஓர் ஊழியருக்கு உரித்தான உரிமை. அவ்வாறு அங்கத்துவப் பணம் அறவிடப்படாமையானது அங்கத்தவர்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல்.

இந்த அங்கத்தவர்களின் சந்தா தொகையை பங்குனி மாதச் சம்பளத்தில் அறவீடு செய்து அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அறவிடாத பட்சத்தில் தாபனக்கோவைப்படி சட்ட நடவடிக்கைக்குச் செல்ல நேரிடும் என்றும் சங்கம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பியதாகக் கூறப்படும் கடிதத்தின் பிரதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## கௌரவிப்புக்கு ஆவணங்களை கையளிக்குக!

யாழ்ப்பாணம், பெப். 25
கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்துக்கு வருடாந்த அங்கத்துவக் கட்டணம் செலுத்தும் உறுப்பினர்களது பிள்ளைகளுக்கான வருடாந்த கௌரவிப்பு விழா நடைபெறவுள்ளது.

எனவே கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தின் வருடாந்த அங்கத்துவ கட்டணம் செலுத்தும் உறுப்பினர்களது பிள்ளைகளில், 2019ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களும், 2018ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரண தர பரீட்சையில் 5ஏ க்கு மேல் பெற்றவர்களும், 2018ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழகத்துக்கு அனுமதி கிடைத்தவர்களும் தங்களின் ஆவணங்களை அதிபர் அல்லது கிராம அலுவலர் உறுதிப்படுதலுடன் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஐ-222)




# கால்கோள் விழாவும் பூங்கா திறப்பும்

கொடிகாமம், பெப். 25
மட்டுவில் தெற்கு வளர்மதி முன்பள்ளியின் சிறுவர் பூங்கா திறப்பு விழாவும் கால்கோள் விழாவும் கலைவிழாவும் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மட்டுவில் தெற்கு வளர்மதி கல்விக் கழக அரங்கில் சனசமூக நிலைய தலைவர் சி.டினேசன் தலைமையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன் கலந்துகொண்டார். கௌரவ விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப், வலிகாமம் வலயக் கல்வி பிரதிக்கல்விப் பணிப்பாளரும் நிலையத்தின் செயலாளருமான சி.மதியழகன், சாவகச்சேரி பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் க.சுபாஸ்கரன் மற்றும் கனடாவில் வசிப்பவரும் கல்விக் கழக இணைப்பாளருமான பொன்.கந்தையா ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் மட்டுவில் தெற்கு வளர்மதி மீனாட்சி அம்மன் ஆலய முன்றிலில் இருந்து விருந்தினர்கள் சிறுவர் பூங்காவிற்கு அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவினை அவரே திறந்து வைத்தார். சிறுவர் பூங்காவில் விருந்தினர்களால் மரநடுகை நிகழ்வும் இடம்பெற்றது. தொடர்ந்து முன்பள்ளி சிறுவர்களின் கலைநிகழ்வுகளும் கால்கோள் விழாவும் இடம்பெற்றன. (ந-159,131)

## செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், பெப்.25
ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் யோ.ஜெகஆனந்தம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி சு. சண்முகலிங்கம், கௌரவ விருந்தினராக திருமதி குகனேசன் ஆகியோர் கலந்து கொள்வர். (க)

# பயிற்சிக்கு நிதி இல்லை என்றுகூறி விலகாதீர்கள்!

## பிரதேச செயலர் ஊடாக விண்ணப்பிக்க பெண்களுக்கு அதிகாரி அறிவுறுத்து

**கொடிகாமம், பெப். 25**
**“ஆடை வடிவமைத்தல், அழகுக்கலை, மனைப் பொருளியல் பயிற்சிகளுக்கு வருபவர்களிடம் இடைவிலகல் பிரச்சினையாகவுள்ளது. இடைவிலகலுக்கு தனியே நிதி என்பது பிரச்சினை அல்ல. எனவே நிதி என்ற காரணத்தை வைத்துக் கொண்டு இடைவிலகுவது பொருத்தமல்ல. நிதி பெற பிரதேச செயலர் ஊடாக புலம்பெயர் உறவுகளிடம் விண்ணப்பிக்க முடியும்.”**



இவ்வாறு தெரிவித்துள்ளார், வட மாகாண திறைசேரி (நிதி) பிரதிப் பிரதம செயலாளர் இ.பத்மநாதன். வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் நடத்தியஆடை வடிவமைத்தல், அழகுக்கலை, மனைப் பொருளியல் கண்காட்சி, சங்கிலியன் மன்றம் பருத்தித்துறை வீதி நல்லூரில் அமைந்துள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.


அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிராம அபிவிருத்திச் சங்கம் என்பது நாட்டின் அபிவிருத்தியில் நாட்டின் முதுகெலும்பாக இருக்கவேண்டிய அமைப்பு.

அந்த அடிப்படையில்தான் இலங்கை அரசு, கிராம அபிவிருத்தித் திணைக்களங்கள் காலாதிகாலமாக இயங்கி வருகின்றன. கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்குப் பொறுப்பாக மாகாண சபைகள் இருந்தாலும் அவற்றை நேரடியாகக் கண்காணிக்கும் பொறுப்பு அந்தந்தப் பிரிவு பிரதேச செயலகங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமாக இருந்தால் ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு காணவேண்டும். அதற்கு பொது அமைப்புகள் உருவாக்கப்பட்டு மக்களுக்குப் பங்களிப்பாற்ற வேண்டும்.

உண்மையில் வசதியற்றவர்கள் வல்லமை குறைந்தவர்களை ஒருங்கிணைத்து மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்கின்ற அமைப்புக்களாக அவை இயங்க வேண்டும்.

நிதியை ஈடு செய்வதற்குத்தான் புலம்பெயர் உறவுகள் பலவழிகளிலும் உதவி செய்யத் தயாராக இருக்கின்றனர். இந்தப் பயிற்சிக் காலத்தில் தேவையான உபகரணங்களுக்கு உதவி போதாத பட்சத்தில் அந்தப் பயிற்சிக்கு எவ்வளவு நிதி தேவை என்பதை, திட்டங்களை பிரதேச செயலர் ஊடாக புலம்பெயர் உறவுகளுக்கு அனுப்பவேண்டும். அதன் மூலமாக இத்தகைய பயிற்சி பெறுபவர்களுக்குக் கொடுக்கின்ற பணத்தைவிட மேலும் உதவி செய்ய அவர்கள் தயாராக இருக்கின்றனர் - என்றார். (த-159)



யாழ்ப்பாணம் பெரியவிளான் சந்தியில் பயணிகளுக்கான தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது. செல்வராணி செந்தூரன் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட தரிப்பிடம் வலிதென்மேற்குப் பிரதேசசபைத் தவிசாளர் அ.ஜெபநேசனால் மக்கள் பாவனைக்குத் திறக்கப்பட்டது. (க-63)

## சமுர்த்தி அங்கத்தவர்களுக்கு அறிவூட்டும் வேலைத் திட்டம்

யாழ்ப்பாணம், பெப்.25
நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கத்தைக் கிராமத்தினுள் செயற்படுத்தும் நோக்கத்துடன் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கத்தவர்களுக்கான அறிவூட்டல் வேலைத் திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் மேற்கொள்ளப்படும் இந்த வேலைத் திட்டம் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் எதிர்வரும் 28ஆம் திகதிவரை நடைபெற்று வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சமுர்த்தி உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்படும் இந்த அறிவூட்டல் வேலைத் திட்டக் கலந்துரையாடல்களில் சமுர்த்தி வேலைத் திட்டம் தொடர்பாக கிராமத்தில் உயிர்ப்பூட்டுதல் மற்றும் சுபீட்சத்தின் நோக்கத்தை அடையக் கூடிய 10 அம்சக் கொள்கைகள் தொடர்பாக விளக்கங்கள் வழங்கப்படுகின்றன.

தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை, சிநேகபூர்வ மற்றும் பிரியாத வெளிநாட்டுக் கொள்கை, தூய்மையான அரச நிர்வாகம், மக்களுக்குப் பொறுப்புக் கூறும் யாப்புத் திருத்தம், பயனுள்ள பிரஜை, பயனுள்ள மனித வளம், மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரம், தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகம், பௌதீகவள அபிவிருத்தி, பேண்தகு சூழல் முகாமைத்துவம், சட்டத்தை மதிக்கக் கூடிய ஒழுக்க நெறியுடைய மற்றும் குணநலம் கொண்ட சமூகம் ஆகியவற்றுக்கு அமைய மக்களைப் பலப்படுத்தும் வேலைத் திட்டத்தின் ஊடாக சமுர்த்தித் திட்டத்தில் செயற்படுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பாகவே அறிவூட்டும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (த-39)

## அர்ப்பணிப்பு உடையவர் அதிபர் தேவதயாளன்

யாழ்ப்பாணம், பெப். 25
சிறந்த கல்வி நிர்வாகியாகவும் அதிபராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றுச் சென்றிருக்கும் இணுவில் இந்துக்கல்லூரி அதிபர் நாவுக்கரசு தேவதயாளன், அர்ப்பணிப்பு சேவைசெய்தார் என்று பாராட்டி மதிப்பளிக்கப்பட்டார்.

அவர் தற்போது யாழ்ப்பாண மாவட்டக் காணி இணக்க சபைத் தலைவராகச் செயற்படுகின்றார்.


அவருக்கு யாழ்ப்பாண மாவட்டக் காணி சிறப்பு மத்தியஸ்தர்கள் ஒன்றிணைந்து மணிவிழா நிகழ்வை நடத்தினர். அதில் மேற்கண்டவாறு கூறி பாராட்டப்பட்டார். (த-50)

# இரண்டு கடைகள் முற்றாக தீக்கிரை

## எருக்கலம்பிட்டிச் சந்தியில் சம்பவம்

மன்னார், பெப்.25

ஐந்து கடைகளைக் கொண்ட கடைத்தொகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு கடைகள் முற்றாகத் தீக்கிரையாகின.




இந்த விபத்து மன்னார் தலை மன்னார் பிரதான வீதி எருக்கலம்பிட்டிச் சந்தியில் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை நடந்துள்ளது.

கடைத்தொகுதியில் தீ பரவியதைக் கண்ட அந்தப் பகுதி மக்கள் உடனடியாக கடை உரிமையாளர்களுக்குத் தெரியப்படுத்தினர். பேசாலைப் பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், பொது மக்களின் உதவியுடன் தீயைக் கட்டுப்படுத்தினர். இராணுவத்தினரும் தீயணைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

விபத்தில் இரண்டு கடைகள் முற்றாகத் தீக்கிரையாகின. ஏனைய மூன்று கடைகள் தீ விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளன.

உணவகம் மற்றும் மின் உபகரணம் திருத்தும் நிலையம் என்பன தீக்கிரையாகின. அதனால் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் தீக்கிரையாகின எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் வெளியாகவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-56)

## கடற்றொழிலாளர் சம்மேளன நிர்வாகம் தெரிவு அடுத்தமாதம்

முல்லைத்தீவு, பெப். 25

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளன, பழைய நிர்வாகம் கலைக்கப்பட்டு, புதிய நிர்வாகத் தெரிவு அடுத்த மாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாப்பின் அடிப்படையில் கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் நிர்வாகம் இரண்டு வருடங்களுக்கொருமுறை புதிப்பிக் கப்படவேண்டும்.

முல்லைத்தீவில் இடம் பெறும் சட்டவிரோத கடற்றொழிலை முற்றாகத் தடைசெய்யக்கோரி, 2018ஆம் ஆண்டு கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில், மீனவர்கள் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர். அதன்போது முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் துறைத் திணைக்களம் சேதமாக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தை தலைமையேற்று நடத்தினர் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் உட்பட கடற்றொழிலாளர் சம்மேளன நிர்வா கத்தில் முக்கிய பொறுப்புக்களில் இருந்தவர்களும் கைதுசெய்யப்பட்டு ஒரு வருடத்துக்கும் மேலாக வழக்கு நடைபெற்று வந்தநிலையில், கடந்த டிசெம்பர் 9 ஆம் திகதி வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. இதனால் அந்த நிர்வாகம் மூன்று வருடங்களுக்கும் மேலாக புதுப்பிக்கப்படாமல் இருந்துள்ளது. (து-246)

## பரிசளிப்பு விழா





கிளிநொச்சி, பெப்.25

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

கல்விவளர்ச்சிஅறக்கட்டளைத்தலைவரும்யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளருமான த.சத்தியமூர்த்தி தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

2019 ஆம் ஆண்டு தரம் ஆறு முதல் உயர்தர கணித விஞ்ஞான பிரிவுகளில் திறமையான மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ-214)

## மின்தடை

யாழ்ப்பாணம், பெப்.25

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் இன்று செவ்வாய்க்கிழமையும், நாளை புதன்கிழமையும் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று செவ்வாய்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா மாவட்டத்தில்** சாம்பல்தோட்டம், வவுனியா நகரத்திலிருந்து (கண்டி வீதி) பூஓயா வரை, மதவுவைத்தகுளத்திலிருந்து பண்டாரிக்குளம் வரை, ஈரப்பெரியகுளம், யோசப் படை முகாம், மூன்றுமுறிப்பு இராணுவ முகாம், இலுப்பைக்குளம், வவுனியாவிலிருந்து (மன்னார் வீதி) நெளுக்குளம் ஊடாக இராஜேந்திரகுளம் வரை, பட்டாணிச்சூரிலிருந்து பம்பைமடு வரை, வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி, பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், சுயன் அரிசி ஆலை, அஷ்வி அரிசி ஆலை, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, லீலா ஆலை, பூந்தோட்டம், மகாரம்பைக்குளம், வைரவபுளியங்குளம், ஆதிவிநாயகர் கோவிலடி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

இதேவேளை நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்ப்பாண மாவட்டத்தில்** வராத்துப்பளை, புனிதநகர், கற்கோவளம், தும்பளை, வெளிச்சவீடு, முதலாம் குறுக்குத்தெரு, இரண்டாம் குறுக்குத் தெரு, மூன்றாம் குறுக்குத் தெரு, ஜெயந்தா கைத்தொழிற்சாலை பிறைவேற் லிமிற்ரெட் கற்கோவளம் ஆகிய இடங்களிலும் வவுனியா மாவட்டத்தில் சாம்பல்தோட்டம், மூன்று முறிப்பிலிருந்து பூஓயா வரை-

ஈரப்பெரியகுளம் இராணுவ முகாம், ஈரப்பெரியகுளம் யோசப் படை முகாம், மூன்றுமுறிப்பு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் **மன்னார் மாவட்டத்தில்** சிலாவத்துறை, முள்ளிக்குளம் அரிப்பு, சிலாவத்துறை கடற்படைமுகாம், முள்ளிக்குளம் கடற்படைமுகாம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

## ஆங்கில தினமும் பரிசளிப்பும் இன்று

கிளிநொச்சி, பெப்.25

கிளிநொச்சி கல்வி வலயத்தின் ஆங்கில தினமும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் கலந்து கொள்வார் என்று கிளிநொச்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.என்.சுதர்சன் அறிவித்துள்ளார். (ஐ)

# திருப்பாடுகள் நாடகத்துக்கான பிரதி வழங்கல்

யாழ்ப்பாணம், பெப்.25

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் 'இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பைச் சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்துக்கான பிரதி வழங்கும் நிகழ்வு, தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு மார்ட்டீன் ... வா ணத்தில் ... ந்துள்ள ... கலாமு ... 'கலை ஞான சுரபி' தியான இல்லத்தில் நடைபெறும்.

நிகழ்வில் மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயப் பங்குத்தந்தை அருள்திரு. ம.டேவிற் அடிகளார் ஆசியுரை நிகழ்த்துவார். ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்கள் உட்பட ஏனைய துறைசார்ந்த பிரிவுகளுக்கான பிரதிகளையும் வழங்குவார்.

திருப்பாடுகளின் நாடகம் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நான்கு நாள்களுக்கு 'காவிய நாயகன்' என்னும் பெயரில் மாலை 6.45 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க)

## வீடுபுகுந்து தாக்கிவிட்டு பெண்ணிடம் கொள்ளை

சாவகச்சேரி, பெப். 25
வீடு புகுந்த முகமூடிக் கொள்ளையர், பெண்ணைத் தாக்கிவிட்டு அலைபேசி மற்றும் பணம் என்பவற்றை அபகரித்துச் சென்றனர்.
சம்பவம் சாவகச்சேரி மட்டுவில் தெற்கில் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.
கொள்ளையரின் தாக்குதலில் காயமடைந்த அதே இடத்தைச் சேர்ந்த 38 வயதுடைய பெண், சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-9)

# தலைமைத்துவப் பண்பு மாணவருக்கு அவசியம்

## சாரணிய சங்கத் தலைவர் வலியுறுத்து



சாவகச்சேரி,பெப்.25
**தலைமைத்துவப் பண்பு மாணவர்களுக்கு மிக அவசியமானது. அந்தப் பண்பு அற்றுப் போனமையாலேயே தவறான வழிகளை நாடுகின்றனர். இன்று தமிழர் பிரதேசத்தில் நாம் வெட்கப்படும் அளவுக்கு மாணவர்களின் பண்புகள், விழுமியங்கள் சீரழிந்துகொண்டு செல்கின்றன. அவற்றை ஈடு செய்ய தலைமைத்துவப் பண்புகளை உருவாக்க வேண்டும். அதற்கு சாரணர் அமைப்பு உதவியாக இருக்கும்.**

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட சாரணிய சங்கத் தலைவரும், கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் அதிபருமான கி.விக்னராஜா தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்ட சாரணர் சங்கத்தின் உலக சாரணர் தினக் கொண்டாட்டமும் பேடன்பவல் தின விழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:
மாணவர்கள் சாரணர் அமைப்பில் சேர வேண்டும். யாழ்.மாவட்டத்தில் முன்னுதாரணமாக சென். ஜோன்ஸ் கல்லூரியில் அதிபர் உட்பட அனைத்து ஆசிரியர்களும், மாணவர்களும் சாரணர்களாக இருக்கின்றனர். அந்தப் பாடசாலையின் ஒழுக்கம், கட்டுப்பாடு, தலைமைத்துவ ஆற்றல் சான்றாகவுள்ளது. பல பெற்றோர்கள் அந்தப் பாடசாலையில் பிள்ளைகளை இணைப்பதற்கு இது காரணமாக இருக்கிறது.
மாணவர்கள் எதிர்காலத்தில் ஒரு சிறந்த தலைவர்களாக வருவதற்கும் சாரணர் பண்புகள் உதவியாக இருக்கும். மாணவர்கள் தன்னம்பிக்கை, துணிவு, சிக்கனம் உள்ளிட்ட நற்பண்புகளைக் கற்றுக் கொள்வார்கள். மாணவர்கள் பெறுகின்ற ஒவ்வொரு பயிற்சியும் பின்னாளில் வெற்றிகளுக்கு காரணமாக அமையும் - என்றார். (சு-159,131)

# இளைஞர் எம்.பிக்கள் முல்லையில் தெரிவு

முல்லைத்தீவு, பெப். 25
இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவில், முல்லைத்தீவிலிருந்து 6 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தத் தேர்தல் நாடு முழுவதும் நடைபெற்றது. அதன்படி, முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய், ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, மணலாறு ஆகிய 6 பிரதேச செயலர் பிரிவுகளிலும் இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்புகள் நடைபெற்றன.
முல்லைத்தீவு மாவட்டத்தில் 22 பேர் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தனர்.
அதன்படி, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் 3 வேட்பாளர்கள், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் 3 வேட்பாளர்கள், கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் 5 வேட்பாளர்கள், மணலாறு பிரதேச செயலக பிரிவில் 2 வேட்பாளர்கள், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 5 வேட்பாளர்கள், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 4 வேட்பாளர்கள் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தனர்.
இதன்படி புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சிவராசா சிவறஞ்சன் 304 வாக்குகளாலும், கரைதுறைப்பற்று பிரதேசத்தில் தெய்வேந்திரம் திருநீபன் 215 வாக்குகளாலும், ஒட்டுசுட்டானில் நமசிவாயம் டிலக்சன் 285 வாக்குகளாலும், துணுக்காயில் கணேசலிங்கம் வினுஜன் 270 வாக்குகளா லும், மாந்தை கிழக்கு பத்மநாதன் சயந்தன் 199 வாக்குகளாலும், வெலிஓயா பிரதேசத்தில் கீன்கென்ட முடியான்சலாகே 127 வாக்குகளாலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-246)

## வவுனியாவிலும் நால்வர் தெரிவு

வவுனியா, பெப். 25
நாடு முழுவதும் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலில், வவுனியா மாவட்டத்தில் நால்வர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்த மாவட்டத்தில் க.கோகுலன், அ.கொன்சீசியஸ், ப.ராமேஸ்வரன், எச்.பிரியதர்சன் ஆகியோரே வெற்றி பெற்றுள்ளனர்.
இதில் வவுனியா பிரதேச செயலகப் பிரிவில், க.கோகுலன் -359, க.சிம்சுபன்- 139, ஜ.மின்ஹாஜ் - 43, கு.பவேந்திரன் -15 ஆகியோரும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் அ.கொன்சீசியஸ் - 282, கா.கிரிதரன் -259, மொ.ரிப்நாஸ் - 215 ஆகியோரும், வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் ப.ராமேஸ்வரன் - 253, யொ.மிதுர்சன் - 128 ஆகியோரும், வவுனியா தெற்கு பிரதேச செயலகப் பிரிவில் எச். பிரியதர்சன் - 133, எஸ்.செனவிரத்ன - 122 ஆகியோர் போட்டியிட்டிருந்தனர். (த-18)

## தனியார் துறையினருக்கும் வேண்டும் சம்பள அதிகரிப்பு



யாழ்ப்பாணம், பெப்.25
அரச ஊழியர் மற்றும் தனியார் துறையினருக்கும் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது போன்று, கூட்டுறவுத்துறையினருக்கும் சம்பள உயர்வு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட்டுறவாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.
அரசு, தனியார் துறையினருக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்குள் கூட்டுறவுத் துறையும் உள்ளடக்கப்படவேண்டும். சம்பள உயர்வின்றி பெரும் இக்கட்டான நிலையில் அவர்கள் வாழ்ந்துவருகின்றனர்.
கூட்டுறவுத்துறை இலாபம் அடையும் பட்சத்திலேயே சம்பள உயர்வு மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.
வருமானங்கள் மற்றும் கொடுப்பனவுகள் இன்றி கூட்டுறவுப் பணியாளர்கள் பெரும் இக்கட்டான நிலை யில் தமது குடும்ப வாழ்க்கையை நடத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-17)

## மழைக்கு சாத்தியம்

கொழும்பு,பெப்.25
கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும், ஹம்பாந்தோட்டை, முல்லைத்தீவு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யக் கூடிய சாத்தியம் நிலவுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.



அநுராதபுரம் மாவட்டத்தில் சிறிதளவான மழைவீழ்ச்சியும், களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னரும் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும்.
வடகிழக்குத் திசையிலிருந்து காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 3040 கிலோ மீற்றர் வரை காணப்படும். மன்னாரிலிருந்து புத்தளம் மற்றும் கொழும்பு ஊடாக களுத்துறை வரையான கடற்பரப்புகளிலும், காலியிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 5060 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும்.
மன்னாரிலிருந்து புத்தளம் மற்றும் கொழும்பு ஊடாக களுத்துறை வரையான கடற்பரப்புகளும், காலியிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் என்று திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (க)

# உலக சாரணர் தினமும் பேடன் பவல் விழாவும்







சாவகச்சேரி,பெப்.25
கிளிநொச்சி மாவட்ட சாரணர் சங்கத்தின் உலக சாரணர் தின நிகழ்வும், சாரண நிறுவுநர் பேடன் பவல் தினவிழாவும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெற்றன.
மாவட்ட சாரண ஆணையாளர், எம்.பிரேம்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரசபை தவிசாளர் திருமதி. சிவமங்கை இராமநாதன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், கிளிநொச்சி இந்துக்கல்லூரி அதிபர் இ. விக்னராஜா, தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந. சிறிகாந்தா, தென்மராட்சி பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் த.கோகுலன், கௌரவ விருந்தினராக கொடிகாமம் பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி திருமதி சி.தவமலர் சாரணர் சங்கத்தின் தலைமைக் காரியாலய ஆணையாளர் என்.சௌந்தரநாயகம் பீ.அஜீத், காங்கேசன்துறை சாரணர் மாவட்ட ஆணையாளர் க.ஜெயபவான் உட்பட உதவி சாரணர் ஆணையாளர்கள், சாரண ஆசிரியர்கள், சாரண தலைவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ஜ-9.131)

# புலிகளுக்குத் தடை; நீடித்தது மலேசியா



கொழும்பு, பெப். 25

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ந்தும் தடை செய்யப்பட்ட ஒரு தீவிரவாத அமைப்பாகவே கருதப்படும் என்று மலேசியா அறிவித்துள்ளது.

விடுதலைப்புலிகள்மீதானதடையை மீள் பரிசீலனைக்கு உட்படுத்து மாறு மலேசிய சட்டமா அதிபர் முன் வைத்த பரிந்துரைக்கு பதிலளிக்கும் வகையில் மலேசிய உள்துறை அமைச்சர் முஹைடின் யஸின் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:

கடந்த 2014ஆம் ஆண்டு முதல் தடைசெய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பு, பொது அமைதி மற்றும் தேசிய பாதுகாப்புக்கு அச் சுறுத்தலை ஏற்படுத்தும் வகை யிலான கொள்கைகளைத் தொடர்ந் தும் கொண்டுள்ளது. அவற்றில், பணமோசடி தடுப்பு, பயங்கரவாத எதிர்ப்பு நிதியளிப்பு மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகளின் சட்டம் 2001இன் பிரிவு 66 பி (1) இன் கீழ் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடைப் பட்டியல் தயாரிக்கப் பட்டுள்ளது. பொலிஸ், பிற பாது காப்புத்துறை மற்றும் உளவுத் துறையின் தகவலின் அடிப்படை யில் இந்தப் பட்டியல் அமைந்துள் ளது. விடுதலைப் புலிகள் அமைப் பின் மீதான தடை குறித்த விடயத் தில் தலையிட சட்டமா அதிபருக்கு அதிகாரம் இல்லை. இந்தியா, கனடா, அமெரிக்கா மற்றும் பிரித் தானியா ஆகிய நாடுகளும் விடுத லைப் புலிகள் அமைப்பைத் தொடர்ந்தும் தீவிரவாத அமைப்புக ளின் பட்டியலிலேயே உள்ளடக்கி யுள்ளது - என்றார்.

மலேசிய ஆளும் பக்காத்தான் ஹரப்பன் எனப்படும் நம்பிக்கைக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சி யான ஜனநாயக செயல் கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர் கள் உள்ளிட்ட 12 பேருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை மலேசிய சட்டமா அதிபர் டொம்மி தோமஸ் சர்ச்சைக் குரிய வகையில் நேற்றுமுன்தினம் கைவிட்டிருந்தார்.

குறித்த 12 பேரும் விடுதலைப் புலி களின் ஆதரவாளர்களாக இருந் தனர் எனவும் அந்த அமைப்பைப் புதுப்பிக்க நிதி சேகரித்தனர் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், குறித்த 12 பேர் மீதான குற்றச்சாட்டுகளைக் கைவிடுவதற் கான தனது தீர்மானத்தின் கார ணங்களைத் தெளிவுபடுத்தி, பயங் கரவாத அமைப்புக்களின் பட்டிய லைக் கொண்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை மீள் பரிசீலனை செய்யுமாறு சட்டமா அதிபர் பரிந்து ரைத்திருந்தார். இந்தப் பின்னணி யிலேயே அந்த நாட்டின் உள்துறை அமைச்சு இந்தத் தகவலை வெளி யிட்டுள்ளது. (ம)



# கிராமங்களிலும் அதிகரித்துள்ளது போதைப்பொருள்

## மைத்திரி அதிருப்தி

கொழும்பு, பெப். 25

நகரங்களில் மட்டுமன்றி, கிராமங்களிலும் தற்போது போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரி வித்தார். பொலனறுவையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகள் தொடர்பாக மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டியதொரு காலத்தில்தான் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கி றோம். நகரம் முதல் சிறிய கிராமம் வரை, அனைத்து இடங்களிலும் போதைப்பொருள் பாவனை தலைத் தூக்கியுள்ளது. இதனால், எத்தனை பேரின் வாழ்க்கை அழிவடைந்துள்ளது என்பதை நாம் அவதானித்துக் கொண்டுதான் வருகிறோம்.

ஒரு காலத்தில் போதைப்பொருள் நகரத்தில் மட்டும் தான் பாவனையில் இருந்தது. இன்று, கிராமங்களி லுள்ள பாடசாலை மாணவர்களும் இதனைப் பயன் படுத்துகிறார்கள். இவர்களுக்குப் போதைப்பொருள் தொடர்பான முழுமையான தெளிவு கிடையாது. இத னைப் பெற்றோர்தான் அவதானத்தில் எடுக்கவேண் டும். இதிலிருந்து விடுபட விளையாட்டுக்களில் மாண வர்கள் அதிகமாக ஈடுபட வைக்க வேண்டும். இதற் கான ஆலோசனைகளைப் பெற்றோர் மற்றும் ஆசிரி யர்கள் வழங்க வேண்டும் - என்றார். (ம)



# தாய்மொழிக் கொண்டாட்டம் சிறப்புடன் மட்டக்களப்பில்!

கொழும்பு, பெப். 25

உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு தமிழ் மொழியைக் கொண்டாடும் நிகழ்வு 'ஊரோடு உறவாடுவோம்' எனும் தொனிப் பொருளில் மட்டக்களப்பில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

மட்டக்களப்பு, கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத் தின் ஏற்பாட்டில் உப்புக்குளம் எனும் கிராமத்தில் அந்தக் கிராம மக்களின் முழுப் பங்களிப்புடன் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 190க்கும் மேற் பட்ட அறிஞர்களின் உருவப் படங்கள் மற்றும் முன்னோர் பயன்படுத்தியதும் தற்போது பாவனையில் இல்லாததுமான பொருள்கள் காட்சிப்படுத்தப்பட் டன. அத்துடன் தாய்மொழி வாழ்த்து, கரகம், காவடி, நாட்டார் பாடல், மீனவர் பாடல், தமிழ் தலைவர்களின் பாடல் எனப் பல ஆற்றுகைகள் மாணவர்க ளாலும் கிராம மக்களாலும் நிகழ்த்தப்பட்டன.

மேலும், மொழி சார்ந்து பல உரையாடல்கள் நடைபெற்றமை யுடன் 'விவசாயத் தொழிலின் பின்னுள்ள மொழி' எனும் தலைப்பில் கிராம முதியோர் களை வைத்து ஆக்கபூர்வமான கலந்துரையாடல் செயல் நீதி யாக இடம்பெற்றது. (ம)



# படுகாயமடைந்த போராளி சாவு



கொழும்பு, பெப். 25

இறுதிப்போர் நடைபெற்ற காலப் பகுதியில், எறிகணை வீச்சில் படுகாயமடைந்த விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பி னர் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் , கல்வியங் காட்டை சேர்ந்த சிவானந்தராசா ஜெயானந்தன் என்ற 43 வயது டைய மூன்று பிள்ளைகளின் தந்தையே சுகவீனம் காரண மாக உயிரிழந்தவராவார். வன்னி யில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து பணியாற்றியிருந்த இவர், 2009ஆம் ஆண்டு பெப் ரவரி மாதம் புதுக்குடியிருப்பு இர ணைப்பாலை பகுதியில் எறி கணைத் தாக்குதலில் சிக்கி படு காயமடைந்திருந்தார். இதனைத் தொடர்ந்து தொடர் சிகிச்சை பெற்றுவந்த இவருக்கு அண் மைக் காலமாகப் புற்றுநோய் தாக்கமும் ஏற்பட்டிருந்த நிலை யில் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார். (ம)

## இலங்கையில் இருந்து

# ஆசனவாய்க்குள் வைத்து தங்கக்கட்டிகள் கடத்தல்!

கொழும்பு, பெப். 25

இலங்கையில் இருந்து சென்னை சென்ற பய ணிகள் இருவர் தமது ஆசனவாய் பகுதிக்குள் தங்கக்கட்டிகளை வைத் துக் கடத்தியமையை சுங் கத் திணைக்கள அதிகா ரிகள் கண்டறிந்து கடத் தலை முறியடித்தனர்.

நேற்றுமுன்தினம் அதி காலை 3.30 மணிக்கு சென்னை சென்ற ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் பயணித்த சென்னையைச் சேர்ந்த பயணிகள் இருவரே தமது ஆசனவாய்க் குள் வைத்து இலங் கையில் இருந்து தங் கக்கட்டிகளைக் கடத்தி யுள்ளனர்.

அவர்களிடம் இருந்து சுமார் 700 கிராம் தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட் டன. (ம)



# விவசாய உற்பத்திகளுக்கு 10வீத கழிவை நிறுத்தவும்

## விவசாயிகளை வதைக்காதீர் என்று உள்ளூராட்சி சபைகளுக்குக் கடிதம்


சாவகச்சேரி, பெப். 25

யாழ்ப்பாண மாவட்ட பொதுச் சந்தைகளில் நடைமுறையில் உள்ள 10 வீத கழிவுடன் பொருள்கள் கொள்வனவு செய்யும் நடைமுறையை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு சிவன் அறக்கட்டளை நிறுவுநர் கணேஸ்வரன் வேலாயுதம், பொதுச் சந்தை உள்ள உள்ளூராட்சி சபைகளைக் கேட்டுள்ளார்.

விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்கின்றபோது விவசாயி பல்வேறு கஷ்டங்களுக்கு முகம்கொடுத்து உற்பத்திகளை மேற்கொள்கிறார். பயிரிட்டு தண்ணீர் ஊற்றி, தண்ணீர் இறைத்து, பசளையிட்டு, நிலத்தில் இறங்கி வெயில் மழை என்று பாராது உழைத்து அறுவடைக் காலம் வரும்வரை காத்திருந்து காய்கறிகளைப் பெறுகின்றனர். அவர்களின் அவ்வளவு நாள்களின் உழைப்பையும் பாராது சந்தைகளில் விவசாயிகளிடமிருந்து உற்பத்திப் பொருள்களை மொத்தமாக வாங்கும் வியாபாரிகள் உற்பத்தியாளர்களின் கஷ்டத்தை உணராது பேரம் பேசிக் கொள்வனவு செய்கிறார்கள். 10 வீத கழிவை வழங்கி பொருள்களைக் கொள்வனவு செய்கிறார்கள். இதனால் உற்பத்தியாளர்களின் உழைப்பு சுரண்டப்பட்டு கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

கொள்வனவாளர்கள் கொள்வனவு செய்யும் பொருள்களுக்கு மேலும் விலை நிர்ணயம் செய்து லாபத்தில் பொருள்களை விற்பனை செய்கிறார்கள். எனவே உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படாத வகையில் விவசாய உற்பத்திகளுக்கு கழிவு வழங்காது மொத்த விலையில் உள்ளூராட்சி சபைகள் கொள்வனவுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடிதத்தில் கேட்டுள்ளார்.

10 வீத கழிவு வழங்கும் நடவடிக்கை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைகளில் நிறுத்தப்பட்டுள்ளன. பருத்தித்துறை, சாவகச்சேரி, வலிகாமம் வடக்கு, வலி.தெற்கு, வலி. மேற்கு, வலி.தென்மேற்கு, காரைநகர், வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்களுக்கும்இதுபற்றிவிவரித்துள்ளேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (த-9)



# 100 வீடுகளுக்கு அடிக்கல்

நானுஓயா சமர்செட் ஈஸ்டல் தோட்டத்தில் 50 தனி வீடுகளும், கொட்டகலை யுனிபீல்ட் தோட்டத்தில் 50 தனி வீடுகளும் அமைப்பதற்கான அடிக்கல் நேற்று நடப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் "மலையக எழுச்சி" செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் நெறிப்படுத்தலில் "எங்கள் குடும்பம் எங்கள் வீடு" எனும் தொனிப்பொருளின் வீடுகளுக்கான அடிக்கல் நடப்பட்டது. அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் வீடுகளுக்கான அடிக்கல்லை நட்டார். நிகழ்வில் நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், கொட்டகலை பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (க)

# சிலரது பகல் கனவு எப்போதும் பலிக்காது

## அமைச்சர் தொண்டமான் சாடல்

ஹற்றன்,பெப்.25

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை எந்தச் சந்தர்ப்பத்திலும் அசைக்க முடியாது. எம்மைப் பலவீனப்படுத்தலாம் என சிலர் பகல்கனவு காண்கின்றனர். முன்வைத்த காலை பின்வைக்காது நாம் எமது பயணத்தைத் தொடருவோம் என்று சமூக வலுவூட்டல் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

நானுஓயா சமர்செட் ஈஸ்டல் தோட்டத்தில் தனி வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

2002 இல் நுவரெலியாவிலுள்ள காங்கிரஸ் அலுவலகத்தைக் கைப்பற்றுவதற்கு ஒருவர் முயற்சித்தார். அதன்போது இடம் பெற்ற சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு 2003 எனக்கும், ஏனைய சிலருக்கும்எதிராகவும்பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து அந்த நபரால் வழக்குத் தொடுக்கப்பட்டது.

எனினும், 18 ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று (நேற்று) தீர்ப்பு வெளியானது. அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் நான் விடுதலை செய்யப்பட்டுள்ளேன். எனவே, வாய்மையே வெல்லும் என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

காங்கிரஸையோ அதன் சொத்துகளையோ அசைக்க முடியாது என்பது பலமுறை உறுதியாகியுள்ளது. அப்படி நடக்கும் எனக் கனவு காண்பவர்கள் தாராளமாகக் காணட்டும். நாம் எமது வேலைகளைச் செய்வோம். கடந்த ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறுகளை எடுத்துக்கொண்டால் வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளிலேயே அன்னத்துக்கு அதிகம் வாக்குகள் விழுந்தன.

எனினும், ஐந்தாண்டுகள் நாம் அவர்களுடன் இருந்தமையால் சிறுபான்மையினத்தவர்கள் இருவருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன.

நாம் எதிரணியில் இருந்தபோதும் மலையக மக்கள் எம்மீது நம்பிக்கை வைத்து ஆதரவு வழங்கினார்கள். எனவே, முன்வைத்த காலை பின்வைக்காது சமூகத்துக்கான எமது சேவைகள் தொடரும். - என்றார். (க)

**வேலையாள்கள் தேவை**

யாழ்.பஸ்தரிப்பிடத்துக்கு அண்மையில் அமைந்துள்ள குளிர்பான நிலையத்துக்கு சிற்றுண்டி தயாரிப்பவர் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

நேரம்:- 7.- 4.30 (CS/31483)(6.17)

**072 699 4681, 078 495 7847**

**பணிப்பெண் தேவை**

வவுனியாவில் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யும் பணிப்பெண் உதவியாளர் 45 - 55 வயதுக்குட்பட்டவர் உடன் தேவை.
சம்பளம் 20,000/-
தனிநபர் விரும்பத்தக்கது.

**077 220 0627**

**வேலையாள்கள் தேவை**

PGT Finance நிறுவனத்தில் காசாளராக பணிபுரிய O/L, A/L படித்த ஆண்கள், மோட்டார் சைக்கிள் இருப்பின் உடனடியாக தொடர்பு கொள்ளவும். சம்பளம் 50000 - 80000 வரை பெறலாம். விற்பனை முகவர்களும் தேவை. சம்பளம் 30000-50000 வரை பெறலாம். கொடிகாமம் கொமர்ஷல் வங்கி அருகாமையில்.

தொடர்பு:
**077 9041 258, 021 314 9797**

**கண்ணீர் அஞ்சலி**



எமது கல்லூரியின் ஓய்வுநிலை ஆசிரியை

திருமதி

**ஷிவோன் நாளினி ரவீந்திரன்**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் சங்கம்,**
**புனித பத்திரிசியார் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

**அமரர் வேலுப்பிள்ளை தர்மலிங்கம் (துரை)**

பிறப்பு
20.06.1945

இறப்பு
08.03.2019



திதி:- துதியை

தந்தைக்கு இலக்கணமாய்
பாசத்தின் திருவுருவமாய் – எங்கள்
வாழ்க்கைக்கு வழிகாட்டிய – உங்கள்
நினைவுகளுடன் வாழ்வோம் எந்நாளும்

மடத்தடி கிழக்கு ஒழுங்கை,
சாவகச்சேரி வடக்கு. (CS/31380)(11.17)
**குடும்பத்தினர்.**

**மரண அறிவித்தல்**



திருமதி

**நடராஜா திருப்பதி**

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா திருப்பதி 23.02.2020 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா- விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா- தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் நடராசாவின் அன்பு மனைவியும், சோதிமதி (கனடா), சோதிராசா (பிரான்ஸ்), சோதிமலர், சோதிமணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பூலோக சிங்கம் (கனடா), திருநாதன், கமலாவதி (பிரான்ஸ்), இராஜேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கனகசபை, பஞ்சரத்தினம், புதுநாயகம், தருமலிங்கம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, பரஞ்சோதி, சிதம்பரப்பிள்ளை, இராசம்மா, ஏரம்பு ஆகியோரின் அன்பு மைத்துனியும், லவன் (கனடா), விஜயா (கனடா), பிரசாத் (கனடா), சோபியா (பிரான்ஸ்), சோபனா (பிரான்ஸ்), சோனா (பிரான்ஸ்), பிரதீபன் (ஜேர்மன்), பிரகாஸ், கஜன் (ஜேர்மன்), கரன், ரம்மியா, ராஜனா (லண்டன்), ரமீனா (லண்டன்), றஜந் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இலக்கம் 34/1, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (25.02.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

**34/1, கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**தொலைபேசி: 021 2222 384**

**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி ஆன் கியூரி ஆனந்தராஜா அவர்களின் பாசமிகு அன்புத் தந்தை

**இருதயநாதர் பீற்றர்தாஸ்**

அவர்களின் பிரிவுச் செய்திகேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் சங்கம்,**
**புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

(N/31479)(11.17)

# பிரேரணையிலிருந்து வெளியேறினால் தப்பிவிட்டோம் என எண்ணவேண்டாம்

## கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் காட்டம்

கொழும்பு, பெப். 25

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பிரேரணையில் இருந்து வெளியேறினால் அதிலிருந்து தப்பிவிட்டதாக இலங்கை நினைக்கக்கூடாது என முன்னாள் கிழக்கு மாகாணசபையின் உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் பொருளாளருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

இராணுவத் தளபதிக்கு ஏற்பட்ட பயணத்தடை எதிர்காலத்தில் இந்த நாட்டின் அரசியல் தலைவர்களுக்கும் ஏற்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை எனவும் அவர் எச்சரித்தார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'2009ஆம் ஆண்டில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இலங்கை அரசாங்கத்துடன் பல கட்டப் பேச்சுக்களை நடத்தியது. ஆனால் எந்தவித பயனும் கிடைக்கவில்லை.

அந்தவகையில் சர்வதேசத்தின் அனுசரணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அணுகியதன் பயனாக ஜெனீவாவில் மனித உரிமை ஆணையத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் புதிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டு ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த நேரம் 2015ஆம் ஆண்டு 30-1 என்ற தீர்மானம் ஜெனீவாவில் நிறைவேற்றப் பட்டது.

30-1 என்ற தீர்மானம் இலங்கையின் அனுசரணையுடன் அனைத்து நாடுகளின் ஒத்துழைப்புடன் எந்தவித எதிர்ப்புக்களுமின்றி ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

கால அவகாசத்தின் பின்னர் 2021ஆம் ஆண்டிற்கிடையில் அந்த தீர்மானம் முற்றுமுழுதாக நிறைவேற்றப்பட வேண்டும். இந்த நேரத்தில் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் இலங்கையின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 30-1 என்ற தீர்மானத்திலிருந்துதாங்கள்விலகுகின்றார்கள் என அறிவித்திருக்கின்றார்கள்.

புரையோடிப்போயுள்ள நாட்டின் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப் பட வேண்டும்.

நாங்கள் ஐக்கிய இலங்கைக்குள்ளே அதிகூடிய அதிகாரப் பரவலாக்கலை எதிர்பார்க்கிறோம்.

அத்துடன், போர்ச் சூழலின்போது படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நியாயம் வேண்டும், போர்க் குற்றவாளிகள் அடையாளங்காணப்பட்டு தண்டிக்கப் பட வேண்டும் என்ற அடிப்படையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த அரசாங்கத்தைக் கேட்டு நிற்கின்றது.




இலங்கையின் இராணுவத் தளபதிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அமெரிக்கா பயணத்தடையை விதித்திருக்கிறது.

இந்தநேரத்தில் இலங்கை அரசாங்கம் 30-1 என்ற தீர்மானத்திலிருந்து வெளியேறுவதாக அறிக்கை விடுவதன் மூலம் இதிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைக்கக்கூடாது.

இன்று இராணுவத் தளபதிக்கு ஏற்பட்ட பயணத்தடை எதிர்காலத்தில் இந்த நாட்டின் அரசியல் தலைவர்களுக்கும் ஏற்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை'-என்றார். (ம)

## பொதுமக்களுடன் மட்டுமே உடன்படிக்கை செய்வோம்!

*சஜித் இப்படித் தெரிவிப்பு*



கொழும்பு, பெப். 25

எதிர்க்கட்சி என்ற வகையில் பொது மக்களுடன் மாத்திரமே உடன்படிக்கைகளை மேற்கொள்வோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சஜித் மேலும் தெரிவித்ததாவது:

'முற்போக்கு எதிர்க்கட்சி ஒன்றினை நாம் உருவாக்கியுள்ளோம். இதில் முக்கியமானதொரு விடயமென்றால் நாம் யாருடனும் உடன்படிக்கைகளை செய்துகொள்ள மாட்டோம். இந்த நாட்டில் வாழும் மக்களுடன் மாத்திரமே உடன்படிக்கை செய்துகொள்வோம். சமாதான மக்கள் இயக்கம் என்பது அறிவுக்கு முக்கியத்துவம் வழங்குவதுடன் மதவாதம், இன பாகுபாடு ஆகியவற்றுக்கு ஒரு போதும் இடமளிக்காது'-என்றார். (ம)

## வெளிநாடுகளுடன் இணைந்து

# எதிர்க் கட்சியினர் கடும் சூழ்ச்சி!

## மஹிந்த விஷமப் பேச்சு



கொழும்பு, பெப். 25

நாட்டு மக்களின் செல்வாக்கைப் பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால், எதிர்க்கட்சியினர் வெளிநாடுகளுடன் இணைந்து சூழ்ச்சிகளை மேற்கொள்கின்றனர். இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

தெற்கு அதிவேகப் பாதையின் மாத்தறை முதல் ஹம்பந்தோட்டை வரையான பகுதி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது. இதன்போது உரையாற்றுகையிலேயே மஹிந்த இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'முன்னாள் வெளிவிவகார அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட முடிச்சுக்களை அவிழ்க்க வேண்டிய கடப்பாடு எங்களுக்கு தற்போது இருக்கின்றது. இதனை மிகவும் இலகுவாக அவிழ்த்துவிட முடியாது. உலகில் எந்தவொரு நாடும் தமது நாட்டுக்கு எதிராக கொண்டு வருகின்ற தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்குவதில்லை.

அதாவது தமது நாட்டுக்கு எதிர்ப்பு வருகின்றபோது எவரேனும் ஒத்துழைப்பு வழங்குவார்களா? நாமும் அதற்கு ஆதரவு வழங்குவோம். அதனுடன் இணைவோம் என அவர்கள் ஜெனீவாவில் இணை அனுசரனை வழங்கியுள்ளார்கள்.

இந்த விடயத்தில் முதற்கட்ட நடவடிக்கையாக, அந்த இணை அனுசரணையில் இருந்து விலகுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

அவர்கள் இந்த நாட்டு விகாரைகளுக்குள் அனுமதிக்கத் தகுதியானவர்களா? என்ற சந்தேகம் எங்களுக்கு எழுகின்றது' - என்றார். (ம)

## ஜெனீவா அறிக்கையை சரிசெய்தல் வேண்டுமாம்

கொழும்பு, பெப். 25

நாட்டைக் காட்டிக் கொடுத்த ஜெனீவா அறிக்கையை சரிசெய்ய வேண்டுமென வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். கடுவெல பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதேஅவர்இவ்வாறுகுறிப்பிட்டுள்ளார்.

குறித்த மக்கள் சந்திப்பில் தினேஷ் குணவர்தன மேலும் தெரிவித்ததாவது: 'ஜெனீவா தீர்மானம் உட்பட, நாட்டுக்கு எதிரான அனைத்து திட்டங்களும் ஒவ்வொன்றாக திருத்தப்பட்டு வருகின்றன.

மேலும்மதுபடையினரின்பாதுகாப்புக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தவறான அறிக்கை குறித்து சர்வதேசத்துக்கு முதலில் தெளிவுபடுத்த வேண்டும்.

இதேவேளை எதிர்காலத்தில், உள்ளூராட்சி அதிகாரிகளிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரம் மீண்டும் அவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று பிரதமர் கூறியுள்ளார்' என்றார். (ம)

# ஆளணி இன்றி சபைகள் சிரமம்

## ஆளுநர் கவனிக்கவேண்டும்; காரை. தவிசாளர் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், பெப். 25**

**திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் கருத்தமர்வுகள், பயிற்சிப் பட்டறைகள் மூலம் தேவையான அறிவுறுத்தல்கள் உள்ளூராட்சி சபை மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனாலும், அவற்றை முகாமை செய்வதற்கான கீழ் மட்ட ஆளணி இன்றியே சகல உள்ளூராட்சி சபைகளும் தினமும் சிரமப்படுகின்றன. எனவே புதிய ஆனணிகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்யவேண்டும்.**
**இவ்வாறு வலியுறுத்தியுள்ளார், காரைநகர் பிரதேச சபை தவிசாளர் வீ.கேதீஸ்வரதாஸ்.**

திண்ம கழிவுகள் தொடர்பான வேலைகள், கழிவு தண்ணீர் சுகாதார சுத்திகரிப்பு, வீதி சுத்திகரிப்பு, வாய்க்கால் சுத்திகரிப்பு, திண்மக் கழிவு சேகரித்தல், திண்மக் கழிவு தரம் பிரித்தல், பசளையாக்குதல் போன்ற அடிமட்ட வேலைகளை மேற்கொள்ளக்கூடிய வேலையாள் களை புதிதாக இனங்கண்டு ஆள் சேர்ப்புச் செய்யவேண்டும் என்று அவர் வலியுறுத்துகின்றார்.
தகரம், பொலித்தீன், பிளாஸ்ரிக், கண்ணாடி மற்றும் இலத்திரனியல் கழிவு, மருத்துவமனைக் கழிவு களை முகாமை செய்தல், தரம்பித்தல் மீள் சுழற்சிக்கு உட்படுத்தல் போன்ற திண்மக் கழிவு உபாயம் தொடர்பான பயிற்சி நெறி பொதுநூலக கேட்போர் கூடத்தில் சகல உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், செயலாளர்கள் சம்பந்தப்பட்ட அலுவலர் ஆகியோருக்கு அண்மையில் நடைபெற்றது.
அதில் தவிசாளர் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாண சபை செயற்பட்ட காலத்தில் திண்மக் கழிவுடன் தொடர்புபட்ட சகல உள்ளூராட்சி மன்றங்களும் பொறிமுறை வகுத்துச் செயற்பட்டிருக்க வேண்டும்.
அன்றைய காலப்பகுதியில் உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்நோக்கிய அட்டவணைப்படுத்தப்படாத பதவி அணி தொடர்பில் பொருத்தமான சகல பதவி ஆளணிகளையும் இனங்கண்டு ஆளணி அதிகரிப்புச் செய்திருக்கவேண்டும்.
தரம் பிரிக்கப்பட்ட திண்மக் கழிவு களை சிறுதுண்டங்களாக வெட்டிக் கொள்வதற்கான பொறித்தொகுதி களைப் பெற்றிருக்கவேண்டும்.
ஆனால் வடக்கு மாகாண சபை, முதலமைச்சர் இருந்த காலப் பகுதியில் எவ்வித முன்னெடுப்பும் முன்னெடுக்காத நிலையையே எங்களால் உணர முடிந்தது. எதிர்காலத்தில் வடக்கு மாகாண ஆளுநர் இந்த விடயங்களில் கவனம் செலுத்தவேண்டும் - என்றார். (த-50)








## 40 குடும்பங்களுக்கு உணவு பொதிகள்

புதுக்குடியிருப்பு,பெப்.25
புதுக்குடியிருப்பு குரவில் பகுதியில் உள்ள 40 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை புதுக்குடியிருப்பு குரவில் பகுதியில் நடைபெற்றது.
முல்லை ஸ்ரார் இசை சங்கமத்தின் ஏற்பாட்டில் ஜேர்மனி கோர்னெ ஒன்றியம், அகரம் உதவும் கரங்கள் அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ சபாரத்தினம் அறக்கட்டளை ஆகியவற்றின் நிதி உதவியில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.
நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் எஸ்.குகனேசன், ஸ்ரீசபாரத்தினம் அறக்கட்டளை தலைவரும் ஓய்வுபெற்ற உபதபால் அதிபருமான க.கணேசகுமாரன் மற்றும் உதவிவழங்கும் அமைப்புக்களின் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.
இதன்போது முல்லை ஸ்ரார் கலைஞர்களின் வளர்ச்சிக்காக ஸ்ரீ சபாரத்தின்ம் அறக்கட்டளையினரால் நிதி உதவியும் வழங்கப்பட்டது. (ஜ -19)

## 2 வருடங்களாக காணவில்லை

மருதங்கேணி, பெப். 25
வடமராட்சி கிழக்கு அம்பன், குடத்தனையைப் பிறப்பிடமாகவும் குடத்தனை கிழக்கில் வசித்து வந்தவருமான செல்வராசா அருந்தவச்செல்வன் காணாமல் போய் (09/03/2018) சுமார் 2 வருடங்களாகின்றன. அவரை இதுவரை கண்டறியவில்லை. அவரை எங்காவது யாராவது கண்டால் அறியத்தருமாறு அவருடைய மகன் கோரியுள்ளார்.



அவரை அவருடைய மனைவி, பிள்ளைகள், உறவினர்கள் தேடி வருகின்றனர். இவர் காணாமல் போன மறுநாளே பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.
அவர் காணாமல் போனதிலிருந்து ஒரு வாரமாக அவருடைய அலைபேசி இயங்கியிருக்கிறது. பலர் அதில் பேசியிருக்கிறார்கள், ஆனால் காணாமால் போன நபர் பேசவில்லை. இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் முறையிட்டும் இன்னும் பயன் கிட்டவில்லை. அல்லது பொலிஸார் அக்கறைகொள்ளவில்லை என்று தெரிகின்றது.
இவர் பற்றிய தகவல் அறிந்தால் 0771154704 அல்லது 0761660414 என்ற இலக்கங்களுக்குத் தெரியப்படுத்துமாறு அவருடைய குடும்பத்தினர் கோரிக்கை விடுக்கின்றனர். (த-160)




## காட்டு யானைகள் அட்டகாசம் பயன்தரும் மரங்கள் சேதம்!!

முல்லைத்தீவு,பெப்.25
முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கற்சிலைமடுப் பகுதியில் கடந்த சனிக்கிழமை குடிமனைக்குள் புகுந்த யானைகள் பயன்தரும் தென்னை, பலா மரங்களை அழித்துவிட்டு சென்றுள்ளன.
அண்மைக் காலமாக இவ்வாறு தொடர்ச்சியாக குடிமனைக்குள் புகுந்து அட்டகாசம் செய்யும் யானைகளால், எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
"தோட்டத் தொழிலை வாழ்வாதாரமாகக்கொண்டே வாழ்ந்து வருகின்றோம். இந்த யானைகள் காய்க்கும் 10 தென்னை மரங்கள் மற்றும் பலா மரத்தில் காணப்பட்ட பலாக் காய்களையும் அழித்துவிட்டுச் சென்றுள்ளன." என்று பாதிக்கப்பட்ட விவசாயியான செந்தில் தெரிவித்துள்ளார்.
இந்தப் பகுதியில் யானை பாதுகாப்பு வேலிகள் அமைத்து தருமாறு பலதடவைகள் கோரிக்கை முன்வைத்தபோதும் அதிகாரிகள் அசமந்தமாக இருக்கிறார்கள் எனவும் விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஜ-500)

## ஒட்டுசுட்டானில் அழியும் தென்னைகள்

### தேங்காய்க்கும் தட்டுப்பாடு

முல்லைத்தீவு,பெப்.25
முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் பெருமளவு தென்னைகள் அழிவடைந்துள்ளன. அதனால் தேங்காய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. போருக்கு முன்னர் தென்னம் சோலைகளாகக் காட்சி தந்த பிரதேசம் இன்று வெற்றுக் காணிகளாக உள்ளன என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
ஒரு பகுதி போரால் அழிவடைந்தது. மீதமிருந்தவற்றை காட்டு யானைகள் அழித்துள்ளன என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.
அதனால் 90 ரூபாவுக்கும் தேங்காய் வாங்க முடியாது மக்கள் சிரமப்பட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
போரில் அழிவடைந்த தென்னைகளை மீள உருவாக்க மக்கள் புதிய கன்றுகளை நடுகை செய்தனர். அவற்றைத் தற்போது காட்டு யானைகள் அழித்து வருகின்றன.
யானைகளால் அழிக்கப்பட்ட தென்னைமரங்களுக்கு அதிகூடிய நட்ட ஈடு வழங்குவதுடன், புதிய தென்னங்கன்றுகளை மானிய விலையில் பெற்றுத் தர ஆவன செய்ய வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)





# கல்யாண ரேகை



ஒருவரது திருமண பந்தத்தை, வாழ்வைச் சுட்டிக்காட்டவல்ல முக்கியமான ரேகை, கல்யாண ரேகை. இந்த ரேகையின் பலன்கள் பொதுவாக ஆயுள் ரேகை மற்றும் விதி ரேகையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவை.

இந்தக் கல்யாண ரேகையானது புதன் மேட்டிலோ அல்லது கையின் பின்புறத்திலிருந்து வந்து புதன் மேட்டில் அமையும் நேர்க்கோடாகவோ அமையும். தெளிவான நீண்ட திருமண ரேகையே திருமணத்தை உறுதி செய்யும். அந்த ரேகை சிறியதாக அமைந்தால், அதற்கேற்ப பலன் அமையும் என்று அறியலாம்.





கல்யாண ரேகைக்கும் இதய ரேகைக்கும் உள்ள அளவை வைத்து திருமணக் காலத்தை யூகித்து கணிக்க முடியும்.

தெளிவான கல்யாண ரேகையும் சந்திரமேட்டிலிருந்து கிளம்பி விதி ரேகையைத் தொடும் கிளை ரேகையும் அமையப் பெற்றிருந்தால், திருப்திகரமான திருமண வாழ்க்கை அமையும் என்று சொல்லலாம்.

விதி ரேகைக்கு இணையான ஒரு நேர்க்கோட்டு ரேகை இருந்தாலும் சுகவாழ்வு கிடைக்கும்.

இதய ரேகையிலிருந்து மேல் நோக்கி செல்லும் சிறிய ரேகைகளும் நல்ல திருமண வாழ்வின் அறிகுறிகள். கல்யாண ரேகையிலிருந்து ஒரு கிளை ரேகை புறப்பட்டு சூரிய மேட்டையோ, சூரிய ரேகையையோ சென்றடைந்தால் புகழும் பெயரும் பெற்ற ஒருவரை துணைவராகப் பெறும் பாக்கியம் உண்டு.

கல்யாண ரேகைக்கு இணையாக வேறு ஒரு ரேகையும் அமையப் பெற்றிருந்தால், திருமண உறவுக்குப் பின்னரும் வேறு ஒரு தொடர்பு இருப்பதை உணர்த்தும்.

கல்யாண ரேகையானது நேராகவும் தொடர்ச்சியாகவும் எந்தவித குறுக்கீடும் இல்லாமல் அமைவதே சிறப்பு. கல்யாண ரேகையில் ரோமக் கால்கள் போன்ற சிறிய ரேகைகள் தோன்றி இதய ரேகை பக்கம் செல்லும் அமைப்பு, துணைவருக்கு நோய் நொடிகள் இருக்கின்றமையைச் சுட்டிக்காட்டும்.

கல்யாண ரேகையில் தோன்றும் தீவுக்குறி, கசப்பான மண வாழ்க்கை அல்லது மணமுறிவு ஏற்படும் நிலையைக் குறிக்கும்.

கல்யாண ரேகையிலிருந்து பலவித சிறு ரேகைகள் கீழ் நோக்கி சென்றாலும் தீவுக் குறிகள் தென்பட்டாலும் திருமண பந்தம் கசப்பாகவே முடியும்.

கல்யாண ரேகை இரண்டாக பிளவுபட்டுக் காணப்பட்டால் திருமண முறிவு ஏற்படலாம்.

புதன் மேட்டிலிருந்து ஒரு ரேகை புறப்பட்டு, கல்யாண ரேகையை வெட்டினால் திருமணத்துக்கு பலத்த எதிர்ப்பு உண்டாகும்.

## கிரகமேடுகளும் குணங்களும்...

உள்ளங்கையில் எந்த கிரக மேடு தெளிவாக உள்ளதோ அந்த கிரகத்துக்குரிய விசேஷ குணங்கள் அமையும்...

**சுக்கிர மேடு: சுகம், சந்தோசம்**

**குரு மேடு : எதையும் சாதிக்கும் திறன்**

**சனி மேடு : கடின உழைப்பு, உயர் பதவி, பொறுமை**

**சூரிய மேடு : அதிகாரம், அந்தஸ்து**

**புதன் மேடு : அறிவுத் திறன், வியாபாரத் திறன்**

**சந்திரன் மேடு: பரிவு, பாசம், கற்பனை வளம்**

**செவ்வாய் மேடு : வீரியம், தைரியம்**


---



## முதுமையில் ஆரோக்கியமாக வாழ...

ஐம்பது வயதைக் கடந்துவிட்டாலே உடலுக்குள்ளே இருக்கின்ற எந்திரங்கள் 'மக்கர்' செய்யத் தொடங்கி விடுகின்றன. இவற்றை உடனடியாகக் கவனித்து சரி செய்து கொண்டால் முதுமை இனிக்கும் இல்லாவிட்டால் முதுமை வெறுப்பாக மாறிவிடும்.

பொதுவாகவே அறுவது வயதைக் கடந்து விட்டால் பசி குறைதலும் சாப்பிட்ட உணவு சரியாக செரிமானம் ஆகாமல் இருப்பதும் அடிக்கடி தொல்லை தரும் வயிற்று வலியும் இவற்றால் ஏற்படும் மலச்சிக்கலும் முதுமையில் நிம்மதியை குறைக்கச் செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.



**உணவுக் குழலில் ஏற்படும் தொல்லைகள்**

உண்ணும் உணவு, உணவுக் குழாய் வழியே செல்லும் போது அடைப்பது போன்ற ஓர் உணர்வு முதியவர் சிலருக்கு ஏற்படுவதுண்டு. அதற்குச் சில காரணங்கள் உள்ளன.

உணவுக்குழால் சுருங்கி விரியும் தன்மையைக் கட்டுப்படுத்தும் நரம்புகள் தளர்ச்சியடைதலால் உணவு உண்ணும்போது நெஞ்சில் ஒருவித அடைப்பு ஏற்படுவதுண்டு. மார்பு வலியும் உண்டாவதுண்டு. இனம் புரியாத ஒரு துன்பம் உண்டாகலாம். இவ்வலி சில சமயங்களில் இதய நிறுத்தம் போலவே இருக்கும். சிலருக்கு இரைப்பை அமிலம் உணவுக்குழலுக்குள் செல்வதால் நெஞ்சு எரிச்சல், உணவு உட்கொள்ளும்போது அடைப்பது போன்ற தொல்லை, வாந்தி, வாயில் நீர் சுரத்தல் முதலான துன்பங்கள் ஏற்படும்.

# இரைப்பை - குடற்புண் நோய்கள்

**இரப்பை- குடற்புண் நோய் அறிகுறிகள்**

இரைப்பைப் புண் நோயின் முக்கிய அறிகுறி வயிற்றுவலியாகும். அப்புண் இருப்பவர்களுக்கு உணவு உண்ட ஒரு மணி நேரத்துக்குள் வயிற்றுவலி உண்டாகும். இரவில் மட்டும் வலி மிகுதியாய் இராது. குடற்புண் உள்ளவர்களுக்கு பசி எடுக்கும்போதெல்லாம் (உணவு உண்ட 3 -4 மணிகளுக்குப் பின்) வயிற்றுவலி தோன்றும். உணவு உண்டதும் அவ்வலி குறையும். வயது முதிந்தவர்களுக்கு இத்தகைய அறிகுறி எதுவும் இல்லாமலேயே இரைப்பை- குடற்புண்கள் இருக்கலாம். உணவுக்குப் பின் வயிற்றுப் பொருமல், உப்புசம், குமட்டல், பசியின்மை, நெஞ்செரிச்சல், விவரிக்க இயலாத ஒரு வித தொல்லை முதலான துன்பங்கள் இருக்கலாம். அவற்றோடு உடலும் இளைக்கலாம். உடல் திறனற்றுப் போகலாம். இரத்தச் சோலை ஏற்படலாம். வலியின்றி வாந்தி வரலாம்.

**இரைப்பை - குடற்புண் நோய்களுக்கு சிகிச்சை முறைகள்**

காரம், புளிப்பு, கொழுப்பு மிக்க உணவுப் பொருள்களை தவிர்த்தல் நல்லது. அடிக்கடி மிகுதியாகக் கோபப்படுபவர்க்கும் எதற்கெடுத்தாலும் பதற்றம் அடைவோர்க்கும் காலங்கடந்து உணவு உண்போருக்கும் இரைப்பை குடற்புண்கள் வர மிக்க வாய்ப்புண்டு. அதனால் கோபத்தையும் பதற்றத்தையும் குறைக்க வேண்டும். அதற்கு 'தியானம்' சிறந்த மருந்தாகும். காலத்தோடு உணவு உட்கொள்ளவும் பழகிக் கொள்ள வேண்டும்.

மிக்க கொழுப்புள்ள உணவைக் குறைக்க வேண்டும்

பருத்த உடலினர் எடையைக் குறைக்க வேண்டும்.

தலையும் உடலும் அடிக்கடி முன்புறமாய் வளைதலை தவிர்க்க வேண்டும்

படுக்கையின் தலைப் பகுதி சற்று உயர்வாக இருக்க வேண்டும்

இரத்தச்சோகை உள்ளவர் இரும்புச்சத்துள்ள உணவை உண்ண வேண்டும்.

## கோத்தாபய...

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாடாளுமன்றத் தேர்தலில் அண்ணளவாக 90 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டாலே ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசை அமைக்கக் கூடியதாக இருக்கும்.

மக்களுக்கு நன்மைபயக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் வேண்டும் எனக் கூறிக்கொள்ளும் இந்த அரசு தமக்கு ஏற்ற ஏனைய விடயங்களை அதே பெரும்பான்மை இல்லாமலேயே மேற்கொண்டு வருகின்றது. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு நாட்டின் வளங்களை விற்பனை செய்யும் நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

எமது ஆட்சிக்கும் இந்த அரசின் ஆட்சிக்கும் இடையிலான வேறுபாட்டை நாட்டு மக்கள் நன்கு விளங்கி கொண்டுள்ளனர். நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் மஹிந்த அரசில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு நாட்டு மக்களுக்குத் தேவையாக அனைத்து சலுகைகளையும் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம்.

100 நாள் வேலைத்திட்டத்தின் ஊடாக பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்திருந்தோம். அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைத்திருந்தோம். அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுத்திருந்தோம்.

இந்த அரசின் செயற்பாடுகளின் விளைவாக வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. ஆனால் அதை நிவர்த்தி செய்ய எந்த நடவடிக்கையையும் அரசால் மேற்கொள்ள முடியவில்லை. நாம் ஆரம்பித்த அபிவிருத்தித் திட்டங்களைத் திறந்து வைக்கும் நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகின்றது. மக்கள் இந்த அரசின் செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும்.

அனைத்து நடைமுறைகளையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் ஊடாக தமக்கு ஏற்ற வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த அரசு முயற்சிக்கின்றது-என்றார். (எ-22)

## உசாரையா...

கொழும்பில் ஹெரோயினுடன் கைது செய்துள்ளோம். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் அச்சுவேலியில் உள்ள அவரது வீட்டில் சோதனையிட வந்துள்ளோம். அந்த வீடு உங்கள் கிராம அலுவலர் பிரிவில் உள்ளது. எமக்கு இப்போது 5 ஆயிரம் ரூபா அவசரமாகத் தேவைப்படுகின்றது. அருகில் உள்ள வர்த்தக நிலையத்துக்குச் சென்று ஈஸி காஸ் மூலம் அனுப்புங்கள்" என்று கூறியுள்ளார் அந்த நபர்.

கடந்த வாரங்களில் நடந்த மோசடிச் சம்பவங்கள் தொடர்பாக அறிந்திருந்த அந்தக் கிராம அலுவலர், அருகில் உள்ள தொலைத்தொடர்பு வர்த்தக நிலையத்துக்குச் சென்று அங்கு கைபேசி உரையாடலைப் பதிவு செய்யும் வழிமுறைகளை மேற்கொண்ட பின்னர் மீண்டும் அந்த இலக்கத்துக்குத் அழைப்பை மேற்கொண்டார்.

**வர்த்தக நிலையத்துக்கு வந்துவிட்டேன் என்று கிராம அலுவலர் கூறியவுடன், நீங்கள் 5 ஆயிரம் ரூபாவை இந்த இலக்கத்துக்கு அனுப்புங்கள், எமது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அந்தக் கடைக்கு வந்து கொண்டிருக்கின்றார். அவர்** பணத்தைத் தருவார் என்று அந்த மர்ம நபர் கூறியுள்ளார்.

தன்னிடம் தற்போது பணம் இல்லை என்று கிராம அலுவலர் கூறியுள்ளார். கடையில் உள்ளவரிடம் கைபேசியைக் கொடுக்குமாறு கூறிய மர்மநபர், பொலிஸ் உத்தியோகத்தர் பணத்துடன் வருகின்றார். நீங்கள் பணத்தைச் செலுத்துங்கள் என்று கூறியுள்ளார். கடையிலிருந்தவர், முதலாளி இல்லை, தன்னிடம் பணம் இல்லை, பொலிஸ் உத்தியோகத்தர் பணம் தந்தவுடன் உடனே போட்டு விடுகின்றேன் என்று கூறியுள்ளார்.

போதைப் பொருளைக் கைப்பற்ற வந்த எங்களுக்கு உதவவில்லை என்றால் உங்களையும் கைது செய்வோம் என அந்த மர்ம நபர் மிரட்டியுள்ளார். ஒரு கட்டத்தில் கிராம அலுவலர், இப்படியான மோசடிகள் தொடர்பாக நாங்கள் அறிந்துள்ளோம் என்று தெரிவித்து அழைப்பைத் துண்டித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரங்களில் இவ்வாறான பல மோசடிச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராம அலுவலர்கள் இருவரிடம் இவ்வாறு பண மோசடி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரிடமும் இவ்வாறு பண மோசடி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான அழைப்புக்கள் தொடர்பாக மக்கள் விழிப்புடன் செயற்படுவதன் ஊடாக பண இழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்றும், இனந்தெரியாதவர்களிடம் இருந்து வரும் இவ்வாறான தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பாக அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-37)

## மரக்கறிக்கு...

கானை மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இருந்து கஞ்சா கடத்தப்படுகின்றது என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டனர். தம்புள்ளைக்குக் கொண்டு செல்லத் தயாராக இருந்த மரக்கறிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 6 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்றும், புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த 33 வயதுடைய ஒருவர் இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரை, சான்றுப் பொருள்களுடன் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-20,26)

## காணாமல்...

இராணுவத்திடம் கையளிக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனு மீதான இரண்டாம் கட்ட வழக்கு விசாரணைகள் நேற்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவு முக்கியஸ்தரான எழிலன் உள்ளிட்ட 12 பேர் தொடர்பான இந்த ஆள்கொணர்வு மனு மீதான விசாரணைகள் கடந்த சில ஆண்டுகளாக முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றன. அதன்பின்னர் எழிலன் உள்ளிட்ட 5 பேர் தொடர்பான ஆள்கொணர்வு மனு மீதான வழக்கு விசாரணைகள் வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டன. ஏனையோரின் வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றன.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சாட்சிகள் விசாரிக்கப்பட்ட பின்னர் வழக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மனுதாரர்கள் சார்பாக மூத்த சட்டத்தரணி கே.எஸ்.ரத்னவேல் முன்னிலையானார். வழக்கு விசாரணைக்காக இராணுவத்தினர் சார்பான சட்டத்தரணிகள் மன்றுக்கு வந்தபோது சிறப்புப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டதுடன், வழமைக்கு மாறாக நீதிமன்றத்தைச் சூழ ஆயுதம் தாங்கிய பொலிஸார் பாதுகாப்புக் கடமைக்காக நிறுத்தப்பட்டிருந்தனர். (எ-19)

## கோத்தா...

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மூத்த ஆலோசகரும் தவிசாளருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து அரசு விலகும் முடிவையடுத்து இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தும் நடவடிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புலம்பெயர் அமைப்புக்களும் மிகத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன என்று வெளியாகியுள்ள செய்தி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்தலாம் என்று எவரும் கனவு காணக்கூடாது. அந்தக் கனவு ஒருபோதும் நனவாகாது. அந்த நிலைமை வருவதற்கு நாமும் எமது நட்பு நாடுகளும் ஒருபோதும் இடம் கொடுக்கமாட்டோம்.

இந்த நாட்டின் உள்விவகார விடயங்களை சர்வதேச அமைப்புகளிடம் பொறுப்பளிக்கக் கோத்தாபய அரசு தயாராக இல்லை. அவர்களின் மேற்பார்வையில் இந்த நாட்டை அடிபணிய வைக்கவும் நாம் தயாராக இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புலம்பெயர் அமைப்புக்களும் இந்த நாட்டுக்கு மாபெரும் துரோகங்களை இழைத்து வருகின்றன. இந்தத் துரோகிகளுக்கு வரலாறே பாடம் புகட்டும்- என்றார். (எ-22)

# கிராம அலுவலரை காவு வாங்கிய காய்ச்சல்

யாழ்ப்பாணம், பெப்.25

தலைசுற்றல் மற்றும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவந்த கிராம அலுவலர் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், அளவெட்டி தெற்கைச் சேர்ந்த சிறில் ரவிநேசன் (வயது-36) என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் தெல்லிப்பளைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் கிராம அலுவலராகப் பணியாற்றுகின்றார்.

கடந்த 21ஆம் திகதி அலுவலகம் சென்று திரும்பிய அவருக்குத் தலைசுற்றல், காய்ச்சல் காணப்பட்டதை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்குத் தொடர் சிகிச்சைகள் வழங்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (எ-26)

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 893
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.02.24
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,659,235/-
வெற்றி இலக்கங்கள் 29 34 73 74 P

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல: 3305 திகதி: 2020.02.24
நீலம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 13 30 37 50 V
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 34,822,870/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1132
சீட்டிழுப்பு திகதி 2020.02.23 ஞாயிற்றுக்கிழமை
I 05 14 23 76
7 7 2 5

கொடிபதி கப்சக
V 01 09 30 34
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,995,320/-
சீட்டிழுப்பு இல: 563
திகதி: 2020 பெப்ரவரி 23
மஞ்சள் ஞாயிறு

ராசி அதிர்ஷ்டம்
திகதி 24.02.2020 வெற்றி வாரம் 2779 வர்ணம் மஞ்சள்
விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 02 29 51 57
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000/=

டபல் சான்ஸ்
விசேட இல.
ரூ.500 பரிசுக்காக 4097
ரூ.100 பரிசுக்காக 194
25.02.2020 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்



# இன்றைய நாள்

**மேடம்:** இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். அவமதித்து பேசியவர்கள் விரும்பி அன்பு பாராட்டுவர். தொழிலில் இருந்த மந்தகதி மறையும். பண வரவுடன் நன்மையும் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும்.

**இடபம்:** முக்கியமான பணியில் அக்கறை கொள்வீர்கள். நல்லவர்க ளின் உதவி கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். தாராள அளவில் பணவரவு பெறுவீர்கள்.

**மிதுனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதி கம் பேச வேண்டாம். எதிர்பார்த்த நற்செய்தி கிடைப்பதில் தாமதம் இருக்கும். அரசியல்வாதிகளுக்குவழக்குகளில் நல்லதீர்வு கிடைக்கும்.

**கடகம்:** குடும்பத்தினரின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பெண்கள் நகையை கடனாக கொடுக்க வேண்டாம்.

**சிம்மம்:** வாழ்வில் சிறக்க புதிய வழி பிறக்கும். பிறர் வியக்கும் வகையில் பணி புரிவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை திருப்திகரமான அளவில் இருக்கும். உபரி பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** நண்பரின் மனக் கஷ்டம் தீர வழி சொல்வீர்கள். பெருமித எண்ணத்துடன் பணிபுரிவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அபரிமிதமான வளர்ச்சி அடையும். பணவரவுடன் நன்மையும் அதிகரிக்கும்.

**துலாம்:** காலத்தின் அருமையை உணர்ந்து பணியில் கவனம் செலுத்து வீர்கள். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். நிலுவைத் தொகை கூடுதல் முயற்சியால் வசூலாகும்.

**விருச்சிகம்:** சிலர் கூறும் குறைகளை பொருட்படுத்த வேண்டாம். கூடுதல் உழைப்பால் தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். பணச் செலவு அதிகரிக்கும்.

**தனுசு:** நண்பரிடம் ஆன்மிக கருத்துக்களை பகிர்ந்துகொள்வீர்கள். எதிர்காலத் தேடல் குறித்த நம்பிக்கை பிறக்கும். பணியாளர்களுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும்.

**மகரம்:** ஒருமுகத்தன்மையுடன் பணி புரிந்தால் சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கை அடைய கால தாமதம் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் அன்பு, கருணை அதிகரிக்கும். நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரம் சிறப்பான முறையில் இருக்கும்.

**மீனம்:** வீண் பேச்சு பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழிலில் உற்பத்தி, விற்பனை சீரான அளவில் இருக்கும். முக்கிய தேவைக்காக கடன் பெறுவீர்கள்.

## கொரோனா விஸ்வரூபம்:

# சீனாவில் மருத்துவ அவசர நிலை!

### அதிபர் ஜின்பிங் விடுத்தார்



பீஜிங், பெப். 25

கொரோனா வைரஸின் கோரப்பிடிக்கு இதுவரை சுமார் 2 ஆயிரத்து 700 பேர் உயிரிழந்த நிலையில், சீனாவில் மிகப்பெரும் சுகாதார அவசர நிலையை அறிவித்தார் அதிபர் ஜி ஜின்பிங்.

சீனாவின் ஹுபெய் மாகாண தலைநகர் வுகானில் இருந்து கடந்த டிசெம்பர் மாத இறுதியில் பரவிய கொரோனா வைரஸ் தற்போது உலகம் முழுவதும் அசுர வேகத்தில் பரவி வருகின்றது. 27 நாடுகளுக்கும் மேல் இந்த வைரஸ் பரவி உள்ளமையால் நாளுக்கு நாள் உயிரிழப்புகளும் அதிகரித்து வருகின்றன.

கொரோனா வைரஸ் சீனாவில் மிகவும் அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கொரோனா வைரஸின் பிறப்பிடமாகக் கருதப்படும் வுகானில் இந்த வைரஸ் பாதிப்பால் மருத்துவமனைகள் அனைத்தும் நோயாளிகளால் நிரம்பி வழிகின்றன. ஆயிரம் வரை மெதுவாக உயர்ந்த பலியின் எண்ணிக்கை தற்போது நாளுக்குநாள் சராசரியாக 100 என உயர்ந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் கொரோனா வைரஸ் சீனாவின் மிகப்பெரிய சுகாதார அவசர நிலை என அந்நாட்டு அதிபர் ஜி ஜின்பிங் அறிவித்துள்ளார்.

மேலும், "பரவலான தொற்று நோயைக் கொண்டுள்ள இந்த வைரஸ் மிகவும் வேகமாக பரவுகிறது. இதை தடுத்து கட்டுப்படுத்த மிகவும் கடினமாக உள்ளது" என்று தனது அறிவிப்பில் அவர் குறிப்பிட்டார். (ம)

## ஈரானில் நிலநடுக்கம்

தெஹ்ரான், பெப். 25

ஈரான் நாட்டின் எல்லையில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 5.7 அலகுகளாக இந்த நிலநடுக்கம் பதிவானது. குவடுர் பகுதியில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி 9 பேர் உயிரிழந்தனர். சுமார் 100 பேர் காயமடைந்தனர். மீட்புப் பணிகள் இடம் பெற்று வருகின்றன. (ம).






அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இரண்டு நாள்கள் அரசுமுறைப் பயணமாக நேற்று இந்தியாவுக்குச் சென்றார். அங்கு அகமதாபாத் நகரில் அமைக்கப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானத்தைத் திறந்து வைத்தார். ட்ரம்பின் வருகையை முன்னிட்டு இந்தியாவில் மிகப்பெரும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (ம)

# அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யா தலையிட முனைப்பு?

### மீண்டும் எழுந்துள்ள குற்றச்சாட்டு

வொஷிங்டன், பெப். 25

அமெரிக்காவில் 2016ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி நடந்த ஜனாதிபதித் தேர்தலில், ரஷ்யா தலையிட்டு குடியரசுக் கட்சி வேட்பாளராக போட்டியிட்ட ட்ரம்புக்கு ஆதரவாகவும், ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஹிலாரி கிளிண்டனுக்கு எதிராகவும் செயல்பட்டதாக கடும் குற்றச்சாட்டு எழுந்தது. தற்போது அவ்வாறானதொரு குற்றச்சாட்டு மீண்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஜனாதிபதி ட்ரம்பின் பதவிக்காலம் முடிவடைந்து, அங்கு எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி தேர்தல் இடம் பெறவுள்ளது. குடியரசுக் கட்சியின் சார்பில் ட்ரம்ப் மீண்டும் போட்டியிடவுள்ளார். ஜனநாயகக் கட்சியின் சார்பில் பெர்னி போட்டியிட வாய்ப்பு உள்ளது என்று கருதப்படுகின்றது.

இந்த நிலையில் இந்தத் தேர்தலில். தலையிட ரஷ்யா மீண்டும் முயற்சிக்கின்றது என்று ஜனநாயகக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது. (ம)

# தலிபான்களுடனான அமைதிப்பேச்சில் பங்களிப்பை வழங்க ட்ரம்ப் விருப்பம்



காபூல், பெப். 25

தலிபான்களுடனான அமைதிப் பேச்சில் நேரடிப் பங்களிப்பை வழங்கி, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில் என்னையும் சேர்த்துக்கொள்வேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்.

ஆப்கன் விவகாரம் தொடர்பில் ட்ரம்ப் மேலும் தெரிவித்ததாவது:

நான் இந்த வாரம் ஆப்கானிஸ்தானில் நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பதை பொறுந்திருந்து பார்க்க இருக்கிறேன். மிகப்பெரிய வன்முறைகள் ஏதும் நடக்காமல் இருந்தால் தலிபான்களுடனான ஒப்பந்தத்தில் எனது பெயரைச் சேர்க்கத் தயார் - என்றார்.

நாங்கள் அமெரிக்காவின் நீண்ட போரை முடிவுக்குக் கொண்டு வரச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். எங்கள் நாட்டு ராணுவ வீரர்கள் விரைவில் அமெரிக்கா திரும்ப உள்ளனர் என்று ட்ரம்ப் இம்மாத தொடக்கத்தில் தெரிவித்திருந்தார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு அமைதியான தீர்வு காண்பதில், தேசிய அளவிலும் பிராந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் முயற்சிகள் நடந்து வருகின்றன. மேலும், ஆப்கனில் 18 ஆண்டுகளாக நடந்து வரும் போரிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள அமெரிக்கா கடந்த சில ஆண்டுகளாக முயற்சிகள் மேற்கொண்டு வந்தது.

இதனை அடிப்படையாகக் கொண்டு ஆப்கன் அமைதிப் பேச்சுவார்த்தை அமெரிக்கா தலைமையில் நடந்தது. இதன் அடிப்படையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை தலிபன்கள் தரப்பு ஏற்றுக்கொண்டது.

இந்த நிலையில், ஆப்கனில் தீவிரவாதத் தாக்குதலில் அமெரிக்கப் படை வீரர்கள் கொல்லப்பட்டமைக்கு தலிபான்கள் பொறுப்பேற்றனர். இதனைத் தொடர்ந்து தலிபான்களுடனான பேச்சு முடிந்துவிட்டதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் கைதிகள் இடமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் தலிபான்களால் 2016ஆம் ஆண்டு கடத்தப்பட்ட இரண்டு அமெரிக்கப் பேராசிரியர்கள், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் முயற்சியால் விடுவிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், ஆப்கன் அதிபர் அஷ்ரப் கானி ஆகியோரைத் தொடர்பு கொண்டு ட்ரம்ப் நன்றி தெரிவித்தார். இதையடுத்தே தலிபான்களுடன் அமெரிக்கா மீண்டும் பேச்சைத் தொடங்கியது. (ம)

# மலேசியப் பிரதமர் திடீர் பதவி விலகல்



கோலாலம்பூர், பெப். 25

மலேசியாவின் பிரதமர் மஹதீர் பின் மொஹமட் தனது பதவியில் இருந்து நேற்று விலகினார்.

தனது பதவி விலகல் கடிதத்தை அவர் தமது நாட்டின் அரசருக்கு அனுப்பி வைத்துள்ளார். 94 வயதுடைய மஹதீர் 2018ஆம் ஆண்டு அதிகாரத்துக்கு வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

---

சிவமயம்

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (27.01.2020) திங்கட்கிழமை
அன்று சிவபதமடைந்த அன்புத் தெய்வம்

அமரர்

**சுப்பிரமணியம் கணேசமூர்த்தி**

(P.W.D ஓவசியர்)


அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (24.02.2020) திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (26.02.2020) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடமியன், வரணி.

குடும்பத்தினர்.
077 889 2202

---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
08 . 07 . 1944

மறைவு
08 . 03 . 2019

**அமரர் கணபதிப்பிள்ளை நவரத்தினம்**

(ஓய்வுநிலை ஆசிரியர்)

திதி:-மாசிமாத பூர்வபக்க துதியை



பெற்றீர்கள் வளர்த்தீர்கள்
சிறப்பாக வாழ வைத்தீர்கள் அப்பா
கண்டிப்பும் அன்பும் கலந்து
எம்மை ஆளாக்கினீர்கள் அப்பா

ஒன்றல்ல ஒன்பதாயிரம்
ஆண்டுகள் கடந்தாலும் என்றென்றும்
நீங்கள் எங்கள் நெஞ்சில்
நிறைந்திருப்பீர்கள் அப்பா!

34,மகாத்மா வீதி,
நெல்லியடி.

(IN/12668)(11,17)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
17 . 11 . 1943

மறைவு
08 . 03 . 2019

அமரர்

**இராசரத்தினம் அன்னலட்சுமி**

ஆண்டொன்று சென்றதம்மா ஆறவில்லை எம் மனங்கள்
ஓடிச்சென்று தேடுகின்றோம்
உங்கள் வதனம் காணமுடியவில்லை
ஆறு மனமே ஆறு இது ஆண்டவன் கட்டளை
என்று மனதை தேற்றுகின்றோம்.
பிள்ளைகளை அன்புடனும், பண்புடனும்,
கண்டிப்புடனும் வளர்த்தீர்கள்.
அவர்களை வழிநடத்த இப்போது நீங்கள் இல்லை
என மனம் ஏங்குகின்றது.
ஆனாலும் என்றும் எங்கள் மனங்களில் அழியாமல்
நிலைத்திருப்பீர்கள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!



*என்றும் உங்கள் நினைவுடன்*

077 662 2036, 021 222 5165

குடும்பத்தினர்.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.25
யாழ்.கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏபிசி பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வரும் லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன்விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஒலிம்பிக்விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

- - - - - -

யாழ்ப்பாணம், பெப்.25
கல்வியங்காடு ஞான பாஸ்கரோதயா விளையாட்டுக் கழகத்தின் 100 ஆவதுஆண்டுநிறைவை முன்னிட்டு மின் ஒளியில் நடத்தும் மெகா நைட் பிறீமியர் லீக் மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கல்வியங்காடு ஞான பாஸ்கரோதயா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் காரை கிங்ஸ் கொப்பிறஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நோநேம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 8மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நல்லூர் றோயல் பிரண்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நொதேன்ஸ்ரைகாஸ் விளையாட்டுக்கழகஅணி மோதவுள்ளது. (23)



# கிண்ணம் வென்றது சென்றலைட்ஸ் அணி

யாழ்ப்பாணம்,பெப்.25
யாழ்.பல்கலைக்கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் தொடரில் சென்றலைட்ஸ் அணி சம்பியனானது.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஓல்கோல்ட்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஓல்கோல்ட்ஸ் அணி களத்தடுப்பை தீர்மானித்தது. இதனால் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 48.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது.

அணி சார்பில் அலன்ராஜ் 47 ஓட்டங்களையும், பிரியலக்ஸன் 30 ஓட்டங்களையும், சுபாஸ்கர் 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் சிந்துஜன், ஜிந்துசன், நிரோஜன், திலீபன் ஆகியோர் 2 இலக்குகளையும், பிரியலக்ஸன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

186 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஓல்கோல்ட்ஸ் அணி 34.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 143 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 43 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டனர்.

அணி சார்பில் மதுசன் 41 ஓட்டங்களையும், பிரியலக்ஸன் 37 ஓட்டங்களையும், ஸ்ரீகுகன் 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் அலன்ராஜ் 5 இலக்குகளையும், எரிக் 3 இலக்குகளையும், ஜேம்ஸ் மற்றும் தேவன் ஆகியோர் ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகன், சிறந்த பந்து வீச்சாளர் மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரராக சென்றலைட்ஸ் அணி வீரர் அலன்ராஜ், தொடர் ஆட்ட நாயகனாக ஓல்கோல்ட்ஸ் அணி வீரர் பிரியலக்ஸன், சிறந்த களத்தடுப்பாளராக ஓல்கோல்ட்ஸ் அணி வீரர் ஜிந்துசன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவு ஆணைக்குழு நிதி உதவியாளர் என். சுதேஸ்குமார் கலந்து கொண்டார். (422)

# ஏஞ்சல் – கொக்குவில் இந்து இறுதியில் இன்று பலப்பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.25
252ஆவது இராணுவ படைப் பிரிவினரால் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட 20 வயதுப் பிரிவினருக்கான கூடைப் பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பழைய பூங்காவில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டத்திடலில் இரவு 7 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது.

மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணியை 68:50 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், கொக்குவில் இந்துக்கல்லூரி அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை 62:49 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குள் நுழைந்தனர். (23)





## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், பெப்.25
கரைத்துறைப் பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆண்,பெண் இருபாலருக்குமான கரம் போட்டியில் ஆண்கள் பிரிவில் குமுழமுனை ஐக்கியம் விளையாட்டுக்கழக அணி முதலாம் இடத்தையும், முல்லை ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி இரண்டாம் இடத்தையும், பெண்கள் பிரிவில் குமுழமுனை ஐக்கியம் விளையாட்டுக்கழக அணி முதலாம் இடத்தையும், உடுப்புக்குளம் அலைஓசை விளையாட்டுக்கழக அணி இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

ஆண்களுக்கான சதுரங்கப் போட்டியில் இளம் பறவைகள் விளையாட்டுக் கழக அணி முதலாம் இடத்தையும், முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக்கழக அணி இரண்டாம் இடத்தையும் பெற்றனர். (23)



குமுழமுனை ஐக்கியம் வி.க


இளம் பறவைகள் வி.க.


குமுழமுனை ஐக்கியம் பெண்கள் வி.க

# கால்பந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,பெப்.25
யாழ்.கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏபிசி பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வரும் லீக் சுற்றுக்கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென்அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

# மகுடம் சூடியது சீ.ஆர்.சீ.

சாவகச்சேரி, பெப்.25

தென்மராட்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் ஆண்களுக்கிடையிலான துடுப்பாட்ட போட்டியில் சீ.ஆர்.சீ. அணி சம்பியனானது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மைதானம் மற்றும் மட்டுவில் வளர்மதி மைதானங்களில் இடம்பெற்றன.

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சாவகச்சேரி சீ.ஆர்.சீ. அணியும் நாவற்குழி சான்றோர் அணியும் களமிறங்கின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சீ.ஆர்.சீ. அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது.

80 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய சான்றோர் அணி 9.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 33 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

தென்மராட்சி பிரதேசத்தின் நடப்பு வருட சம்பியனாக சாவகச்சேரி சீ.ஆர்.சீ. அணி தெரிவானது. (9)



யாழ். கால்பந்தாட்ட லீக்கின் 40 வயதுப் பிரிவு அணிக்கும் நாவலப்பிட்டி 40 வயதுப்பிரிவு அணிக்கும் இடையிலான கால்பந்தாட்டமொன்று கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இந்த ஆட்டத்தில் யாழ்.லீக்கின் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

கரப்பந்தாட்டத்தில்;

# கிண்ணத்தைச் சுவீகரித்தது சென்தோமஸ் றோ.க. அணி



கரணவாய்,பெப்.25

வலய மட்ட கரப்பந்தாட்டத்தில் 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான பிரிவில் சென்தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை அணி சம்பியனானது.

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் சென் தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் வித்தியாலய அணியும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியும் மோதின.

மூன்று செற்களைக் கொண்ட சுற்றுப் போட்டியில் சென்தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை அணி 25:10, 25:16 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

மூன்றாமிடத்தை கம்பர்மலை அ.த.க பாடசாலை அணி கைப்பற்றியது. (108)



# வசந்தசிறி வி.க. மகுடம் சூடியது

யாழ்ப்பாணம்,பெப்.25

யாழ்ப்பாண மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின் ஒளியில் நடத்தும் 21 வயதுப் பிரிவினருக்கான தாச்சி சுற்றுத் தொடரில் சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்ஒளியில் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதி யாட்டத்தில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி 9:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)



# மெதடிஸ்த பெண்கள் சம்பியன்

கரணவாய், பெப்.25

வலய மட்ட 20வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி அணி சம்பியனானது.

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கான வலய மட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நேற்று இம்பெற்றது.

இறுதிப்போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை அணியும் வடஇந்துக் கல்லூரி அணியும் மோதின.

மூன்று செற்களைக் கொண்ட போட்டியில் 25:10, 25:13 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 என்ற நேர் செற் கணக்கில் கைப்பற்றி சம்பியனானது மெதடிஸ்த பெண்கள் கல்லூரி அணி.

இதில் மூன்றாமிடத்தை வல்வை மகளிர் கல்லூரி அணி கைப்பற்றியது. (108)

# காக்கையன்குளம் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம்,பெப்.25

மடு பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் ஆண்களுக்கான துடுப்பாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் காக்கையன்குளம் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தட்சணாமருதமடு ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் காக்கையன்குளம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பூமலர்ந்தான் பீனிக்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற காக்கையன்குளம் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய காக்கையன்குளம் விளையாட்டுக் கழக அணி 6 இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குக் களமிறங்கிய பூமலர்ந்தான் பீனிக்ஸ் விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 7 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 54ஓட்டங்களை மட்டும் பெற்று 13 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது. (23)

# மகாத்மா வெற்றி பெற்றது



யாழ்ப்பாணம், பெப். 25

வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் சாவற்காடு மகாத்மா அணி முன்னேற்றம் கண்டது.

வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சாவற்காடு மகாத்மா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக் கழக அணி மோதியது.

இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:3 என்ற கோல் கணக்கில் மகாத்மா அணி வெற்றி பெற்றது. (ம-23)

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
COURIER Services
தொடர்புகளுக்கு 077 0111 035 | 036
077 0111 028 | 029
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்

# ‘வீரர்களின் போர்’ வெள்ளி, சனி ஆரம்பம்

யாழ்ப்பாணம்.பெப்.25
வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் துடுப்பாட்டம்- 2020 தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையிலான 20ஆவது துடுப்பாட்டத் தொடர் எதிர்வரும் வெள்ளி.சனிக் கிழமைகளில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதுவரை காலமும் நடைபெற்ற போட்டிகளில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 4 தடவைகளும், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 5 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன.10 போட்டிகள் சம நிலையில் முடிவடைந்துள்ளன.

இந்த வருடம் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி கே.கிரிஷன் தலைமையிலும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி எஸ்.பிரசன் தலைமையிலும் களமிறங்கவுள்ளது.

(23)





## சென்.பீற்றர்ஸ் முன்னேற்றம்

வல்வை விளையாட்டுக் கழகத்தின் 60ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்ற நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகஅணிவெற்றிபெற்றது.(ம-23)

சாரதி தேவை
தனியார் நிறுவனத்துக்கு Bob Cat, Backhoe ஓடக்கூடிய சாரதி தேவை.
தொடர்புகொள்ளவும்:
077 952 7107

வேலையாள்கள் தேவை
சர்வதேச புகழ்பெற்ற நிறுவனத்தின் அனுசரணையில் செயற்படும் அறக்கட்டளை. யாழ் நகரில் தரமான சைவ உணவகம் ஒன்றை உருவாக்குகிறது. இதற்கான முகாமையாளர். சமையல்காரர் மற்றும் பணியாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள்.
அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
இம்மாதம் 25,26 ஆம் திகதிக்குள் தொடர்புகொள்ளவும்
தொடர்பு:
076 530 7101, (076) 130 4028
076 817 0055



# நியூசிலாந்து இமாலய வெற்றி



முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியாவை 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி நியூசிலாந்து அணி இமாலய வெற்றி பெற்றது.

இந்திய அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையில் இடம்பெற்று வரும் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலாவது போட்டி கடந்த வெள்ளிக் கிழமை வெலிங்டனில் ஆரம்பமானது.

டாஸ் வென்ற நியூசிலாந்து அணி முதலில் இந்திய அணியைத்துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. களமிறங்கிய இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 165 ரன்களில் சுருண்டது.

நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 348 ரன்கள் குவித்து 183 ரன்களால் முன்னிலையில் காணப்பட்டது.

இந்த நிலையில் தனது 2ஆவது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி போட்டி தொடங்கியது முதலே நியூசிலாந்து அணியின் பந்துவீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்தினர். இந்திய வீரர்களின் விக்கெட்டுகளை அடுத்தடுத்து வீழ்த்தினர். இதனால் இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்சில் 191 ரன்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன் மூலம் நியூசிலாந்து அணியை விட இரண்டாவது இன்னிங்சில் வெறும் 8 ரன்கள் மட்டுமே இந்திய அணி முன்னிலை பெற்றிருந்தது. சிறப்பாக பந்துவீசிய நியூசிலாந்து அணியின் பந்து வீச்சாளர் சவுத்தி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து, 9 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலகு இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணி 1.4 ஓவரிலேயே வெற்றி இலக்கை எட்டி 10 விக்கெட்டுக்களால் இமாலய வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் சிறப்பாக பந்து வீசிய நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் டிம் சவுத்தி ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார். இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1:0 என்ற கணக்கில் நியூசிலாந்து அணி முன்னிலையில் உள்ளது.

# ரொனால்டோ 1,000

போர்த்துக்கல் நாட்டின் கால்பந்தாட்ட நட்சத்திரம் கிறிஸ்ரியானோ ரொனால்டோ ஆயிரம் ஆட்டங்களில் களமிறங்கிச் சாதனை படைத்துள்ளார்.

தேசிய அணி. கழகங்கள் என்று ஒட்டுமொத்தமாக இந்தப் பெரும் அடைவை எட்டியுள்ளார் ரொனால்டோ.

மன்செஸ்டர் யுனைற்ரெட். ரியல் மட்ரிட் கழகங்களுக்காக ஏற்கனவே விளையாடியிருந்த ரொனால்டோ. தற்போது இத்தாலியின் யுவென்டஸுக்காக விளையாடி வருகின்றார். ஆயிரம் ஆட்டங்களில் விளையாடியுள்ள ரொனால்டோ இது வரையில் 724 கோல்களைப் பதிவுசெய்துள்ளார்.

‘பயிற்சியாளர்கள். சக வீரர்கள் இல்லாமல் இந்தச் சாதனையை எட்ட இயலாது.




அவர்களுக்கு நன்றி சொல்லியாக வேண்டும். என்னுடைய கால்பந்து வாழ்க்கையில் இது சிறப்பானது’ என்று ரொனால்டோ தெரிவித்தார். (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.